ஸ்ரீ:

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம்

(ஸ்ரீச்யாமலாதண்டகம் முதலியபதிமூன்றுஸ்தோத்ரங்கள் அடங்கியது)

அம்பிகா பக்தர்கள் எழுதிய தமிழ் உரையுடனும்

அட்வகேட் தர்மரக்ஷாமணி

கே. பாலஸுப்ரம்மண்ய அய்யர், B.A., B.L.

எழுதிய முன்னுரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய திவ்விய ஸ்ரீமுகத்துடனும்

கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் வீதி :: கும்பகோணம்

பதிப்புரிமை] ஜூலை 1944 [விலை அணா 12

श्रीकामकोटिग्रन्थावलिः ०१२०

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वराय नमः ॥

॥ श्रीदेवीस्तोत्ररत्नाकरः ॥

श्रीश्यामलादण्डकादि त्रयोदशस्तोत्रात्मकः

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीकामकोटिपीठाधीश्वर
श्रीजगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासितः

श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशितम्
५७, पश्चिम डबीर् वीथी, कुम्भघोणम्.

स्वाम्यं कोशस्थानस्यैव] 1944 [मूल्यम् द्वादशकलाः



ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

श्रीः

मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पाद-
प्रतिष्ठित श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

श्रीकामकोटिकोशस्थाने योऽयमिदानीं त्रयोदशतम उद्गमः त्रयोदशगुच्छकमेलनात्मकः ललितोऽपि गभीरः पण्डितैरपि शीलनीयः तत्तद्भक्तजनप्रार्थिताप्रार्थितफलप्रदः कदाचिदानन्द-पारवश्यापादकः कुहचिन्मन्त्रतत्त्वगहनः कुत्रचिद्रसिकलोक-चेतोहरः दूरीकृतदुःखसन्तानः सर्वत्रानुस्यूतचित्तशान्तिः सर्वस्यापि भक्तलोकस्य भगवतीपादपीठम् आशु प्राप्तुमुद्घाटित इव राजमार्गो राजतेतराम् ।

आशास्महे श्रीदेवीस्तुतिपूरितोऽयं ग्रन्थः साक्षात्कृतब्रह्मतत्त्वानां श्रीभगवत्पादाचार्याणां साक्षात्कृतवाङ्मयतत्त्वस्य श्रीकालिदासमहाकवेश्च यद्वाक्सौरभं तन्मेदुरः द्रविडभाषानुवादतात्पर्यप्रकाशसहितः गैर्वाणवाणीव्युत्पत्तिमतामन्येषां च भगवतीकटाक्षेण चिरोपकाराय भवितेति ।

विजययात्रास्थानम्,
काट्टुप्पळ्ळि,
पोन्नेरि.
20-6-44.

नारायणस्मृतिः

ஸ்ரீ:

|| ஸ்ரீ முகம் ||

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யவர்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களினல் பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வரர்களான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேக ரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப் படுகிறது.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் பதின்மூன்ருவது புத்தக மாயும் பதின்மூன்று பூங்கொத்துக்கள் அமையப்பெற்றதும், எளிய நடையாயினும் ஆழ்ந்த கருத்துகளையுடையதாயும், பண்டிதர்களா லேயும் பரிசிலனை செய்யத் தக்கதாயும், பக்த கோடிகள் விரும்பிய பலங்களைக் கொடுப்பதுடன் அவர்கள் அபேக்ஷியாமலே பலத்தைக் கொடுக்கவல்லதாயும், (படிக்குமவர்களை) ஆங்காங்கு ஆனந்த பரவச மாக்கக்கூடியதும், சில இடங்களில் மந்திரத்தின் உண்மைகளால் தெரிந்துகொள்ளவரிதாயும், சிலவற்றில் ரஸிக உலகத்தின் மனதைக் கவரச்செய்வதாயும், துக்கங்கள் துடர்ச்சியை விலக்குமதாயும், எங்கும் நிரந்தரமாக மனதுக்கு சாந்தியைத் தரவல்லதாயும் உள்ள இந்த வெளியீடு பக்தஉலகமெல்லாம் தேவியின் பாதகமலத்தை சீக்ரமாகவே நாடுவதற்கு திறந்துவைத்த ராஜமார்க்கம்போல் சிறந்து விளங்குகிறது.

பரப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்தவர்களான ஸ்ரீ பகவத் பாதர் களுடையவும், வாங்மய தத்வத்தை (ஸ்ரஸவதியை) ஸாக்ஷாத்கரித்த மஹாகவி ஸ்ரீ காளிதாஸருடையவும் சொல்மணம் பொருந்தியும், தேவி யின் ஸ்தோத்ரங்கள் நிரம்பியதும், தமிழ்மொழி பெயர்ப்புடனும், தாத்பர்யத்துடனும், கூடிய இக்ரந்தம், ஸம்ஸ்கிருதம் பயின்றவர் களுக்கும், மற்றவர்களுக்கும், தேவியினருளால் நீண்டகாலம் பயன் படுமாறு ஆசீர்வதிக்கின்ரேம்.

விஜய யாத்ராஸ்தானம்,
காட்டுப்பளி கிராமம்,
பொன்னேரி தாலூக்கா,
20—6—;44.

நாராயண ஸ்ம்ருதி:

சென்னை, அட்வொகேட் தர்மரக்ஷாமணி

ஸ்ரீ கி. பாலஸுப்ரமண்ய அய்யர் அவர்கள்

எழுதிய

முன்னுரை

ஸ்ரீ காமகோடி கோசஸ்தான புஸ்தக வரிசையில் பதிமூன்றுவது பதிப்பாக 'ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம்' என்ற அழகான பெயருடன் இப் புஸ்தகம் அச்சிட்டு பதவுரை மொழி பெயர்ப்புடன் வெளிவருவது நமக்கு மிகுந்த மனமகிழ்ச்சியைத் தருகிறது. ஏற்கனவே, ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலான ஐந்து தேவீ ஸ்தோத்திரங்கள் அடங்கிய புஸ்தகம் கோசஸ்தான புஸ்தகத் தொகுதியில் பத்தாவதாக வெளியிடப்பட்டிருப்பதை பக்த கோடிகள் நன்கறிவார்கள். இப்பொழுது அந்த ஐந்து ஸ்தோத்திரங்களுடன் ஆனந்தலஹரீ, மீனாக்ஷீ ஸ்தோத்திரம், திரிபுரஸுந்தரீ ஸ்தோத்திரம், அன்னபூர்ணாஷ்டகம், அம்பா பஞ்சரத்தினம், கனகதாராஸ்தவம், சீதளாஷ்டகம், காமாக்ஷீ ஸ்தோத்திரம் ஆக இவை எட்டும் சேர்த்து பதிமூன்று ஸ்தோத்திரங்கள் அடங்கியது இப் புஸ்தகம். இவைகளில் தேவீ பக்தர்களுக்குள் முதலான சங்கர பகவத்பாதர்களால் அருளிச்செய்யப்பட்ட ஸ்தோத்திரங்கள் ஆனந்தலஹரீ, கனகதாராஸ்தவம், அன்னபூர்ணாஷ்டகம் என்னும் பெயருள்ளவைகள். இந்த அழகான தேவீ ஸ்தோத்திரங்களும் காலையில் தேவீ ஸ்மரணம் செய்கிற பக்தர்களுக்கு கைகண்ட பலனைத் தரக் கூடியவைகள். ஆனந்தலஹரீ ஸ்தோத்திரத்தின் முடிவில் எவன் தேவியை தடாகத்தில் வஸந்த காலத்தில் ஸகிகளோடு நீர் விளையாட்டு செய்வதாக த்யானம் செய்கிறானோ அந்த பக்தன் பல நாட்களாக விலகாத ஸம்ஸாரம் என்கிற ஜ்வரம் நீங்கி நித்ய ஸுகத்தை அடைவான் என்று நமது பரமாச்சாரியாள் உறுதிமொழி கூறுகிறார்கள். மீனாக்ஷீ

ஸ்தோத்திரத்தை காலையில் எவன் பக்தியுடன் பாராயணம் செய்கிறானோ அவனுக்கு அஷ்ட ஐச்வர்யமும் சதாவதானம் ஒரே க்ஷணத்தில் செய்யும்படியான சக்தியும் தேவி அளிக்கிறாளென்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்னபூர்ணாம்பிகையை த்யானம்செய்கிறவனுக்கு ஹ்ருதயம்விகாஸத்தை அடைந்து அன்பு நிறைந்து உலகம் முழுவதும் தன் ஊராக பாவிக்கும் தன்மையை அடைவான் என்பதில் ஐயமில்லை.

"माता च पार्वती देवी पिता देवो महेश्वरः।
बान्धवाः शिवभक्ताश्च स्वदेशो भुवनत्रयम्॥"

சுகாதிகளைப்போல் இந்த மனப் பான்மையை அடைந்த மஹாத்மாக்கள் ஸர்வபூத ஹிருதயர்களென்று ஸ்ரீமத் பாகவதத்தில் கொண்டாடப்படுகிறார்கள். இவர்கள்தான் ஜீவன் முக்தர்களென்று உபநிஷத்துக்கள் மெச்சுகின்றன. மன முருகி உட்கசிவுடன் தேவீ ஸ்தோத்திரங்களைப் பாராயணம் செய்து பாடி கண்ணீர் சொரியும் பக்தர்கள் இந்த ஜீவன்முக்தநிலையை அடைவார்கள் என்பது திண்ணம். இதுதான் நமது ஹிந்து மதத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த ஸ்தோத்திரங்களின் இறுதியில் காமாக்ஷி ஸ்தோத்திரம் அமைந்திருப்பது காமகோடி கோசஸ்தான புஸ்தகத்திற்கு ரொம்பவும் பொருத்தமாகும்.

ஆகையால் இந்த ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரத்தை அச்சிட்டு வெளியிட்டது பாரத தேசத்து மாந்தர்களுக்கும் நம் ஸனாதனதர்மத்திற்கும் ஒரு பெரும் கைங்கர்யமாகும். இந்த கைங்கர்யம் செய்தவர்களுக்கு தேவியின் பூர்ண அநுக்கிரஹம் கிடைக்குமென்பது நிச்சயம். பக்தர்கள் அனைவரும் இந்த ஸ்தோத்திரங்களனைத்தும் படித்து இன்புறுவாராக.

"ஆச்ரமம்",
லஸ், மைலாப்பூர்.
30—6—'44.

கி. பாலஸுப்பிரமணிய அய்யர்

ஸ்ரீ:

ஸ்ரீ குருப்யோ நம:

இப் புத்தகத்தில் ஒன்று முதல் ஐந்து ஸ்தோத்ரங்கள் இக் கோசஸ்தானத்தில் பத்தாவது வெளியீடாக ஏற்கனவே வெளிவந்த விஷயம் பக்தகோடிகளுக்கு தெரிந்ததே. இப்போது 6 முதல் 13 வரையிலுள்ள ஸ்தோத்ரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த 6 முதல் 13 வரையிலுள்ள ஸ்தோத்ரங்களுக்கு ஸ்ரீ மீமாம்ஸா பண்டிதர் K. பாலஸுப்ரமண்ய சாஸ்திரி, ஸாஹித்ய வேதாந்த சிரோமணி S. ராஜகோபால சாஸ்திரி இவ்விருவரும் தமிழில் அனுவாதம் எழுதி ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்துக்கு உதவி புரிந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

.5—7—44.

॥ श्रीः ॥

॥ विषयसूचिका ॥

பொருள் அடக்கம்.

			பக்கம்.
1.	श्रीश्यामलादण्डकम्	(ஸ்ரீஶ்யாமலா தண்டகம்)	1
2.	श्री नवरत्नमाला	(ஸ்ரீ நவரத்னமாலா)	19
3.	श्री मन्त्रमातृकापुष्पमालास्तवः	(ஸ்ரீ மந்த்ரமாத்ருகாபுஷ்பமாலா ஸ்தவம்)	24
4.	श्रीराजराजेश्वर्यष्टकम्	(ஸ்ரீ ராஜராஜேஶ்வர்யஷ்டகம்)	36
5.	श्री अम्बाष्टकम्	(ஸ்ரீ அம்பாஷ்டகம்)	42
6.	श्री आनन्दलहरी	(ஸ்ரீ ஆநந்தலஹரீ)	53
7.	श्रीमीनाक्षीस्तोत्रम्	(ஸ்ரீ மீநாக்ஷீ ஸ்தோத்ரம்)	73
8.	श्रीत्रिपुरसुन्दरी स्तोत्रम्	(ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்)	84
9.	श्री अन्नपूर्णाष्टकम्	(ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம்)	94
10.	श्री अम्बापञ्चरत्नम्	(ஸ்ரீ அம்பாபஞ்சரத்னம்)	103
11.	श्री कनकधारास्तवः	(ஸ்ரீ கனகதாராஸ்தவம்)	111
12.	श्री शीतलाष्टकम्	(ஸ்ரீ சீதலாஷ்டகம்)	127
13.	श्री कामाक्षीस्तोत्रम्	(ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்ரம்)	136

॥ श्रीः ॥

॥ श्री श्यामलादण्डकम् ॥

माणिक्यवीणामुपलालयन्तीं मदालसां मञ्जुलवाग्विलासाम् ।
माहेन्द्रनीलद्युतिकोमलाङ्गीं मातङ्गकन्यां मनसा स्मरामि ॥ १ ॥

மாணிக்யவீணாமுபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்ஜுலவாக்விலாஸாம் |
மாஹேந்த்ரநீலத்யுதிகோமலாங்கீம்
மாதங்ககன்யாம் மனஸா ஸ்மராமி ||

மாணிக்கக் கற்களிழைத்த வீணையை (மடியில் வைத்துக்) கொஞ்சுபவளும் (அன்புடன் வாசிப்பவளும்), மதத்தால் சுறுசுறுப்பற்றவளும், இனிய சொல்லெழில் பெற்றவளும், மாஹேந்திர நீலமணியினது போன்ற ஒளிவாய்ந்த மெல்லிய மேனியுடையாளுமான மாதங்க கன்யகையை மனதால் நினைக்கிறேன் (உறுதியுடன் தியானிக்கிறேன்).

चतुर्भुजे चन्द्रकलावतंसे कुचोन्नते कुङ्कुमरागशोणे ।
पुण्ड्रेक्षुपाशाङ्कुशपुष्पबाणहस्ते नमस्ते जगदेकमातः ॥ २ ॥

சதுர்புஜே சந்த்ரகலாவதம்ஸே
குசோந்நதே குங்குமராகசோணே |
புண்ட்ரேக்ஷுபாசாங்குசபுஷ்பபாண-
ஹஸ்தே நமஸ்தே ஜகதேகமாதः ||

நான்கு கைகளுள்ளவளே! சந்த்ரகலையை சிரோபூஷணமாகக் கொண்டவளே! உயர்ந்த கொங்கைகளுள்ளவளே! குங்குமப் பூச்சால் சிவந்தவளே! நாமக்கரும்பு, பாசம், அங்

குசம், மலர்க்கணைகள் இவைகளைக் கரங்களிற் கொண்டவளே! உலகிற்கு ஓர் தாயே! உனக்கு வணக்கம்.

माता मरकतश्यामा मातङ्गी मदशालिनी ।
कुर्यात्कटाक्षं कल्याणी कदम्बवनवासिनी ॥ ३ ॥

மாதா மரகதஶ்யாமா மாதங்கீ மதஶாலினீ ।
குர்யாத் கடாக்ஷம் கல்யாணீ கதம்பவனவாஸினீ ॥

மரகதம் போல் கருத்த நிறத்தினளும், மதங்கரின் பெண்ணும், மதத்தால் விளங்குபவளும், மங்கள ரூபிணியும் கதம்பவனத்தில் உறைபவளுமாகிய (என்) தாய் கடைக் கண்ணால் (என்னை) நோக்கி அருளுவாளாக.

जय मातङ्गतनये जय नीलोत्पलद्युते ।
जय सङ्गीतरसिके जय लीलाशुकप्रिये ॥ ४ ॥

ஜய மாதங்கதனயே ஜய நீலோத்பலத்யுதே ।
ஜய ஸங்கீதரஸிகே ஜய லீலாஶுகப்ரியே ॥

மதங்கரின் புதல்வீ! வெல்க! கருந்தாமரையின் காந்தி பெற்றாய்! வெல்க! இன்னிசை சுவைப்பாய்! வெல்க! (விளையாட்டுக்கான கிளியிடம்) லீலா சுகத்தினிடம் அன்பு கொண்டாய்! வெல்க!

जय जननि, सुधासमुद्रान्तहृद्यन्मणिद्वीपसंरूढबिल्वाटवीमध्यकल्पद्रुमाकल्पकादम्बकान्तारवासप्रिये, कृत्तिवासःप्रिये, सर्वलोकप्रिये!

ஜய ஜனனி, ஸுதாஸமுத்ராந்த-ஹ்ருத்யன்மணித்வீப-ஸம்ரூட பில்வாடவீமத்ய - கல்பத்ருமாகல்பகாதம்ப - காந்தாரவாஸ - ப்ரியே, க்ருத்திவாஸ:ப்ரியே, ஸர்வலோகப்ரியே!

அமுதக் கடலின் நடுவே மனதைக் கவரும் மணித் தீவில் செழித்தோங்கிய வில்வக் காட்டினூடே கல்பக மரங்களை யணியாகக் கொண்ட (கல்பக விருக்ஷங்களோடு கூடிய)

கதம்பவனத்தில் வஸிப்பதில் பிரியமுள்ளவளே! கரித் தோல் போர்த்த சிவனார் காதலியே! எல்லாப் பிராணிக ளிடமும் அன்புகொண்டாளே! தாயே! மேன்மையுடன் உறைவாயாக!

सादरारब्धसङ्गीतसम्भावनासम्भ्रमालोलनीपस्रगाबद्धचूलीसनाथत्रिके, सानुमत्पुत्रिके!

ஸாதராரப்த்யஸங்கீத - ஸம்பாவனாஸம்ப்ரமாலோல-நீபஸ்ர-காபத்த-சூலீஸநாதத்ரிகே, ஸானுமத்புத்ரிகே!

அன்புடன் துவக்கப்பட்ட இன்னிசையை மதிக்கும் ஆர்வத்தினால் சிறிதசைகின்ற கதம்பமாலை சூடிய கூந்தலுடன் கூடிய பிடரியை (கழுத்தின் பின்புறத்தை) யுடையவளே! (அல்லது, கதம்பமாலையணிந்த பின்னலுடன் கூடிய முதுகெலும்பின் அடிப்புறத்தை யுடையாளே!) மலைமகளே!

शेखरीभूतशीतांशुरेखामयूखावलीनद्धसुस्निग्धनीलालकश्रेणिशृङ्गारिते, लोकसम्भाविते!

ஶேகரீபூத-ஶீதாம்ஶுரேகா-மயூகாவலீ-நத்தஸுஸ்-நிக்தநீலாலகஶ்ரேணிஶ்ருங்காரிதே, லோகஸம்பாவிதே!

தலையணியா யமைந்த திங்கட் பிறையின் கதிர்க்கற்றையால் மிக்க எழில்பெற்ற கரிய குழல் வரிசையால் அழகுற்றவளே! உலகோரால் மதிக்கப்படுபவளே! (பூசிக்கப் படுபவளே!)

कामलीलाधनुःसन्निभभ्रूलतापुष्पसन्दोहसन्देहकृल्लोचने, वाक्सुधासेचने!

காம-லீலாதனுஃ ஸந்நிப-ப்ரூலதாபுஷ்பஸந்தோஹஸந்தேஹ-க்ருல்-லோசனே, வாக்ஸுதாஸேசனே!

மன்மதனுடைய கேளிக்கைகளுக்கான வில்லை நிகர்த்த புருவக்கொடியின் மலர்க்கொத்துதானோ என்று ஐயுறத் தக்க விழிகளை (கண்களை) யுடையாளே! சொல்லமுதால் (உனதன்பர்களை) நனைப்பவளே!

(அமுதம்போன்ற அன்புமொழிகளால் அன்பர்களுக்கு அருள் புரிபவள் என்பது கருத்து.)

चारुगोरोचनापङ्ककेलीललामाभिरामे, सुरामे, रमे !

சாருஹோரோசனுபங்க-கேலீலலாமாஹிராமே, ஸுராமே, ரமே!

அழகிய கோரோசனைச் சேற்றால் (கலவையால்) இட்ட விளையாட்டு (ரதிகேளிக்கை)ப் பொட்டால் அழகியவளே! (மனதை) மிகவும் களிப்புறச் செய்பவளே! லக்ஷ்மியே (செல்வத்திற்கு உறையுளே!)

प्रोल्लसद्वालिकामौक्तिकश्रेणिकाचन्द्रिकामण्डलोद्भासिगण्डस्थल - न्यस्तकस्तूरिकापत्त्ररेखासमुद्भूतसौरभ्यसम्भ्रान्तभृङ्गाङ्गनागीतसान्द्री - भवन्मन्द्रतन्त्रीस्वरे, सुस्वरे, भास्वरे !

ப்ரோல்லஸத்வாலிகாமௌக்திகஸ்ரேணிகா - சந்த்ரிகாமண்டல - லோத்ஹாஸி - ஹண்டஸ்தலந்யஸ்த - கஸ்தூரிகாபத்ரரேகா-ஸமுத் - ஹூதஸௌரப்ய-ஸம்ப்ராந்தப்ருங்காங்கனாகீதஸாந்த்ரீ ஹவன் - மந்த்ரதந்த்ரீஸ்வரே, ஸுஸ்வரே, ஹாஸ்வரே!

நன்கு ஒளிரும் வாளி என்ற கர்ணாபரணத்திலுள்ள முத்து வரிசைகளின் ஒளிக்கற்றையால் தெள்ளென விளங்கும் கன்னப்புறங்களில் கஸ்தூரியால் இடப்பட்ட மகரிகா பத்திரங்களிலிருந்து (கஸ்தூரியால் இடப்பட்ட சித்திரங்களிலிருந்து) எழுந்த மணத்தில் மயங்கிய பெண் வண்டுகளின் இசையுடன் (ரீங்காரத்துடன்) சேர்ந்த யாழின் மந்த்ர ஸ்வரத்தோடு கூடியவளே! இனிய குரல் வாய்ந்தவளே! விளங்குபவளே!

वल्लकीवादनप्रक्रियालोलतालीदलाबद्धताटङ्कभूषाविशेषान्विते, सिद्धसम्मानिते !

வல்லகிவாதனப்ரக்ரியா - லோலதாலீதலாபத்திய - தாடங்க - பூஷா - விஶேஷான்விதே, ஸித்தஸம்மானிதே !

யாழொலிக்குங்கால் அசையும், ஓலையாலான தாடங்க மென்ற சிறந்த கர்ணாபரணத்துடன் கூடியவளே! சித்தர்களால் நன்கு பூசிக்கப்பட்டவளே !

दिव्यहालामदोद्वेलहेलालसच्चक्षुरान्दोलन-श्रीसमाक्षिप्तकर्णैकनी - लोत्पले, पूरिताशेषलोकाभिवाञ्छाफले, श्रीफले !

திவ்யஹாலாமதோத்வேல - ஹேலாலஸச்சக்ஷுராந்தோலனஶ்ரீ-ஸமாக்ஷிப்தகர்ணைகநீலோத்பலே, பூரிதாஶேஷலோகாபிவாஞ்ச்ஹா-பலே, ஶ்ரீபலே !

சிறந்த லாகிரி மதத்தின் காரணமாக மிகுதியான விளையாட்டுக்களால் (கேளிக்கைகளால்) ஒளிவீசும் கண்களின் அசைவாலேற்படும் காந்தியால் செவியிலணியும் சிறந்த குவளை மலர்களைப் பழித்தவளே! (மது மயக்கத்தால் சுழலும் விழிகளின் ஒளியழகு காதிலணியும் குவளை மலரின் அழகை வென்று நின்றது.) எல்லா உலகத்தவருடைய விருப்பங்களையும் நிறைவேற்றியவளே! செல்வத்தை (அல்லது உடலழகை) பயனாக அளிப்பவளே !

स्वेदबिन्दूल्लसत्फाललावण्यनिःष्यन्दसन्दोहसन्देहकृन्नासिकामौ - क्तिके, सर्वविश्वात्मिके, कालिके !

ஸ்வேதபிந்தூல்லஸத்பால-லாவண்யநிஷ்யந்தஸந்தோஹ-ஸந்தேஹக்ருந்-நாஸிகாமௌக்திகே, ஸர்வவிஶ்வாத்மிகே, காலிகே !

வியர்வைத் துளிகளால் விளங்கும் நெற்றியினது எழிற் பொழிவின் திவலைகளோவென ஐயந்தரும் நாஸாபரணத்

தின் முத்துக்களை யுடையவளே! எல்லா மந்த்ரங்களின் உருவினளே! கருத்த மேனியளே!

मुग्धमन्दस्मितोदारवक्त्रस्फुरत्पूगकर्पूरताम्बूलखण्डोत्करे, ज्ञान-मुद्राकरे, सर्वसम्पत्करे, पद्मभास्वत्करे!

முக்தமந்தஸ்மிதோதாரவக்த்ர - ஸ்புரத்பூககர்ப்பூரதாம்-பூல - கண்டோத்கரே, ஜ்ஞானமுத்ராகரே, ஸர்வஸம்பத்கரே, பத்ம - பாஸ்வத்கரே!

அழகிய புன்சிரிப்பால் சிறப்புற்ற திருவாயில் விளங்கும் பச்சைக் கர்ப்பூரத்துடன் கூடிய வெற்றிலை பாக்கை தரிக்கின்றவளே! சின்முத்ரையுடன் கூடிய கரத்தினளே! எல்லாச் செல்வங்களையும் விளைவிப்பவளே! தாமரையென வொளிரும் திருக்கரத்தினளே!

कुन्दपुष्पद्युतिस्निग्धदन्तावलीनिर्मलालोककल्लोलसम्मेलनस्मेर - शोणाधरे, चारुवीणाधरे, पक्वबिम्बाधरे ॥ १ ॥

குந்தபுஷ்பத்யுதி- ஸ்நிக்தந்தாவலீ - நிர்மலாலோககல்லோல - ஸம்மேலனஸ்மேரஶோணாதரே,சாருவீணாதரே,பக்வபிம்பாதரே!

முல்லை மலர்கள்போல் ஒளிகாந்தும் அழகிய பற்களின் மாசற்ற ஒளி அலைகளின் சேர்க்கையால் அழகுற்ற சிவந்த கீழுதட்டை யுடையவளே! அழகிய வீணையைத் தாங்குபவளே! பழுத்த கோவைப் பழம்போன்ற உதட்டை உடையாளே!

सुललितनवयौवनारम्भचन्द्रोदयोद्वेललावण्यदुग्धार्णवाविर्भवत्क-म्बुबिब्बोकभृत्कन्धरे, सत्कलामन्दिरे, मन्थरे!

ஸுலலித-நவயௌவனாரம்ப-சந்த்ரோதயோத்வேல-லாவண்ய-துக்தார்ணவாவிர்பவத் - கம்புபிப்போகப்ருத்கந்தரே, ஸத்கலாமந்திரே, மந்தரே!

மிக்க அழகுவாய்ந்த புதிய வாலிபத்தின் தொடக்கமாகிற சந்திரோதயத்தால் கரைபுரண்ட அழகாகிய பாற்கடலிலிருந்து தோன்றிய முப்புரிச்சங்கின் எழிலைப்பெற்ற கழுத்தை யுடையவளே! நற்கலைகளுக்கு உறைவிடமே! மெல்லியளே!

दिव्यरत्नप्रभाबन्धुरच्छन्नहारादिभूषासमुद्योतमानानवद्यांशुशोभे, (द्याङ्गशोभे) शुभे!

திவ்யரத்னப்ரபா-பந்துரச்சன்னஹாராதிபூஷாஸமுத்யோதமானானவத்யாம்சுசோபே! (த்யாங்கசோபே) சுபே!

தெய்விகமான மணிகளின் ஒளியால் நன்கு மறைந்துள்ள முத்துமாலை முதலிய அணிகளால் ஒளிருகின்ற குற்றமற்ற உடலழகு உடையவளே! நன்மை பயப்பவளே!

रत्नकेयूररश्मिच्छटापल्लवप्रोल्लसद्दोर्लताराजिते, योगिभिः पूजिते!

ரத்னகேயூர-ரஶ்மிச்ஹடாபல்லவ-ப்ரோல்லஸத்தோர்லதாராஜிதே, யோகிபிஃ பூஜிதே!

மணிகள் பொருந்திய தோள்வளைகளின் கதிர்க்கற்றையாகிய தளிர்களால் விளக்கம்பெற்ற கைகளாகும் கொடிகளால் பிரகாசிப்பவளே! யோகிகளால் அர்ச்சிக்கப்பட்டவளே!

(கைகள் கொடிபோன்றவை. தோள்வளைகளின் ஒளிகள் கைகளாகிய கொடிகளின் தளிர்கள் பான்றவை.)

विश्वदिङ्मण्डलव्यापिमाणिक्यतेजःस्फुरत्कङ्कणालङ्कृते, विभ्रमालङ्कृते, साधकैः सत्कृते!

விஶ்வதிங்மண்டலவ்யாபி - மாணிக்யதேஜஃ-ஸ்புரத்-கங்கணாலங்க்ருதே, விப்ரமாலங்க்ருதே, ஸாதகைஃ ஸத்க்ருதே!

எல்லா திக்குக் கூட்டத்திலும் ஒளி பரப்பும் மாணிக்க வளையல்களால் அழகியவளே! (அழகு செய்யப்பட்டவளே!) விப்ரமத்தால் எழில் வாய்ந்தவளே! ஸாதுக்களால் அர்ச்சிக்கப்பட்டவளே!

குறிப்பு: (விப்ரமம் - நகை இடம் விட்டுப் பெயர்ந்திருத்தல், அல்லது, பார்ப்பவர் மயங்கும் தன்மை.)

वासरारम्भवेलासमुज्जृम्भमाणारविन्दप्रतिद्वन्द्विपाणिद्वये, सन्ततोद्यद्दये, अद्वये!

வாஸராரம்ஹவேலாஸமுஜ்ஜ்ரும்ஹமாணாரவிந்தப்ரதித்வந்த்வி - பாணித்வயே, ஸந்ததோத்யத்தயே, அத்வயே!

பகலின் துவக்கத்தில் மலரும் தாமரையை எதிர்க்கும் (விரோதிக்கும்) இரு கரங்களை யுடையவளே! எப்பொழுதும், எழுகின்ற கருணையுள்ளவளே! இரண்டற்றவளே! (ஏகமாயுள்ளவளே!)

दिव्यरत्नोर्मिकादीधितिस्तोमसन्ध्यायमानाङ्गुलीपल्लवोद्यन्नखेन्दु - प्रभामण्डले, सन्नताखण्डले, चित्प्रभामण्डले, प्रोल्लसत्कुण्डले!

திவ்யரத்னோர்மிகாதீதிஸ்தோம - ஸந்த்யாயமானாங்குலீ - பல்லவோத்யந்நகேந்து - ப்ரஹாமண்டலே, ஸந்நதாகண்டலே, சித்ப்ரஹாமண்டலே, ப்ரோல்லஸத்குண்டலே!

சிறந்த ரத்ன மோதிரங்களின் ஒளிக் கூட்டத்தால் சந்தியாகாலம் போன்ற தளிர்போல் சிவந்த விரல்களில் கிளம்பிய நகங்களாகிற திங்களின் ஒளிவட்டத்தோடு கூடியவளே! இந்திரனால் நன்கு வணங்கப்பட்டவளே! ஞானப்பிழம்பே! விசேஷமாய் விளங்கும் குண்டலங் கொண்டவளே!

तारकाराजिनीकाशहारावलिस्मेरचारुस्तनाभोग - भारानमन्मध्यवल्लीवलिच्छेदवीचीसमुल्लाससन्दर्शिताकारसौन्दर्यरत्नाकरे, वल्लकीभृत्करे, किङ्करश्रीकरे!

தாரகாராஜினிகாஶ - ஹாராவலிஸ்மேர - சாருஸ்தனாபோ ஹ - ஹாராநமன்மத்யவல்லீவலிச்சேத - வீசீஸமுல்லாஸஸந்தர்ஶிதா - காரஸௌந்தர்யரத்னாகரே, வல்லகீப்ருத்கரே, கிங்கரஶ்ரீகரே!

நக்ஷத்திர வரிசை போன்ற முத்தாரங்களின் தொகுதிகளால் விளங்கும் அழகாய பரந்த கொங்கைகளின் பளுவால் சிறிது வளைந்த கொடிபோன்ற இடையில் உள்ள மூன்று மடிப்புகளாகிற அலைகளின் தோற்றத்தால் தன்னுருவை வெளிப்படுத்தும் எழிலாகும் சமுத்திரத்தை உடையவளே! யாழ்தாங்கிய கையாளே! தாஸர்களுக்குச் செல்வத்தை யளிப்பவளே!

हेमकुम्भोपमोत्तुङ्गवक्षोजभारावनम्रे, त्रिलोकावनम्रे!

ஹேமகும்போபமோத்துங்க - வக்ஷோஜ - பாராவநம்ரே, த்ரி-லோகாவநம்ரே!

தங்கக் குடங்களென உயர்ந்த ஸ்தனங்களின் பாரத்தால் சற்றுக் குனிந்திருப்பவளே! மூவுலகோராலும் வணங்கப்படுகிறவளே!

लसद्वृत्तगम्भीरनाभीसरस्तीर-शैवालशङ्काकर-श्यामरोमावलीभूषणे, मञ्जुसम्भाषणे!

லஸத்வ்ருத்தகம்பீர- நாபீஸரஸ்தீரஶைவாலஶங்காகரஶ்யாம-ரோமாவலீபூஷணே, மஞ்ஜுஸம்பாஷணே!

விளங்கும் வட்டமான ஆழ்ந்த கொப்பூழ் எனும் குளக் கரையிலுள்ள பாசிக்கொத்தோ என்ற சந்தேகத்தை விளைவிக்கும் கரிய ரோம வரிசையை அணியாகக் கொண்டவளே! மென்மொழியினளே!

चारुशिञ्जत्कटीसूत्रनिर्भर्त्सितानङ्गलीलाधनुःशिञ्जिनीडम्बरे, दिव्यरत्नाम्बरे!

சாருஶிஞ்ஜத்கடீஸூத்ர-நிர்பர்த்ஸிதானங்கலீலாதனுஃஶிஞ்ஜி-னீடம்பரே, திவ்யரத்னாம்பரே!

இனிது ஒலிக்கும் அரைஞாணுல் மன்மதனது அழகாய வில்லின் நாணொலியின் பெருமையை அதட்டுகின்றவளே ! (பழிப்பவளே !) சிறந்த ரத்னங்க ளமைந்த வஸ்திரமணிந்தவளே !

पद्मरागोल्लसन्मेखलाभास्वरश्रोणिशोभाजितस्वर्णभूभृत्तले, चन्द्रिकाशीतले ॥ २ ॥

பத்மராகோல்லஸன் - மேகலாபாஸ்வர - ஶ்ரோணிஶோபா-ஜித-ஸ்வர்ணபூப்ருத்தலே, சந்த்ரிகாஶீதலே ॥ ௨ ॥

பதுமராகக் கற்களால் ஒளி யுமிழும் மேகலையால் பிரகாசிக்கின்ற நிதம்பத்தால் பொன் மயமான மேருவரையின் தாழ்வரையை வென்றவளே ! நிலாவெனக் குளிர்ந்தவளே !

विकसितनवकिंशुकाताम्रदिव्यांशुकच्छन्नचारूरुशोभापराभूत - सिन्दूरशोणायमानेन्द्रमातङ्गहस्तार्गले, वैभवानर्गले, श्यामले !

விகஸிதநவகிம்ஶுகாதாம்ர - திவ்யாம்ஶுகச்சன்ன : சாரூரு - ஶோபாபராபூத - ஸிந்தூரஶோணாயமானேந்த்ரமாதங்கஹஸ்-தார்கலே, வைபவானர்கலே, ஶ்யாமலே !

மலர்ந்த புதிய பலாச புஷ்பமெனச் சிவந்த ஓர் மெல்லிய பட்டால் மறைந்திருக்கும் அழகுற்ற தொடைகளின் ஒளியால் ஸிந்தூரத்தால் சிவந்திருக்கும் ஐராவதத்தின் சிறந்த துதிக்கையை அவமதித்தவளே ! (தடையற்ற பெருமையளே !) சியாமளையே !

कोमलस्निग्धनीलोत्पलोत्पादितानङ्गतूणीरशङ्काकरोद्दामजङ्घालते, चारुलीलागते !

கோமலஸ்நிக்த்ய-நீலோத்பலோத்பாதிதானங்கதூணீர - ஶங்கா-கரோத்தாமஜங்காலதே, சாருலீலாகதே !

மனதைக் கவரும் மெல்லிய குவளைகளாலான மன்மதனது தூணியோ என்ற எண்ணத்தை யளிக்கும் சிறந்த,

தோற்றமுள்ள அழகிய கணைக்கால்களை யுடையவளே! அழகாய விளையாட்டு நடையினளே!

नम्रदिक्पालसीमन्तिनीकुन्तलस्निग्धनीलप्रभापुञ्जसञ्जातदूर्वाङ्कुरा-शङ्कसारङ्गसंयोगरिङ्खन्नखेन्दूज्ज्वले, प्रोज्ज्वले, निर्मले!

நம்ரதிக்பாலஸீமந்தினீகுந்தலஸ்நிக்த-நீலப்ரபாபுஞ்ஜஸஞ்ஜாத தூர்வாங்குராஶங்கஸாரங்க - ஸம்யோக - ரிங்கன்நகேந்தூ ஜ்ஜ்வலே, ப்ரோஜ்ஜ்வலே, நிர்மலே!

வணங்குகின்ற திக்பாலர்களின் ஸ்திரீகளுடைய குழல்களின் அழகிய கரிய காந்திக் குவியலால் அருகம்புற்களோ என எண்ணிய மானின் சேர்க்கையுடன் கூடிய நகங்களாகிற திங்களால் ஜ்வலிப்பவளே! விசேஷமாய் விளங்குபவளே! மாசற்றவளே!

प्रह्वदेवेशलक्ष्मीशभूतेशतोयेशवागीशकीनाशदैत्येशयक्षेशवाय्वग्नि-माणिक्यसंघृष्टकोटीरबालातपोद्दामलाक्षारसारुण्यलक्ष्मीगृहीताङ्घ्रिपद्मे सुपद्मे, उमे ॥ ३ ॥

ப்ரஹ்வதேவேஶலக்ஷ்மீஶ - பூதேஶதோயேஶவாகீஶகீநாஶ - தைத்யேஶ - யக்ஷேஶ - வாய்வக்நி-மாணிக்யஸங் - க்ருஷ்ட-கோடீரபாலாதபோத்தாமலாக்ஷாரஸாருண்ய - லக்ஷ்மீ - க்ருஹீதாங்க்ரிபத்மே, ஸுபத்மே, உமே ॥ ௩ ॥

வணங்கும் இந்திரன், விஷ்ணு, சிவன், வருணன், பிரமன், யமன், நிருதி, குபேரன்; வாயு, அக்னி இவர்களுடைய மாணிக்க மணிகளால் இழைக்கப்பட்ட முடிகளின் இளம் வெயிலை மீறிய செம்பஞ்சுக் குழம்பின் செம்மையின் காந்தியைப் பெற்ற திருவடித் தாமரைகளை யுடையவளே! சோபனம் பயக்கும் லக்ஷ்மியே! உமையே!

सुरुचिरनवरत्नपीठस्थिते, सुस्थिते!

ஸுருசிரநவரத்னபீடஸ்திதே, ஸுஸ்திதே!

மிகுந்த எழில் வாய்ந்த நவரத்னங்க ளிழைத்த பீடத்தில் இருப்பவளே! அழகா யமர்ந்தவளே!

रत्नपद्मासने, रत्नसिंहासने, शङ्खपद्मद्वयोपाश्रिते विश्रुते !

ரத்னபத்மாஸனே, ரத்னஸிம்ஹாஸனே, ஶங்கபத்மத்வயோபாஶ்ரிதே விஶ்ருதே!

செந் தாமரையி லிருப்பவளே! ரத்ன மிழைத்த சிங்காதனத்தை யுடையவளே! சங்கநிதி பதுமநிதிகளால் ஸேவிக்கப்பட்டவளே! புகழ் பெற்றவளே!

तत्र विघ्नेशदुर्गावटुक्षेत्रपालैर्युते !

தத்ர விக்னேஶதுர்காவடுக்ஷேத்ரபாலைர்யுதே!

அங்கு விநாயகர், துர்காதேவி, வடுகர், க்ஷேத்ரபாலர் ஆகியவர்களுடன் கூடியவளே!

मत्तमातङ्गकन्यासमूहान्विते !

மத்தமாதங்ககன்யாஸமூஹான்விதே!

மதங்கொண்ட மாதங்க கன்னிகைகளின் கூட்டத்தோடு கூடியவளே!

मञ्जुलामेनकाद्यङ्गनामानिते, भैरवैरष्टभिर्वेष्टिते !

மஞ்ஜுலா - மேனகாத்யங்கநாமானிதே, பைரவைரஷ்டபிர்-வேஷ்டிதே!

மஞ்சுளா, மேனகை முதலாய அழகிய மங்கையரால் கௌரவிக்கப்பட்டவளே! அஷ்ட பைரவர்களால் சூழப்பட்டவளே!

देवि ! वामादिभिः शक्तिभिः सेविते !

தேவி! வாமாதிபிஃ ஶக்திபிஃ ஸேவிதே!

வாமை முதலிய சக்திகளால் ஸேவிக்கப்பட்டவளே! தேவியே!

धात्रि ! लक्ष्म्यादिशक्त्यष्टकैः संयुते !

தா⁴த்ரி! லக்ஷ்ம்யாதி³ஶக்த்யஷ்டகைஃ ஸம்யுதே!

உலகைப் போஷிப்பவளே, லக்ஷ்மீ முதலான எட்டு சக்திகளோடும் கூடியவளே!

मातृकामण्डलैर्मण्डिते !

மாத்ருகாமண்ட³லைர்மண்டி³தே!

மாத்ருகா மண்டலங்களால் அழகியவளே!

यक्षगन्धर्वसिद्धाङ्गनामण्डलैरर्चिते !

யக்ஷக³ந்த⁴ர்வஸித்³தா⁴ங்க³னாமண்ட³லைரர்(ச்)சிதே!

யக்ஷர், கந்தர்வர்கள், சித்தர்கள் இவர்களது மங்கையரின் கூட்டங்களால் பூஜிக்கப்பட்டவளே!

पञ्चबाणात्मिके !

பஞ்சபா³ணாத்மிகே!

பஞ்சபாண (மந்திர) ஸ்வரூபிணியே!

पञ्चबाणेन रत्या च सम्भाविते !

பஞ்சபா³ணேன ரத்யா ச ஸம்பா⁴விதே!

மன்மதனாலும் ரதியாலும் மதிக்கப்பட்டவளே!

प्रीतिभाजा वसन्तेन चानन्दिते !

ப்ரீதிபா⁴ஜா வஸந்தேன சானந்தி³தே!

அன்புற்ற வஸந்தனாலும் சந்தோஷப்படுத்தப்பட்டவளே!

भक्तिभाजां परं श्रेयसे कल्पसे ।

ஹக்திஹாஜாம் பரம் ஸ்ரேயஸே கல்பஸே |

பக்தியுள்ளவர்களுக்கு மிகவும் மேன்மையை விளைவிக்கிறாய்.

योगिनां मानसे द्योतसे (ध्यायसे) ।

யோகினாம் மானஸே த்யோதஸே (த்யாயஸே) |

யோகிகளின் மனதில் பிரகாசிக்கின்றாய். (நினைக்கப்படுகிறாய்).

छन्दसामोजसा भ्राजसे ।

ஹந்தஸாமோஜஸா ஹ்ராஜஸே |

வேதங்களின் வீறு என விளங்குகிறாய்.

गीतविद्याविनोदातितृष्णेन कृष्णेन सम्पूज्यसे ।

கீதவித்யாவினோதாதி-த்ருஷ்ணேன க்ருஷ்ணேன ஸம்பூஜ்யஸே|

கீத வித்யையில் களிப்பதில் அதிக ப்ரேமை கொண்ட கிருஷ்ணனால் நன்கு பூஜிக்கப்படுகிறாய்.

भक्तिमच्चेतसा वेधसा स्तूयसे ।

ஹக்திமச்சேதஸா வேதஸா ஸ்தூயஸே |

பிரமனால் பக்தியுள்ள மனதுடன் துதிக்கப்படுகிறாய்.

विश्वहृद्येन वाद्येन विद्याधरैर्गीयसे ॥ ४ ॥

விஸ்வஹ்ருத்யேன வாத்யேன வித்யாதரைர் கீயஸே || ௪ ||

வித்யாதரர்களால், உலகைக் களிக்கச் செய்யும் வாத்யங்கள் கொண்டு பாடப்படுகிறாய் !

श्रवणहरणदक्षिणक्वाणया वीणया किन्नरैर्गीयसे ।

ஸ்ரவணஹரணதக்ஷிணக்வாணயா வீணயா கின்னரைர் கீயஸே |

கின்னரர்களால் செவியை அள்ளும் த்வனியுள்ள வீணையால் பாடப்படுகிறாய்.

यक्षगन्धर्वसिद्धाङ्गनामण्डलैरर्च्यसे ।

யக்ஷ ஹந்யுர்வஸித்தாங்கனமண்டலைரர்ச்யஸே !

யக்ஷ, கந்தர்வ, ஸித்தர்களின் நங்கையர்களால் அர்ச்சிக்கப்படுகிறாய்.

सर्वसौभाग्यवाञ्छावतीभिर्वधूभिः सुराणां समाराध्यसे ।

ஸர்வஸௌபாக்ய - வாஞ்சாவதீபிர்வதூபிஃ ஸுராணாம் ஸமாராத்யஸே |

எல்லா சுபங்களையும் அடைய விருப்பங் கொண்ட தேவ ஸ்திரீகளால் நன்கு திருப்தி செய்விக்கப்படுகிறாய்.

सर्वविद्याविशेषात्मकं चाटुगाथासमुच्चारणं कण्ठमूलोल्लसद्वर्ण-राजित्रयं कोमलश्यामलोदारपक्षद्वयं तुण्डशोभातिदूरीभवत्किंशुकं तं शुकं लालयन्ती परिक्रीडसे ।

ஸர்வவித்யாவிஶேஷாத்மகம் சாடுகாதாஸமுச்சாரணம் கண்டமூலோல்லஸத்வர்ணராஜித்ரயம் கோமலஶ்யாமலோதாரபக்ஷத்வயம் துண்டஶோபாதிதூரீபவத்கிம்ஶுகம் தம் ஶுகம் லாலயந்தீ பரிக்ரீடஸே |

எல்லாச் சிறந்த வித்யாரூபியாயும், அழகிய காதைகளை நன்கு சொல்லக்கூடியதும் கழுத்தினடிப் பிரதேசத்தில் மூன்று வர்ணக்கோடுகள் உள்ளதும் மிருதுவான பசுமை வாய்ந்த கம்பீரமான இரண்டு இறக்கைகளை யுடையதும் அலகின் அழகால் புரச மலரின் அழகைப் பழிப்பதுமான கிளியைக் கொஞ்சி விளையாடுகிறாய்.

पाणिपद्मद्वयेनाक्षमालामपि स्फाटिकीं ज्ञानसारात्मकं पुस्तकं चापरेणाङ्कुशं पाशमाबिभ्रती येन सञ्चिन्त्यसे चेतसा तस्य वक्त्रान्तराद्गद्यपद्यात्मिका भारती निःसरेत् ।

பாணிபத்மத்வயேனாக்ஷமாலாமபி ஸ்஫ாடிகீம் ஜ்ஞானஸாராத்மகம் புஸ்தகம் சாபரேணாங்குஶம் பாஶமாபிஹ்ரதீ யேன ஸஞ்சிந்த்யஸே, சேதஸா தஸ்ய வக்த்ராந்தராத் கத்யபத்யாத்மிகா ஹாரதீ நிஃஸரேத் |

தாமரை போன்ற இரண்டு கைகளிலும் ஸ்படிக மணிகளாலான ஜபமாலையையும், ஞானஸாரரூபமான புத்தகத்தையும், மற்ற இரண்டு கைகளில் அங்குசத்தையும், பாசத்தையும் தரிப்பவளாக எவனால் மனதால் தியானிக்கப்படுகிறாயோ அவனது முகத்திலிருந்து கத்ய, பத்ய (வசனம், செய்யுள்) ரூபமான வாக்கு வெளிக்கிளம்பும்.

येन वा यावकाभाकृतिर्भाव्यसे तस्य वश्या भवन्ति स्त्रियः पूरुषाः ।

யேன வா யாவகாஹாக்ருதிர்ஹாவ்யஸே, தஸ்ய வஶ்யா ஹவந்தி ஸ்த்ரியஃ பூருஷாஃ |

செம்பஞ்சு நிறமுள்ள தேகமுள்ளவர்களாக எவனால் தியானிக்கப்படுகிறாயோ, அவனுக்கு பெண்டிரும் ஆடவரும் வயமாகின்றனர்.

येन वा शातकुम्भद्युतिर्भाव्यसे सोऽपि लक्ष्मीसहस्रैः परिक्रीडते ।

யேன வா ஶாதகும்ஹத்யுதிர்ஹாவ்யஸே ஸோ'பி லக்ஷ்மீஸஹஸ்ரைஃ பரிக்ரீடதே |

பொன்னிறமுள்ளவர்களாக எவனால் தியானிக்கப்படுகிறாயோ அவனும் ஆயிரக்கணக்கான செல்வத்துடன் களிப்புறுவான்.

किं न सिद्ध्येद्वपुः श्यामलं कोमलं चन्द्रचूडान्वितं तावकं ध्यायतः ?

கிம் நஸித்⁴யேத்³வபு: ஶ்யாமலம் கோமலம் சந்த்³ரசூடா³ன்விதம் தாவகம் த்⁴யாயத: ?

மிருதுவானதும் கரிய நிறமுள்ளதும் சந்திரகலையை முடியில் கொண்டதுமான உனது திருமேனியை தியானிப்பவனுக்கு எதுதான் கைகூடாது?

तस्य लीलासरो वारिधिः, तस्य केलीवनं नन्दनम्, तस्य भद्रासनं भूतलं, तस्य गीर्देवता किङ्करी, तस्य चाज्ञाकरी श्रीः स्वयम् ।

தஸ்ய லீலாஸரோ வாரிதி⁴:, தஸ்ய கேளீவனம் நந்த³னம், தஸ்ய ப⁴த்³ராஸனம் பூ⁴தலம், தஸ்ய கீ³ர்தே³வதா கிங்கரீ, தஸ்ய சாஜ்ஞாகரீ ஶ்ரீ: ஸ்வயம் ||

கடல் அவனுக்கு விளையாட்டுக்கான குளமாம்; விண்ணுலகத்திய நந்தனவனம் அவனது விளையாட்டுத் தோட்டமாம்; மாநிலம் முழுதும் அவனது அரியணையாகும்; ஸரஸ்வதி அவனுக்கு வேலைக்காரியாவாள். இலக்குமியும் தானாகவே அவனுக்கு பணிப்பெண்ணாவாள்.

सर्वतीर्थात्मिके! सर्वमन्त्रात्मिके! सर्वतन्त्रात्मिके! सर्वयन्त्रात्मिके! सर्वपीठात्मिके! सर्वतत्त्वात्मिके! सर्वशक्त्यात्मिके! सर्वविद्यात्मिके! सर्वयोगात्मिके! सर्वनादात्मिके! सर्वशब्दात्मिके! सर्ववर्णात्मिके! सर्वविश्वात्मिके! सर्वगे! हे जगन्मातृके! पाहि मां पाहि मां पाहि माम्। देवि! तुभ्यं नमो देवि! तुभ्यं नमो देवि! तुभ्यं नमः ॥ ५॥

ஸர்வதீர்தா²த்மிகே, ஸர்வமந்த்ராத்மிகே, ஸர்வதந்த்ராத்மிகே, ஸர்வயந்த்ராத்மிகே, ஸர்வபீடா²த்மிகே, ஸர்வதத்த்வாத்மிகே, ஸர்வஶக்த்யாத்மிகே, ஸர்வவித்³யாத்மிகே, ஸர்வயோகா³த்மிகே, ஸர்வநாதா³த்மிகே, ஸர்வஶப்³தா³த்மிகே, ஸர்வவர்ணாத்மிகே, ஸர்வவிஶ்வாத்மிகே, ஸர்வகே³, ஹே ஜக³ன்மாத்ருகே, பாஹி மாம், பாஹி மாம், பாஹி மாம், தே³வி! துப்⁴யம் நமோ தே³வி! துப்⁴யம் நமோ தே³வி! துப்⁴யம் நம: || ரு ||

சர்வ தீர்த்த உருவே ! சமஸ்த மந்திரரூபிணி ! எல்லா தந்திரங்களின் உருவே! எல்லா யந்த்ரரூபமா யிருப்பவளே! எல்லா பீடரூபிணி! எல்லாத் தத்துவமா யிருப்பவளே! எல்லா சக்திகளாகவும் இருப்பவளே! ஸர்வ வித்யைகளின் உருவே! எல்லா யோகமா யிருப்பவளே! எல்லா ஒலிவுருவானவளே! எல்லாச் சொற்களாகவும் இருப்பவளே! எல்லா எழுத்துக்களின் உருவினளே! எல்லா உலகாயும் விளங்குபவளே! எங்கும் நிறைந்தவளே! உலகத்தின் தாயே! என்னைக் காப்பாயாக, என்னைக் காப்பாயாக, என்னைக் காப்பாயாக; ஒ தேவியே! உன் தனக்கு வணக்கம், உன் தனக்கு வணக்கம், உன் தனக்கு வணக்கம்.

॥ श्यामलादण्डकं समाप्तम् ॥

ஶ்யாமலாதண்டகம் ஸமாப்தம்

ஶ்யாமளா தண்டகம் முற்றிற்று

श्रीः

॥ नवरत्नमाला ॥

நவரத்ன மாலா

ओंकारपञ्जरशुकी-मुपनिषदुद्यानकेलिकलकण्ठीम् ।
आगमविपिनमयूरी-मार्यामन्तर्विभावये गौरीम् ॥ १ ॥

1. ஓங்காரபஞ்ஜரஶுகீ-முபநிஷதுத்யானகேளிகலகண்டீம் |
ஆகமவிபினமயூரீ-மார்யாமந்தர் விபாவயே கௌரீம் ||

ओंकार-ப்ரணவமென்ற-**पञ्जर**-கூட்டிலுள்ள-**शुकीं** கிளியும் **उपनिषत्** -வேதாந்தங்களாகிற **उद्यान**-தோட்டத்தில்-**केलिकल-कण्ठीं** விளையாடும் குயிலும் **आगम**-வேதங்களாகிற-**विपिन**-காட்டில் உள்ள-**मयूरीं** பெண் மயிலுமான **आर्यां** மதிக்கத் தகுந்த **गौरीं** பார்வதியை (ஆர்யாம்பாளை) **अन्तः** உள்ளே (மனதில்) **विभावये** நன்கு தியானிக்கிறேன்.

दयमानदीर्घनयनां देशिकरूपेण दर्शिताभ्युदयाम् ।
वामकुचनिहितवीणां वरदां सङ्गीतमातृकां वन्दे ॥ २ ॥

2. தயமானதீர்கநயனாம் தேஶிகரூபேண தர்ஶிதாப்யுதயாம் |
வாமகுசநிஹிதவீணாம் வரதாம் ஸங்கீதமாத்ருகாம் வந்தே ||

दयमान-தயைபுரிகின்ற-**दीर्घ**-நீண்ட-**नयनां** கண்களையுடையவளும் **देशिकरूपेण** ஆசார்யன் உருவத்துடன் **दर्शित**-காட்டப்பட்ட-**अभ्युदयां** மேன்மையை உடையவளும் (ஆசார்யனாக வந்து ஆத்மஸ்வரூபத்தை காணச் செய்கின்றவளும்) **वामकुच**-இடதுஸ்தனத்தில்-**निहित**- வைத்துக்கொள்ளப்பட்ட -**वीणां** வீணையை உடையவளும் (இடதுஸ்தனத்தில் படும்படி வாசிக்குங் காலத்தில் வீணையை சாற்றிக்கொண்டிருப்பவ

ளும்) **वरदां** விரும்பியதை யளிப்பவளுமான **सङ्गीतमातृकां** ஸங்கீதத்திற்கு மூலகாரணமாக இருப்பவளை **वन्दे** நமஸ்கரிக்கிறேன்.

श्यामलिमसौकुमार्यां सौन्दर्यानन्दसम्पदुन्मेषाम् ।
तरुणिमकरुणापूरां मदजलकल्लोललोचनां वन्दे ॥ ३ ॥

3. ஶ்யாமலிமஸௌகுமார்யாம் ஸௌந்தர்யானந்தஸம்பதுன்மேஷாம்
தருணிமகருணாபூராம் மதஜலகல்லோலலோசனாம் வந்தே ॥ [ஷாம்]

श्यामलिमसौकुमार्यां கருமை நிறத்தின் அழகாக விளங்குபவளும், அல்லது, கரிய நிறமும் மென்மையுமுடையவளும் **सौन्दर्यानन्दसम्पदुन्मेषां** அழகு ஆனந்தம் இவைகளின் சிறப்பின் தோற்றமுள்ளவளும் **तरुणिमकरुणापूरां** முற்றிய கருணை ப்ரவாஹம் அல்லது யௌவனம், தயை இவைகளின் பெருக்கு உடையவளும் **मदजलकल्लोललोचनां** மதஜலத்தின் அலைகள் போன்ற கண்கள் உள்ளவளும் (மதஜலத்தைக் கறுப்பாகக்கூறுவதுண்டு) அல்லது, மதத்தால் நீரலைபோன்ற (அசைவுள்ள) கண்களையுடையவளும் அல்லது மதஜலப்பிரவாஹத்தையுடைய கண்களையுள்ளவளுமான தேவியை **वन्दे** நமஸ்கரிக்கிறேன்.

குறிப்பு; ஸௌந்தர்யமுள்ள இடத்தில் ஆனந்த சம்பத்து இராது. ஆனந்த ஸம்பத்துள்ளவரிடம் ஸௌந்தர்யமிராது. அம்பிகையிடம் இரண்டும் சேர்ந்திருப்பது விசேஷமாகும்.

श्यामतनुसौकुमार्यां என்றும் பாடாந்தரம். கரிய நிறத்தோடு கூடிய தேஹ மென்மையை (அழகை) உடையவளும் என்பது பொருள். **सौन्दर्यामन्दसंपदुन्मेषां** என்றும் பாடமுண்டு.

नखमुखमुखरितवीणा-नादरसास्वादनवनवोल्लासम् ।
मुखमम्ब ! मोदयतु मां मुक्ताताटङ्कमुग्धहसितं ते ॥ ४ ॥

4. நகமுகமுகரிதவீணா-நாதரஸாஸ்வாதநவநவோல்லாஸம் |
முகமம்ப ! மோதயது மாம் முக்தாதாடங்கமுக்தஹஸிதம் தே ॥

नखमुख-நகங்களின் நுனிகளால்-**मुखरित**-சப்தமுள்ளதாகச் செய்யப்பட்ட (வாசிக்கப்பட்ட)-**वीणा** -வீணையின் -**नाद** -சப்தத்தின் -**रस**-சுவையை-**आस्वाद**-சுவைப்பதில்- **नवनव**-புதிது புதிதான-**उल्लासं** அழகையுடையதும் **मुक्ताताटङ्क**-முத்துக்களோடுகூடிய காதாபரணத்தினால்-**मुग्ध**-அழகிய-**हसितं** மந்தஹாஸத்தை யுடையதுமான **ते** உனது **मुखं** முகம் **मां** என்னை **अम्ब !** தாயே! **मोदयतु** களிப்புறச் செய்யவேண்டும்.

सरिगमपधनिरतां तां वीणासंक्रान्त-कान्तहस्तान्ताम् ।
शान्तां मृदुलस्वान्तां कुचभरतान्तां नमामि शिवकान्ताम् ॥ ५ ॥

5. ஸரிகமபதநிரதாம் தாம் வீணாஸங்க்ராந்தகாந்தஹஸ்தாந்தாம் |
ஶாந்தாம் ம்ருதுலஸ்வாந்தாம் குசபரதாந்தாம் நமாமி ஶிவ-
காந்தாம் ||

सरिगमपधनि - ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஸ்வரங்களில் - **रतां** ஈடுபட்டவளும் **वीणा** வீணையில் **संक्रान्त** - பரவிய **कान्त**-அழகிய-**हस्तान्तां** கையின் நுனியை (விரல்களை) உடையவளும் **शान्तां** அமைதியுள்ளவளும் **मृदुलस्वान्तां** இளகும் மனமுள்ளவளும் **कुचभरतान्तां** குசங்களின் பளுவால் சிரமமடைந்தவளுமான **तां** அந்த **शिवकान्तां** பரமசிவனது மனைவியை **नमामि** வணங்குகின்றேன்.

अवटुतटघटितचूली-ताडिततालीपलाशताटङ्काम् ।
वीणावादनवेला-कम्पितशिरसं नमामि मातङ्गीम् ॥ ६ ॥

6. அவடுதடகடிதசூலீ—தாடிததாலீபலாஶதாடங்காம் ।
வீணாவாதனவேலா—கம்பிதஶிரஸம் நமாமி மாதங்கீம் ||

अवटुतट- பின் கழுத்தில் - **घटित** - சேர்ந்திருக்கிற -**चूली**- குழல் கற்றையால் (கூந்தல் முடிப்பால்) - **ताडित** - தட்டப்பட்ட (மோதப்பட்ட) **तालीपलाशताटङ्काम्** பனை ஓலையாலான கர்ணாபரணத்தை உடையவளும் **वीणावादनवेला**-வீணை வாசிக்கும் சமயத்தில்-**कम्पितशिरसं** தலையை அசைப்பவளுமான

मातङ्गीं மதங்க முனிவரின் குமாரியான தேவியை **नमामि** நமஸ்கரிக்கிறேன்.

குறிப்பு: வீணை வாசிக்கும் நேரத்தில் தலையை அசைப்பதால் பின்புறமிருக்கும் தலைமுடி காதிலுள்ள ஓலையில் படவே அதுவும் அசைகின்றது என்பது பொருள்.

वीणारवानुषङ्गं विकचमुखाम्भोज(मोद)माधुरीभृङ्गम् ।
करुणापूरतरङ्गं कलये मातङ्गकन्यकापाङ्गम् ॥ ७ ॥

7. வீணாரவானுஷங்கம் விகசமுகாம்போஜ(மோத)மாதுரீப்ருங்-
கருணாபூரதரங்கம் கலயே மாதங்ககன்யகாபாங்கம் ॥ [ஙம் |

वीणारवानुषङ्गं வீணாநாதத்தைத் தொடர்கின்றதும் **विकच**-மலர்ந்த-**मुखाम्भोज**-முகமாகிற தாமரையின்-**माधुरी**-இனிமையை அனுபவிக்கும்-**भृङ्गं** வண்டும் **करुणापूरतरङ्गं** கருணை வெள்ளத்திலுண்டாகும் அலையுமாகிய **मातङ्गकन्यकापाङ्गं** மாதங்க கன்னிகையின் கடாக்ஷத்தை **कलये** தியானிக்கிறேன்.
मुखामोद-என்றால், "முகத்தின் வாஸனையின்".

मणिभङ्गमेचकाङ्गीं मातङ्गीं नौमि सिद्धमातङ्गीम् ।
यौवनवनसारङ्गीं सङ्गीताम्भोरुहानुभवभृङ्गीम् ॥ ८ ॥

8. மணிபங்கமேசகாங்கீம் மாதங்கீம் நௌமி ஸித்தமாதங்கீம். |
யௌவனவனஸாரங்கீம் ஸங்கீதாம்போருஹானுபவப்ருங்கீம் ॥

मणिभङ्ग-பட்டைபிடித்த இந்திரநீலமணிபோல் - **मेचक**-நீலமான-**अङ्गीं** திருமேனியை உடையவளும் (அல்லது, இந்திர நீலமணியை அவமதிக்கும் கரிய தேகமுடையவளும்) **सिद्ध-मातङ्गीं** மாதங்க முனிவருக்கு ஸித்தியை யளித்தவளும் **यौवनवन** வாலிபப் பருவமாகிய காட்டில் (விளங்கும்)-**सारङ्गीं** பெண் மானும் **सङ्गीत**-சங்கீதமாகிற - **अम्भोरुह**-தாமரையை (மகரந்தத்தை)-**अनुभव**-அனுபவிக்கின்ற-**भृङ्गीं** பெண் வண்டுமாகிய **मातङ्गीं** மாதங்கி தேவியை **नौमि** துதிக்கிறேன்.

मेचकमासेचनकं मिथ्यादृष्टान्तमध्यभागं ते ।
मातः स्वरूपमनिशं मङ्गलसङ्गीतसौरभं वन्दे ॥ ९ ॥

9. மேசகமாஸேசனகம் மித்²யாத்³ருஷ்டாந்தமத்⁴யபா⁴க³ம் தே |
மாதஸ்ஸ்வரூபமனிஸ²ம் மங்க³லஸங்கீ³தஸௌரப⁴ம் வந்தே³ ||

मातः தாயே मिथ्यादृष्टान्तमध्यभागं மித்யைக்கு (பொய்க்கு) உதாரணமாக விளங்கும் இடையையுடையதும் आसेचनकं எவ்வளவு தடவை பார்த்தாலும் திருப்தியைத் தராததும் मेचकं கறுப்பானதும் मङ्गलसङ्गीतसौरभं மஹா மங்கள ஸங்கீதத்தின் சிறந்த மணத்தை யுடையதுமான ते உன்னுடைய स्वरूपं ஸ்வரூபத்தை अनिशं எப்பொழுதும் वन्दे நமஸ்கரிக்கிறேன்.

नवरत्नमाल्यमेतद्रचितं मातङ्गकन्यकाभरणम् ।
यः पठति भक्तियुक्तः स भवेद्वागीश्वरः साक्षात् ॥ १० ॥

10. நவரத்நமால்யமேதத்³ரசிதம் மாதங்க³கன்யகாப⁴ரணம் |
ய:ப○தி ப⁴க்தியுக்த: ஸப⁴வேத்³வாகீ³ஸ்வரஸ் ஸாக்ஷாத் ||

मातङ्गकन्यकाभरणं மாதங்க குமாரத்திக்கு ஆபரணமாக रचितं கட்டப்பட்ட एतत् இந்த नवरत्नमाल्यं நவரத்னமாலையை यः எவர் भक्तियुक्तः பக்தியோடு கூடியவராக पठति படிக்கிறாரோ सः அவர் साक्षात् वागीश्वरः வாகீசராகவே (வாக்குக்கு அதிபதியாக, வச்யவாக்காக) भवेत् ஆவார்.

॥ नवरत्नमाला समाप्ता ॥

நவரத்னமாலா ஸமாப்தா

நவரத்ன மாலை முற்றிற்று

॥ श्रीः ॥

॥ मन्त्रमातृकापुष्पमालास्तवः ॥

மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவ:

कल्लोलोल्लसितामृताब्धिलहरीमध्ये विराजन्मणि-
द्वीपे कल्पकवाटिकापरिवृते कादम्बवाट्युज्ज्वले ।
रत्नस्तम्भसहस्रनिर्मितसभामध्ये विमानोत्तमे
चिन्तारत्नविनिर्मितं जननि ते सिंहासनं भावये ॥ १ ॥

கல்லோலோல்லஸிதாம்ருதாப்தி லஹரீ மத்யே விராஜன்மணி-
த்வீபே கல்பகவாடிகாபரிவ்ருதே காதம்பவாட்யுஜ்ஜ்வலே ।
ரத்னஸ்தம்ப ஸஹஸ்ரநிர்மித ஸபாமத்யே விமானோத்தமே
சிந்தாரத்னவிநிர்மிதம் ஜனனி தே ஸிம்ஹாஸனம் பாவயே ॥ (1)

தாயே! அலைகளினால் சோபிக்கின்ற அமிருத ஸமுத்திரத்தின் நடுவில் விளங்குகின்ற மணித் தீவிலே கற்பக மரங்களாலான வேலியினால் சூழப்பட்டதும், கடம்பை மரவரிசைகளால் பிரகாசிப்பதும், இரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஆயிரம் கால்கள் அமைத்து நிருமித்த ஸபையின் நடுவிலுள்ளதுமான சிறந்த விமானத்திலே (கோயிலிலே சிந்தாமணிகளை அமைத்துச் செய்யப்பட்டதான ஸிம்ஹாஸனத்தை, நான் உனக்குத் தியானம் செய்து கொடுக்கிறேன் (மனதினால் ஸமர்ப்பிக்கின்றேன்).

एणाङ्कानलभानुमण्डललसच्छ्रीचक्रमध्ये स्थितां
बालार्कद्युतिभासुरां करतलैः पाशाङ्कुशौ बिभ्रतीम् ।
चापं बाणमपि प्रसन्नवदनां कौसुम्भवस्त्रान्वितां
तां त्वां चन्द्रकलावतंसमकुटां चारुस्मितां भावये ॥ २ ॥

ஏணாங்கானலஹானுமண்டலலஸச்ஶ்ரீசக்ரமத்யே ஸ்திதாம்
பாலார்(க்)கத்யுதிஹாஸுராம் கரதலை: பாஶாங்குஶௌ பிப்ரதீம்
சாபம் பாணமபி ப்ரஸன்னவதனாம் கௌஸும்ஹவஸ்த்ரான்விதாம்
தாம் த்வாம் சந்த்ரகலாவதம்ஸமகுடாம் சாருஸ்மிதாம் ஹாவயே ॥ (2)

சந்திரன், அக்கினி, ஸூர்ய மண்டலம் இவைகளாகப் பிரகாசிக்கின்ற ஸ்ரீ சக்கிரத்தின் மத்தியில் இருப்பவளும், பால ஸூர்யனுடைய கிரணத்தைப்போல் பிரகாசிக்கின்றவளும், கைகளில் பாசம், அங்குசம் (மாவட்டி), வில், அம்பு இவைகளை தரிக்கின்றவளும், (மகிழ்ச்சியால்) மலர்ந்த முகத்தை யுடையவளும், சிவந்த வஸ்திரம் தரித்திருப்பவளும், சந்திர கலையினால் அலங்கரிக்கப்பட்டமுடியையுடையவளும் அழகிய புன்னகையை யுடையவளும், (வேதம், வேதாந்தம், புராணம் முதலியவைகளில்) பிரஸித்தி யடைந்திருப்பவளும் ஆகிய உன்னை நான் தியானம் செய்கிறேன்.

ईशानादिपदं शिवैकफलकं रत्नासनं ते शुभं
पाद्यं कुङ्कुमचन्दनादिभरितैरर्घ्यं सरत्नाक्षतैः ।
शुद्धैराचमनीयकं तव जलैर्भक्त्या मया कल्पितं
कारुण्यामृतवारिधे तदखिलं संतुष्टये कल्पताम् ॥ ३ ॥

ஈஶானாதிபதம் ஶிவைகஃபலகம் ரத்னாஸனம் தே ஶுஹம்
பாத்யம் குங்குமசந்தனாதிஹரிதை ரர்க்யம் ஸரத்னாக்ஷதை: ।
ஶுத்தைராசமனீயகம் தவ ஜலைர்ஹக்த்யா மயா கல்பிதம்
காருண்யாம்ருதவாரிதே ததகிலம் ஸந்துஷ்டயே கல்பதாம் ॥ (3)

கோவிலூர் ஆதீனம்
அஅ௯௫
௦௯௫

கருணையாகிற அமிருதம் நிரம்பிய ஸமுத்திரமாகிய தாயே! ஈசானன் முதலியவர்களாகிய கால்களையுடையதும் (சதா) சிவனாகிய ஒரே பலகையை யுடையதும் அழகுடையதும் ரத்தின மயமாகியதுமான ஆஸனமும், (நல்ல) பாத்யமும், குங்குமப்பூ சந்தனம் முதலியவை நிரம்பியதும் இரத்தினம் அக்ஷதை இவைகளோடு கூடியதுமான அர்க்கியமும், சுத்தமான ஜலத்தினால் ஆசமனீயமும் ஆகியவை பக்தியோடு என்னால் அமைக்கப்பட்டவை யெல்லாம் உன்னுடைய மகிழ்ச்சிக்காக அமையட்டும். (உனக்கு மகிழ்ச்சியைத் தரட்டும்.)

लक्ष्ये योगिजनस्य रक्षितजगज्जाले विशालेक्षणे
प्रालेयाम्बुपटीरकुङ्कुमलसत्कर्पूरमिश्रोदकैः ।
गोक्षीरैरपि नालिकेरसलिलैः शुद्धोदकैर्मन्त्रितैः
स्नानं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ४ ॥

லக்ஷ்யே யோகிஜனஸ்ய ரக்ஷிதஜகஜ்ஜாலே விசாலேக்ஷணே
ப்ராலேயாம்பு படீரகுங்குமலஸத்கர்(ப்)பூரமிச்ரோதகை: ।
கோக்ஷீரைரபி நாலிகேரஸலிலை: சுத்தோதகைர்மந்த்ரிதை:
ஸ்நானம் தேவி தியா மயைதத்கிலம் ஸந்துஷ்டயே கல்பதாம் ॥

யோகிகளுக்கு (ஞானத்தால்) அறிந்து கொள்ள ஸாத்தியமானவளும் உலகக் கூட்டங்களை ரக்ஷிக்கின்றவளும் அகன்ற கண்களை யுடையவளுமான தேவியே! மந்திர ஜபம் செய்யப்பட்டவையான பனி ஜலம், சந்தனம், குங்குமப்பூ பச்சைக் கர்ப்பூரம் இவைகள் கலந்த தீர்த்தத்தினாலும், பசுக்களின் பாலினாலும், இளநீரினாலும், சுத்த ஜலத்தினாலும், உனக்கு மனதினால் செய்யப்பட்ட இந்த எல்லாவிதமான ஸ்நானமும் மகிழ்ச்சியைத் தரட்டும்.

ह्रींकाराङ्कितमन्त्रलक्षिततनो हेमाचलात्संचितै-
रत्नैरुज्ज्वलमुत्तरीयसहितं कौसुम्भवर्णांशुकम् ।
मुक्तासंततियज्ञसूत्रममलं सौवर्णतन्तूद्भवं
दत्तं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ५ ॥

ஹ்ரீம்காராங்கித - மந்த்ர - லக்ஷிததனோ! ஹேமாசலாத் ஸஞ்சிதை:
ரத்னைருஜ்ஜ்வல முத்தரீய ஸஹிதம் கௌஸும்பவர்ணாம்சுகம் |
முக்தாஸந்ததியஜ்ஞ ஸூத்ரமமலம் ஸௌவர்ண தந்தூத்பவம்
தத்தம் தேவி தியா மயைததகிலம் ஸந்துஷ்டயே கல்பதாம் || (5)

(மூன்று) ஹ்ரீங்காரங்களை அடையாளமாகவுடைய மந்திரத்தாலே (உபாஸிப்பவர்களுக்கு) ப்ரத்யக்ஷமாக விளங்கும் திருமேனியை யுடையவளே! பொன்மயமான மேரு பர்வதத்தினின்று பொறுக்கி யெடுக்கப்பெற்ற ரத்தினங்களால் மிக்க ஒளி வீசுகின்ற மேலாடையோடு கூடியதான செந்நிறமான பட்டாடையும் பொற்கம்பியிலே கோத்த முத்துக் கோவையாகிய தூய யஜ்ஞோப வீதமுமாக, என்னால் மனதாலே ஸமர்ப்பிக்கப் பெற்ற இது எல்லாம், பிராட்டியே! (உம்முடைய) பிரீதியின் பொருட்டு அமைவதாக.

हंसैरप्यतिलोभनीयगमने हारावलीमुज्ज्वलां
हिन्दोलद्युतिहीरपूरिततरे हेमाङ्गदे कङ्कणे ।
मञ्जीरौ मणिकुण्डले मकुटमप्यर्धेन्दुचूडामणिं
नासामौक्तिकमङ्गुलीयकटकौ काञ्चीमपि स्वीकुरु ॥ ६ ॥

ஹம்ஸைரப்யதிலோபநீயகமனே ஹாராவலீமுஜ்ஜ்வலாம்
ஹிந்தோலத்யுதிஹீரபூரிததரே ஹேமாங்கதே கங்கணே |
மஞ்ஜீரௌ மணிகுண்டலே மகுடமப்யர்தேந்து சூடாமணிம்
நாஸாமௌக்திகமங்குலீயகடகௌ காஞ்சீமபி ஸ்வீகுரு || (6)

அன்னப் பறவைகளாலுங்கூட மிகவும் பொறாமைப் படத் தகுந்த நடையை யுடையவளே! பிரகாசிக்கின்ற முத்து மாலையையும், நீலம் காட்டும் ஒளியையுடைய உடானி வைர ரத்தினங்கள் மிகவும் நிரம்பிய தங்கமயமான இரண்டு தோள்வளைகளையும், இரண்டு கைவளைகளையும், இரண்டு பாதச் சிலம்புகளையும், ரத்தின மயமான இரண்டு தாடங்கங்களையும் (காதோலைகளையும்), பிறைச் சந்திரன் என்னும் சூடாமணியாகிய கிரீடத்தையும், மூக்கு நகையா யுள்ள முத்தையும், மோதிரத்தையும், காப்பையும் ஒட்டியா ணத்தையும் ஏற்றுக்கொள்வாயாக.

सर्वाङ्गे घनसारकुङ्कुमघनश्रीगन्धपङ्काङ्कितं
कस्तूरीतिलकं च फालफलके गोरोचनापत्रकम् ।
गण्डादर्शनमण्डले नयनयोर्दिव्याञ्जनं तेऽञ्चितं
कण्ठाब्जे मृगनाभिपङ्कममलं त्वत्प्रीतये कल्पताम् ॥ ७ ॥

ஸர்வாங்கே கனஸாரகுங்குமகனஸ்ரீகந்தபங்காங்கிதம்
கஸ்தூரீதிலகம் ச பாலபலகே கோரோசனாபத்ரகம் |
கண்டாதர்சனமண்டலே நயனயோர்திவ்யாஞ்ஜனம்.தே(அ)ஞ்சிதம்
கண்டாப்ஜே ம்ருகநாபிபங்கமமலம் த்வத்ப்ரீதயே கல்பதாம் || (7)

தாயே! உடம்பு முழுவதிலும் பூசுவதற்கானதும் கர்ப்பூரம் குங்குமப்பூ இவைகள் அதிகமாயுள்ளதுமான சந்தனக் குழம்பும், நெற்றிப் பட்டையில் கஸ்தூரியாலான திலகமும், கண்ணாடி போன்ற கன்னப் பிரதேசத்தில் கோரோசனையினால் எழுதப்பட்ட இலை வடிவமான மகரிகா பத்திரமும், கண்களில் தீட்டுவதற்கு மேன்மையான மையும், சங்கு போன்ற கழுத்தில் (பூசுவதற்கான) சுத்தமான கஸ்தூரிக் குழம்பும், உன்னுடைய மகிழ்ச்சியின் பொருட்டு அமைவதாகட்டும். (உனக்கு மகிழ்ச்சியைத் தரட்டும்).

कह्लारोत्पलमल्लिकामरुवकैः सौवर्णपङ्केरुहैः
जातीचम्पकमालतीवकुलकैर्मन्दारकुन्दादिभिः ।
केतक्या करवीरकैर्बहुविधैः कॢप्ताः स्रजो मालिकाः
सङ्कल्पेन समर्पयामि वरदे संतुष्टये गृह्यताम् ॥ ८ ॥

கல்ஹாரோத்பலமல்லிகாமருவகைஃ ஸௌவர்ணபங்கேருஹைஃ
ஜாதிசம்பகமாலதிவகுலகைர்மந்தாரகுந்தாதிபிஃ |
கேதக்யா கரவீரகைர்வஹுவிதைஃக்லுப்தாஃ ஸ்ரஜோ மாலிகாஃ
ஸங்கல்பேன ஸமர்(ப்)பயாமி வரதே ஸந்துஷ்டயே க்ருஹ்யதாம் ||

வரந் தருகின்றவளே! செங்கழுநீர், குவலயம் (நீலோத்பலம்), மல்லிகை. மருக்கொழுந்து இவைகளாலும் தங்கத் தாமரைகளாலும், ஜாதி மல்லிகை, சண்பகம், மாலதி, மகிழம்பூ இவைகளாலும், மந்தாரம், தும்பை முதலியவைகளாலும், தாழம்பூவினுலும், அரளிப்பூக்களாலும், இன்னும் பலவித புஷ்பங்களாலும் செய்யப்பட்ட (தொடுக்கப்பட்ட) தலைச்சரங்களையும் மாலைகளையும், கழுத்து மாலைகளையும் நான் மனதினல், ஸமர்ப்பிப்பதை ஸந்தோஷமாகப் பெற்றுக் கொள்வாயாக.

हन्तारं मदनस्य नन्दयसि यैरङ्गैरनङ्गोज्ज्वलैः
यैर्भृङ्गावलिनीलकुन्तलभरैर्बध्नासि तस्याशयम् ।
तानीमानि तवाम्ब कोमलतराण्यामोदलीलागृहा-
ण्यामोदाय दशाङ्गगुग्गुलुघृतैर्धूपैरहं धूपये ॥ ९ ॥

ஹந்தாரம் மதனஸ்ய நந்தயஸி யைரங்கைரனங்கோஜ்ஜ்வலைஃ
யைர்ப்ருங்காவலிநீலகுந்தலபரைர்வத்னாஸி தஸ்யாசயம் |
தானீமானி தவாம்வ கோமலதராண்யாமோதலீலாக்ருஹா-
ண்யாமோதாய தசாங்ககுக்குலுக்ருதைர்தூபைரஹம்
தூபயே || (9)

தாயே! காமத்தை (காதலை) விருத்தி செய்கின்ற உனது எந்த அங்கங்களால் மன்மதனை நாசம் செய்த பரமேச்வரனை ஆனந்திக்கச் செய்கின்றாயோ, வண்டின் வரிசைகளை (யுடைய) ப்போன்ற எந்தக் கருமையான கூந்தலின் பாரங்களால் அந்த பரமசிவனுடைய மனதைக் கட்டுப்படுத்துகின்றாயோ, அப்படிச் சிறந்தவையும், மிகவும் மிருதுவானவையும், ஸந்தோஷ விளையாட்டிற்கு இருப்பிடமானவையுமான உன்னுடைய இந்த அங்கங்களை, வாஸனையூட்டுதற்காக, தசாங்கம், குங்குலியம் நெய் இவைகளாலான தூபங்களால் புகையூட்டுகின்றேன் (தூப மிடுகிறேன்).

लक्ष्मीमुज्ज्वलयामि रत्ननिवहोद्भास्वत्तरे मन्दिरे
मालारूपविलम्बितैर्मणिमयस्तम्भेषु संभावितैः ।
चित्रैर्हाटकपुत्रिकाकरधृतैर्गव्यैर्घृतैर्वर्धितैः
दिव्यैर्दीपगणैर्धिया गिरिसुते सन्तुष्टये कल्पताम् ॥ १० ॥

லக்ஷ்மீமுஜ்ஜ்வலயாமி ரத்னநிவஹோத்₃ பா₄ஸ்வத்தரே மந்தி₃ரே
மாலாரூபவிலம்பி₃தைர்மணிமயஸ்தம்பே₄ஷு ஸம்பா₄விதை: |
சித்ரைர்ஹாடகபுத்ரிகாகரத்₄ருதைர் க₃வ்யைர் க்₄ருதைர்வர்தி₄தை:
தி₃வ்யைர்தீ₃பக₃ணைர்தி₄யா கி₃ரிஸுதே ஸந்துஷ்டயே கல்பதாம் ||

மலைமகளே! இரத்தினங்களுடைய கூட்டங்களால் மிகவும் பிரகாசிக்கின்ற, (உன்னுடைய) கோயிலில் இரத்தினங்களிழைத்த தூண்களில் மாலைவடிவமாகத் தொங்கவிடப்பட்டவைகளும், சித்திர ரூபமாக அலங்கரிக்கப்பட்டவைகளும், தங்கப்பதுமையின் கையில் பிடிக்கப்பட்டவைகளும் பசு நெய்யால் விருத்திசெய்யப்பட்டவைகளுமான திவ்வியமான விளக்கின் கூட்டங்களால், இலக்ஷ்மியை (சோபையை) பிரகாசிக்கும்படி என் மனதினால் செய்கிறேன்; அப்படிச் செய்வது உன்னுடைய மகிழ்ச்சிக்காக அமையட்டும் (உனக்கு மகிழ்ச்சியைத் தரட்டும்).

ह्रींकारेश्वरि तप्तहाटककृतैः स्थालीसहस्रैर्भृतं
दिव्यान्नं घृतसूपशाकभरितं चित्रान्नभेदं तथा ।
दुग्धान्नं मधुशर्करादधियुतं माणिक्यपात्रे स्थितं
माषापूपसहस्रमम्ब सफलं नैवेद्यमावेदये ॥ ११ ॥

ஹ்ரிங்காரேஶ்வரி தப்தஹாடககூருதை: ஸ்தாலீஸஹஸ்ரைர்ப்ருதம்
திவ்யான்னம் க்ருதஸூபஶாகபரிதம் சித்ரான்னபேதம் ததா ।
துக்தான்னம் மதுஶர்க்கராததியுதம் மாணிக்யபாத்ரே ஸ்திதம்
மாஷாபூபஸஹஸ்ரமம்ப ஸபலம் நைவேத்யமாவேதயே ॥

ஹ்ரீம் என்கிற அக்ஷரத்தின் வடிவான ஈச்வரியே! காய்ச்சி யுருக்கப்பட்ட தங்கத்தினால் வார்க்கப்பட்ட பல்லாயிரம் பாத்திரங்களில் வைக்கப்பட்டதும், நெய் பருப்பு காய் கறி இவைகளோடு கூடியதுமான சுத்தமான அன்னமும், அவ்விதமே பலவிதமான சித்திரான்னமும், மாணிக்ய மயமான பாத்திரத்திலிருக்கும் தேன், சர்க்கரை, தயிர் இவைகளோடு கூடிய பாலன்னமும் (பாயஸமும்), பழங்களோடு ஆயிரம் வடைகளுமாகிய நைவேத்யத்தை உனக்கு (என் மனதினால்) நிவேதனஞ் செய்கிறேன்.

सच्छायैर्वरकेतकीदलरुचा ताम्बूलवल्लीदलैः
पूगैर्भूरिगुणैः सुगन्धिमधुरैः कर्पूरखण्डोज्ज्वलैः ।
मुक्ताचूर्णविराजितैर्बहुविधैर्वक्त्राम्बुजामोदितैः
पूर्णा रत्नकलाचिका तव मुदे न्यस्ता पुरस्तादुमे ॥ १२ ॥

ஸச்சாயைர்வரகேதகீதலருசா தாம்பூலவல்லீதலை:
பூகைர்பூரிகுணை: ஸுகந்திமதுரை: கர்(ப்)பூரகண்டோஜ்ஜ்வலை: ।
முக்தாசூர்ணவிராஜிதைர்பஹுவிதைர்வக்த்ராம்புஜாமோதிதை:
பூர்ணா ரத்னகலாசிகா தவ முதே ந்யஸ்தா புரஸ்தாதுமே ॥ (12)

உமாதேவியே! சிறந்த தாழம்பூவின் இதழின் காந்திக்கு ஸமானமான காந்தியையுடைய வெற்றிலேகளாலும், வெகு குணங்களுள்ளவைகளும் நல்லமணம் பொருந்தியவைகளும் ருசியாயிருப்பவைகளுமான பாக்குகளாலும், கர்ப்பூரத் துண்டுகள்போல் பிரகாசிப்பவைகளும் முத்துகளின் சூர்ணத்தினால் விளங்குகின்றவைகளுமான சுண்ணம்புத்தூளாலும், தாமரைபோன்ற (உன்) வாயின் வாஸனையையும் மகிழ்ச்சியையும் பெறுவதற்குரியவையான பலவிதமான பொருள்களாலும் நிரம்பிய ரத்னமயமான காளாஞ்சி (தாம்பூலப்பெட்டி) உன்னுடைய ஸந்தோஷத்திற்காக உன் எதிரில் (என் மனதினால்) வைக்கப்பட்டிருக்கிறது.

कन्याभिः कमनीयकान्तिभिरलङ्कारामलारात्रिका-
पात्रे मौक्तिकचित्रपङ्क्तिविलसत्कर्पूरदीपालिभिः ।
तत्तत्तालमृदङ्गगीतसहितं नृत्यत्पदाम्भोरुहं
मन्त्राराधनपूर्वकं सुनिहितं नीराजनं गृह्यताम् ॥ १३ ॥

கன்யாபிஃ கமனீயகாந்திபிரலங்காராமலாராத்ரிகா-
பாத்ரே மௌக்திகசித்ரபங்க்திவிலஸத்கர்(ப்)பூரதீபாலிபிஃ |
தத்தத்தாலம்ருதங்கதீதஸஹிதம் ந்ருத்யத்பதாம்போருஹம்
மந்த்ராராதனபூர்வகம் ஸுநிஹிதம் நீராஜனம் க்ருஹ்யதாம் || 13

(தாயே!) அழகிய காந்தியையுடைய கன்னிகைகளால், பரிசுத்தமான அலங்கார ஆலத்தித்தட்டில் முத்துகளாலான சித்திரக்கோலங்களால் விளங்குகின்ற கர்ப்பூர தீபங்களின் வரிசைகளைக்கொண்டு அந்த அந்த தாளம், மிருதங்கம், பாட்டு இவைகளின்படி நடனமாடுகின்ற பாதாரவிந்தங்களை யுடையதும் மந்திரஜபம் ஆராதனம் இவைகளோடு கூடியதும் நன்கு சுற்றப்பட்டதுமான நீராஜனமானது உன்னால் ஏற்றுக்கொள்ளப்படட்டும்.

लक्ष्मीमौक्तिकलक्षकल्पितसितच्छत्त्रं तु धत्ते रसात्
इन्द्राणी च रतिश्च चामरवरे धत्ते स्वयं भारती ।
वीणामेणविलोचनाः सुमनसां नृत्यन्ति तद्रागवद्-
भावैराङ्गिकसात्त्विकैः स्फुटरसं मातस्तदाकर्ण्यताम् ॥ १४ ॥

லக்ஷ்மீர்மௌக்திகலக்ஷகல்பிதஸிதச்ஹத்ரம் து யுத்தே ரஸாத்
இந்த்ராணீ ச ரதிஸ்ச சாமரவரே யுத்தே ஸ்வயம் ஹாரதீ ।
வீணாமேணவிலோசனா: ஸுமனஸாம் ந்ருத்யந்தி தத்ராகவத்-
ஹாவைராங்கிகஸாத்த்விகை: ஸ்ஃபுடரஸம் மாதஸ்ததாகர்ண்ய-
தாம் ॥ (14)

தாயே! இலக்ஷ்மிதேவி (உனக்கு) அன்புடன், இலக்ஷம் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட வெண்குடையைப் பிடிக்கின்றாள். இந்திராணியும் இரதிதேவியும் (உனக்கு) அன்புடன் வெண்சாமரம் வீசுகின்றார்கள். ஸரஸ்வதி தேவி தானாகவே ப்ரீதியுடன் வீணை வாசிக்கின்றாள். மானின் கண்கள் போன்ற கண்களையுடைய தேவ ஸ்திரீகள் அந்த அந்த ராகங்களுக்குத் தகுந்தபடி அங்கங்களினால் செய்யப் படுகின்ற (கடைக்கண் பார்வை, புருவம்நெறித்தல் முதலிய) பாவங்களாலும், (வியர்வை, மயிர்க்கூச்சல், ஸ்தம்பித்தல் முதலிய) ஸாத்விக பாவங்களாலும் அந்த அந்த ரஸங்கள் வ்யக்தமாகும்படி நடனம் செய்கிறார்கள். அவற்றைக் கேட்டருள்வாயாக.

ह्रींकारत्रयसंपुटेन मनुनोपास्ये त्रयीमौलिभिः
वाक्यैर्लक्ष्यतनो तव स्तुतिविधौ को वा क्षमेताम्बिके ।
सल्लापाः स्तुतयः प्रदक्षिणशतं सञ्चार एवास्तु ते
संवेशो मनसः समाधिरखिलं त्वत्प्रीतये कल्पताम् ॥ १५ ॥

ஹ்ரீங்காரத்ரயஸம்புடேன மனுனேபாஸ்யே த்ரயீமௌலிபிஃ
வாக்யைர்லக்ஷ்யதனோ தவ ஸ்துதிவிதௌ கோ வா க்ஷமேதாம்-
பிகே ।
ஸல்லாபாஃ ஸ்துதயஃ ப்ரதக்ஷிணசதம் ஸஞ்சார ஏவாஸ்து தே
ஸம்வேசோ மனஸஃ ஸமாதிரகிலம் த்வத்ப்ரீதயே கல்பதாம் ॥

மூன்று ஹ்ரீங்காரங்களுக்கு ஸம்புடமாயிருக்கிற மந்திரத்தினுல் உபாஸிக்கத் தகுந்தவளே ! ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம் என்றமூன்று வேதங்களுடையசிரஸ்ஸாகிய உபநிஷத் வாக்கியங்களால் அறியத்தகுந்த ஸ்வரூபத்தையுடையவளே ! தாயே ! உன்னை ஸ்துதிக்கும் கார்யத்தில் எவன் சக்தியுடையவனுயிருக்கின்றுன் ? (என்னுடைய) பேச்சுகள் உனக்கு ஸ்தோத்திரங்களாகவும், ஸஞ்சரித்தல் நூறு பிரதக்ஷணங்களாகவும் மனதின் ஒய்வு (நித்திரை) ஸமாதியாகவும் உன்னுடைய ப்ரீதியின் பொருட்டு கொள்வாயாக.

श्रीमन्त्राक्षरमालया गिरिसुतां यः पूजयेच्चेतसा
सन्ध्यासु प्रतिवासरं सुनियतस्तस्यामलं स्यान्मनः ।
चित्ताम्भोरुहमण्डपे गिरिसुता नृत्तं विधत्ते रसा-
द्वाणी वक्त्रसरोरुहे जलधिजा गेहे जगन्मङ्गला ॥ १६ ॥

ஸ்ரீமந்த்ராக்ஷரமாலயா கிரிஸுதாம் யஃ பூஜயேச்சேதஸா
ஸந்த்யாஸு ப்ரதிவாஸரம் ஸுநியதஸ்தஸ்யாமலம் ஸ்யான்மனஃ ।
சித்தாம்போருஹமண்டபே கிரிஸுதா ந்ருத்தம் விதத்தே ரஸாத்-
வாணி வக்த்ரஸரோருஹே ஜலதிஜா கேஹே ஜகன்மங்கலா ॥ (16)

எவனொருவன் பார்வதீ தேவியை நல்ல நியமத்தோடு கூடியவனுக ஒவ்வொரு நாளும் ஸந்திவேளைகளில் மந்திரத்தின் அக்ஷரங்களால் தொடுக்கப்பட்ட ஸ்தோத்திரமாகிய இந்த மாலையைக் கொண்டு மனதினுல் பூஜை செய்வானே அவனுடைய மனது (காமம், கோபம், த்வேஷம் முதலிய)

மலங்களில்லாமல் சுத்தமாக ஆகும். அவனுடைய ஹ்ருதய கமலமாகிய மண்டபத்தில் பார்வதீ தேவி ப்ரீதியுடன் நடனஞ் செய்வாள். தாமரை போன்ற அவன் முகத்தில் (வாயில்) ஸ்ரஸ்வதி நர்த்தனம் செய்வாள். அவனுடைய வீட்டில் உலகத்திற்கு மங்களத்தைச் செய்யும் இலக்ஷ்மி தேவி நர்த்தனம் செய்வாள்.

इति गिरिवरपुत्रीपादराजीवभूषा
भुवनममलयन्ती सूक्तिसौरभ्यसारैः ।
शिवपदमकरन्दस्यन्दिनीयं निबद्धा
मदयतु कविभृङ्गान् मातृकापुष्पमाला ॥ १७ ॥

இதி கிரிவரபுத்ரீபாதராஜீவபூஷா
புவனமமலயந்தீ ஸூக்திஸௌரப்யஸாரை: |
ஶிவபதமகரந்தஸ்யந்தினீயம் நிபத்தா
மதயது கவிப்ருங்கான் மாத்ருகாபுஷ்பமாலா ||

இவ்விதம் இமயமலையின் புத்திரியாகிய பார்வதிதேவியின் பாதாரவிந்தத்திற்கு அலங்காரமானதும், நல்ல சொற்களின் வாஸனைச் சிறப்பால் உலகத்தை பரிசுத்தம் செய்கின்றதும் சிவனுடைய பதவியாகிய (மோக்ஷமாகிய) தேனைச் சொரிவதுமாய் மந்திராக்ஷரங்களாலே கோக்கப்பட்ட (இயற்றப்பட்ட) இந்த மந்திராக்ஷரப் பூமாலையானது கவிகளாகிய வண்டுகளைக் களிக்கச் செய்யட்டும்.

इति मन्त्रमातृकापुष्पमालास्तवः समाप्तः ॥

மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம் முற்றிற்று.

॥ श्रीराजराजेश्वर्यै नमः ॥

॥ श्री राजराजेश्वर्यष्टकम् ॥

ஸ்ரீ ராஜராஜேச்வரி - அஷ்டகம்

अम्बा शाम्भवि चन्द्रमौलिरबलाऽपर्णा उमा पार्वती
काली हैमवती शिवा त्रिणयना कात्यायनी भैरवी ।
सावित्री नवयौवना शुभकरी साम्राज्यलक्ष्मीप्रदा
* चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ १ ॥

அம்பா சாம்பவி சந்த்ரமௌலிரபலா'பர்ணா உமா பார்வதி
காலீ ஹைமவதீ சிவா த்ரிணயனா காத்யாயனீ பைரவீ |
ஸாவித்ரீ நவயௌவனா சுபகரீ ஸாம்ராஜ்யலக்ஷ்மீப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ ॥ (1)

ஏ சிவபெருமானின் மனைவியே! எல்லா உலகங்களுக்கும் அன்னையும், சந்திரனை சிரசில் உடையவளும், மெல்லிய சரீரமுடையவளும், தவஞ்செய்யும்போது இலையைக்கூடப் புசியாதவளும், தவத்திற்குச் செல்லவேண்டாமென்று தாயால் தடுக்கப்பட்டவளும், மலைமகளும், காளியும், ஹிமவானின் புத்திரியும், மங்களமுள்ளவளும், மூன்றுகண்களையுடையவளும், காத்யாயனரின் புத்ரியும், பைரவரின் மனைவியும், உலகங்களைப் படைப்பவளும், புதிய யௌவனமுள்ளவளும், க்ஷேமத்தைச் செய்பவளும், ஸாம்ராஜ்யலக்ஷ்மியைக் கொடுப்பவளும், ஞான ரூபமுள்ளவரின் பத்தினியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேச்வரியுமானவர்கள் தாங்கள்.

---

* चिद्रूपस्य भगवतः स्त्री चिद्रूपी–पुंयोगादिति ङीप् ।

अम्बा मोहिनि देवता त्रिभुवनी आनन्दसन्दायिनी
वाणी पल्लवपाणिवेणुमुरलीगानप्रियालोलिनी ।
कल्याणी उडुराजबिम्बवदना धूम्राक्षसंहारिणी
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ २ ॥

அம்பா மோஹினி தேவதா த்ரிபுவனீ ஆனந்தஸந்தாயினீ
வாணீ பல்லவபாணிவேணுமுரலீகானப்ரியாலோலினீ ।
கல்யாணீ உடுராஜபிம்பவதனா தூம்ராக்ஷஸம்ஹாரிணீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ ॥ (2)

(உலகத்தை) மயக்குகின்றவளே ! அன்னையும், பிரகாச முடையவளும், மூன்று உலகங்களுக்கும் காரணமானவளும், ஆனந்தத்தைக் கொடுப்பவளும், வாக்ரூபிணியும், தளிர் போன்ற கரத்திலே ஏந்திய புல்லாங்குழலால் பாடும் பொழுது உண்டாகும் இனிய ஓசையிலுள்ள பிரியத்தால் சரீரத்தில் ஆட்டமுள்ளவளும், மங்களரூபிணியும், சந்திர பிம்பம் போன்ற முகமுள்ளவளும், தூம்ராக்ஷன் என்ற அசுரனை ஸம்ஹரித்தவளும், ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேஶ்வரியுமானவர்கள் தாங்கள்.

अम्बा नूपुररत्नकङ्कणधरी केयूरहारावली
जातीचम्पकवैजयन्तिलहरी ग्रैवेयकैराजिता ।
वीणावेणुविनोदमण्डितकरा वीरासनासंस्थिता
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ३ ॥

அம்பா நூபுரரத்னகங்கணதரீ கேயூரஹாராவலீ
ஜாதீசம்பகவைஜயந்திலஹரீ க்ரைவேயகைராஜிதா ।
வீணாவேணுவினோதமண்டிதகரா வீராஸனாஸம்ஸ்திதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ ॥ (3)

எல்லா உலகங்களுக்கும் அன்னையும், பாதஸரம், ரத்தின மிழைத்த கங்கணம் இவைகளைத் தரித்தவளும், தோளணி, முத்துமாலைகளின் வரிசை, ஜாதிப்பூ, செண்பகப்பூ இவைகளாலாகியதும் அசைகின்றதுமான மாலை, கண்டாபரணம் இவைகளால் நன்கு பிரகாசிப்பவளும், வீணை புல்லாங்குழல் இவைகளை வாசிப்பதாலும் அழகு வாய்ந்த கைகளை உடையவளும், வீராஸனமாக (வீராஸனத்திலே) நன்கு அமர்ந்திருப்பவளும், ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரியுமானவர்கள் தாங்கள்.

अम्बा रौद्रिणि भद्रकालि बगला ज्वलामुखी वैष्णवी
ब्रह्माणी त्रिपुरान्तकी सुरनुता देदीप्यमानोज्ज्वला ।
चामुण्डा श्रितरक्षपोषजननी दाक्षायणी वल्लवी
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ४ ॥

அம்பா ரௌத்ரிணி பத்ரகாலி பகலா ஜ்வாலாமுகீ வைஷ்ணவீ
ப்ரஹ்மாணி த்ரிபுராந்தகி ஸுரநுதா தேதீப்யமானோஜ்ஜ்வலா |
சாமுண்டா ச்ரிதரக்ஷபோஷஜனனி தாக்ஷாயணி வல்லவி
சித்ரூபி பரதேவதா பகவதி ஸ்ரீராஜராஜேஸ்வரி ॥ (4)

பயங்கர ரூபமுள்ளவளே! மங்களத்தைத் தரும் நீல நிறமுள்ள தேவியே! அன்னையும், (மேன்மையை யளிப்பவளும் துஷ்டர்கள் நாக்கை யறுப்பவளும்,) ஜ்வாலையைக் கக்கும் முகமுள்ளவளும், விஷ்ணுவின் சக்திரூபமானவளும், பிரம்மாவின் சக்தி ரூபமானவளும், த்ரிபுராஸுரர்களை ஸம்ஹரித்த சிவனின் மனைவியும், தேவர்களால் துதிக்கப் பெற்றவளும், தகதகவென்று ஒளிரும் காந்தியுடையவளும், சண்டன், முண்டன் என்ற இரண்டு தானவர்களையும் ஜயித்தவளும், அண்டினவரைக் காப்பாற்றி வளர்க்குந் தாயும், தக்ஷனின் பெண்ணாகியவளும், கோபிகைரூபமுள்ள

வளும், ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமை யுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேஶ்வரியுமானவர்கள் தாங்கள்.

अम्बा शूलधनुःकुशाङ्कशधरी अर्धेन्दुबिम्बाधरी
वाराही मधुकैटभप्रशमनी वाणीरमासेविता ।
मल्लाद्यासुरमूकदैत्यदमनी माहेश्वरी अम्बिका
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ५ ॥

அம்பா ஶூலதனு: குஶாங்குஶதரீ அர்தேந்து பிம்பாதரீ
வாராஹீ மது கைடப ப்ரஶமனீ வாணீரமாஸேவிதா |
மல்லாத்யாஸுரமூகதைத்யதமனீ மாஹேஶ்வரீ அம்பிகா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ || (5)

அன்னையும், சூலம், வில், பாசம், அங்குசம் இவைகளைத் தரித்தவளும், சந்திரபிம்பத்தின் பாதியைத் தரித்தவளும், வராஹாவதாரம் செய்த விஷ்ணுவாகிய சக்தி ரூபமான வளும், மது, கைடபன் என்ற அசுரர்களை யடக்கியவளும், ஸரஸ்வதியாலும் லக்ஷ்மியாலும் ஸேவிக்கப்பட்டவளும், மல்லர்களாகிய அசுரர்களையும், மூகன் என்ற அசுரனையும் அழித்தவளும், மஹேச்வரரின் மனைவியும், (எல்லோரிடமும் தயையுள்ளவளும்) தாயும், ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேஶ்வரியுமானவர்கள் தாங்கள்.

अम्बा सृष्टिविनाशपालनकरी आर्या विसंशोभिता
गायत्री प्रणवाक्षरामृतरसापूर्णाऽनुसन्धीकृता ।
ओङ्कारी विनतासुतार्चितपदा उद्दण्डदैत्यापहा
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ६ ॥

அம்பா ஸ்ருஷ்டிவிநாஶபாலனகரீ ஆர்யா விஸம்ஶோபிதா
ஶாயத்ரீ ப்ரணவாக்ஷராம்ருதரஸா பூர்ணா'னுஸந்தீக்ருதா |
ஓங்காரீ வினதாஸுதார்(ச்)சிதபதா உத்தண்டதைத்யாபஹா
சித்ரூபீ பரதேவதா ஹமவதி ஸ்ரீராஜராஜேஶ்வரீ ‖ (6)

அன்னையும், படைத்தல் அழித்தல் ரக்ஷித்தல் இவைகளைச் செய்பவளும், பூஜிக்கத் தகுந்தவளும், மிகவும் நன்ருய் பிரகாசிப்பவளும், காயத்ரீ மந்திர ரூபமானவளும், பிரணவாக்ஷரமாகிற அமுத ரஸத்தால் நிறைந்தவளும், இடைவிடாது தியானிக்கப்படுபவளும், ஓங்காரரூபிணியும், வினதையின் புத்திரனை கருடனுலே பூஜிக்கப்பட்ட பாதங்களையுடையவளும், கொடிய அஸுரர்களை யழிப்பவளும், ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேஶ்வரியுமானவர்கள் தாங்கள்.

अम्बा शाश्वति आगमादिविनुता आर्या महादेवता
या ब्रह्मादिपिपीलिकान्तजननी या वै जगन्मोहिनी ।
या पञ्चप्रणवादिरेफजननी या चित्कला मालिनी
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ७ ॥

அம்பா ஶாஶ்வதி ஆகமாதிவினுதா ஆர்யா மஹாதேவதா
யா ப்ரஹ்மாதிபிபீலிகாந்தஜனனீ யா வை ஜகன்மோஹினீ |
யா பஞ்சப்ரணவாதிரேஃபஜனனீ யா சித்கலா மாலினீ
சித்ரூபீ பரதேவதா ஹமவதி ஸ்ரீராஜராஜேஶ்வரீ ‖ (7)

அழிவற்றவளே ! அன்னையும், வேதம் முதலியவற்ருல் துதிக்கப் பட்டவளும், பூஜிக்கத் தகுந்தவளும், பெருந் தெய்வமுமான எந்த நீங்கள் பிரம்மா முதல் எறும்பு ஈருக வுள்ளவைகளைப் படைப்பவர்களோ, எந்த நீங்கள் உலகங்களை மோஹிக்கச் செய்பவர்களோ, எந்த நீங்கள் ஐந்து விதமான பிரணவம் முதலிய த்வனிகளை அருளிச் செய்த

வர்களோ, எந்த நீங்கள் உயிர்களிடத்தில் அறிவுக்கறிவாய் இருக்கிறீர்களோ, அப்படிப்பட்ட நீங்கள் மாலையணிந்தவர்களும், ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவர்களும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரியுமாய் விளங்குகின்றீர்கள்.

अम्बापालितभक्तराजदनिशं चाम्बाष्टकं यः पठेत्
अम्बा लोलकटाक्षवीक्षललितं चैश्वर्यमव्याहतम् ।
अम्बा पावनमन्त्रराजपठनादन्ते च मोक्षप्रदा
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ८ ॥

அம்பாபாலிதபக்தராஜதநிஶம் சாம்பாஷ்டகம் யஃ படேத்
அம்பா லோலகடாக்ஷவீக்ஷலலிதம் சைஶ்வர்யமவ்யாஹதம் ।
அம்பா பாவனமந்த்ரராஜபடனாதந்தே ச மோக்ஷப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஸ்வரீ ॥ (8)

எவர் அன்னையால் காப்பாற்றப் பட்ட பக்தர்களிடம் விளங்கிவரும் அம்பாஷ்டகத்தைப் படிக்கின்றாரோ, அவர் அன்னையின் கடைக்கண்பார்வையால் சிறந்ததும் தடையற்றதுமான ஐச்வரியத்தை அடைவார். ஞானரூபிணியும், மேலான தெய்வமும், மஹிமையுள்ளவளும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரியுமான அன்னை, பரிசுத்தமானதும் சிறந்ததுமான இந்த மந்திர ஸ்துதியைப் படிப்பதால் (படிப்பவனுக்கு) கடைசியில் ஸாயுஜ்யத்தையும் கொடுக்கிறாள்.

श्रीरजराजेश्वर्यष्टकं समाप्तम् ॥

ஸ்ரீராஜராஜேஸ்வரி - அஷ்டகம் முற்றிற்று.

॥ श्रीः ॥

॥ अम्बाष्टकम् ॥

அம்பாஷ்டகம்

चेटीभवन्निखिलखेटी कदंबतरुवाटीषु नाकिपटली-
कोटीरचारुतरकोटीमणीकिरणकोटीकरंबितपदा ।
पाटीरगन्धिकुचशाटी कवित्वपरिपाटीमगाधिपसुता
घोटीकुलादधिकधाटीमुदारमुखवीटीरसेन तनुताम् ॥ १ ॥

சேடீபவந்நிகிலகேடீ கதம்பதருவாடீஷு நாகிபடலீ-
கோடீரசாருதரகோடீமணீகிரணகோடீகரம்பிதபதா |
பாடீரகந்திகுசசாடீ கவித்வபரிபாடீமகாதிபஸுதா
கோடீகுலாததிககாடீமுதாரமுகவீடீரஸேன தனுதாம் ॥ (1)

कदम्बतरुवाटीषु கடம்ப மரங்களையுடைய உபவனங்களிலே चेटीभवन्निखिलखेटी ஆகாசத்திலே சஞ்சாரஞ் செய்யும், சித்த சாரண வித்யாதர ஸ்திரீகள் முதலானவர்கள் அனைவரையும் பணிப் பெண்களாகக் கொண்டவளும் नाकिपटली - कोटीर-चारुतर - कोटी - मणी - किरणकोटी - करंबित-पदा தேவர்களின் கூட்டங்களுடைய கிரீடங்களிலே மிக்கவனப்பு வாய்ந்தவையாக மேற்புறங்களிலே அமைந்த மணிகளின் கோடிக்கணக்கான கிரணங்களாலே நானா வர்ணமாக்கப் பெற்ற பாதங்களை யுடையவளும் पाटीर-गन्ध-कुचशाटी சந்தனத்தின் நறுமணங் கமழும் ரவிக்கையையுடையவளுமான अगाधप-सुता மலையரசனான ஹிமவானுடைய மகளான தேவி घोटीकुलात् குதிரைப்படையினும் अधिकधाटीम् சிறந்த நடையையுடைய कवित्वपरिपाटीं கவிதையின் பரிபக்குவத்தை उदारमुखवीटीरसेन (கவிதை முதலியவற்றை வழங்கும்) வண்

மையையுடையதான (தம்) வாயிலுள்ள தாம்பூலச் சாற்றி ஞல் (मे எனக்கு) तनुतास् பெருகச் செய்வாளாக.

எல்லா ரஸங்களையும் தன்னிடங் கொண்டதான தேவி யாரின் வாயினின்று பெருகும் தாம்பூலச்சாற்றை தேவியார் உமிழ்ந்து அதை நான் உட்கொண்டால் எல்லா ரஸங்களையு முடைய கவிதைகளைப் பாடுஞ் சக்தி எனக்கு உண்டாகும்; ஆதலால், தேவகணங்களின் பெண்பாலர் ரேடிகளாகத் தம் மைச்சூழவும் ஆண்பாலர் முடிதாழ்த்தித் தம் பாதங்களிலே வணங்கவும் உல்லாஸமாக மதுராபுரியிலுள்ள கடம்ப வனங்களிலே உலாவும் தேவியார் தாம்பூலச்சாற்றை உமி ழும் பொன் வட்டிலாக என் வாயை அமைத்துக்கொண்டு தேவியாரின் ஸன்னிதியிற் புகழ்பெறுவேன் ஆவேனே.

कूलातिगामिभयतूलावलिज्वलनकीला निजस्तुतिविधा-
कोलाहलक्षपितकालाऽमरी कुशलकीलालपोषणनभाः ।
स्थूला कुचे जलदनीला कचे कलितलीला कदम्बविपिने
शूलायुधप्रणतिशीला विभातु हृदि शैलाधिराजतनया ॥ २ ॥

கூலாதிகாமிபயதூலாவலிஜ்வலனகீலா நிஜஸ்துதிவிதா-
கோலாஹலக்ஷபிதகாலா'மரீ குஶலகீலாலபோஷணநபா: |
ஸ்தூலா குசே ஜலதநீலா கசே கலிதலீலா கதம்பவிபினே
ஶூலாயுதப்ரணதிஶீலா விபாது ஹ்ருதி ஶைலாதிராஜதனயா ||

कूलातिगामि - भयतूलावलि - ज्वलन - कीला கரைபுரண்டு பெருகுகின்ற அச்சங்கள் என்னும் பஞ்சுத் தொகுதிகளை எரிக்கும் அக்கினிஜ்வாலையானவளும் निजस्तुतिविधाकोलाहल-क्षपित काला தன்னை ஸ்துதிப்பது என்னும் செயலின் ஆர்ப் பாட்டத்தாலேயே (ஸ்துதிப்பவர்களின்) மரணம் முதலிய துன்பங்களைப் போக்கும் இயல்பையுடையவளும் कुशल-कीलालपोषणनभाः நன்மை என்னும் அமுத மழை பொழிந்து (அடியார்களை) போஷிக்கும் மேகம் போன்றவளும் कुचे

स्थूले பெருத்த ஸ்தன மண்டலத்தை யுடையவளும் **कचे जलदनीले** மேகத்தைப்போல கருநீலமான கூந்தலையுடையவளும் **कदम्बविपिने** கடம்ப வனமாகிய மதுராபுரியிலே **कलितलीला** திருவிளையாடல் புரிபவளும் **शूलायुधप्रणतिशीला** திரிசூலத்தை ஆயுதமாகவுடைய பரமசிவனை வணங்கும் ஸ்வபாவத்தை யுடையவளுமான (பிரணய காலத்தில் பரமசிவனுடைய வணக்கத்தைப்பெறக்கூடிய தன்மையையுடையவளுமான) **शैलाधिराजतनया** மலையரசனான ஹிமவானின் திருமகளான **अमरी** தேவி (**मे** என்னுடைய) **हृदि** இருதயத்திலே **विभातु** நிலைபெற்று விளங்குவாளாக.

தன்னைத் துதிப்பவரின் ஸ்துதிகளையே நெய்யாகக் கொண்டு அவர்களுடைய அச்சங்களையெல்லாம், பஞ்சுப் பொதியை அக்கினி எரித்துவிடுவதுபோல, எரிப்பதால் தீ போன்றவளும், நன்மைகளைப்பொழிவதால் மேகம் போன்றவளுமாய் ஹிமவானுக்குப் புத்திரியாக அவதரித்து பரமசிவனை வணங்கி அவரையே நாயகராகப் பெற்று ஆனந்தமாய் மதுராபுரியிலுள்ள உபவனத்திலே விளையாடும் தேவி அமுத மழை பொழியும் ஸ்தனமண்டலத்தோடும் கார் மேகம்போன்ற கூந்தலோடும் அழகுபெற என் இருதயத்திலே ஒளிவீசிக்கொண்டு விளங்குவாளாக.

यत्राशयो लगति तत्रागजा वसतु कुत्रापि निस्तुलशुका
सुत्रामकालमुखसत्राशनप्रकरसुत्राणकारिचरणा ।
छत्रानिलातिरयपत्राऽभिरामगुणमित्राऽमरीसमवधूः
कुत्रासहन्मणिविचित्राकृतिः स्फुरितपुत्रादिदाननिपुणा ॥ ३ ॥

யத்ராஶயோ லகதி தத்ராகஜா வஸது குத்ராபி நிஸ்துலஶுகா
ஸுத்ராமகாலமுகஸத்ராஶனப்ரகரஸுத்ராணகாரிசரணா |
சத்ராநிலாதிரயபத்ரா'பிராமகுணமித்ரா'மரீஸமவதூ:
குத்ராஸஹன்மணிவிசித்ராக்ருதி: ஸ்புரிதபுத்ராதிதானநிபுணா ||

निस्तुलशुका ஒப்பற்ற கிளியை (தன் கை மணிக்கட்டிலே) யுடையவளும் **सुत्राम-काल-मुख-सत्राशन-प्रकर-सुत्राणकारि-चरणा** யாகங்களிலே அவிர்ப்பாகங்களைப் புஜிப்பவர்களான இந்திரன் யமன் முதலான தேவர்களின் கூட்டங்களை பாது காக்கும் இயல்புடைய திருவடிகளை யுடையவளும் **छत्रालि-लातिरयपत्रा** (அரச சின்னமான) வெண்குடையையும் காற்றி னும் அதிவேகமாகச் செல்லும் (ஸிம்ஹ) வாஹனத்தையு முடையவளும் **अभिरामगुणमित्रा** மனதைக் கவர்தான நற் குணங்களோடு தோழமைபூண்டவளும் **कु-त्रासहन्-मणि-विचित्राकृतिः** பூதேவியின் நடுக்கத்தை யொழிப்பவரான மஹா விஷ்ணுவின் (திருமார்பிலுள்ள) கௌஸ்துப மணிபோன்று வியக்கத்தக்கதான வடிவழகை யுடையவளும் (அல்லது, இந்திர நீலமணிபோன்று வியக்கத்தக்கதான வடிவழகையுடையவளும்) **अमरीसमवधूः** (ப்ராஹ்மீ முதலான) தேவ மாதர்களோடு விளங்கும் சக்தியும் **स्फुरितपुत्रादिदाननिपुणा** புகழுடைய நன்மக்கள் (சிஷ்யர்கள்) முதலியவர்களை யளிக்க வல்லவளுமான **अगजा** பார்வதிதேவி **यत्र कुत्रापि** எங்கெல்லாம் (**मे** என்னுடைய) **आशयः** சித்தமானது **लगति** தங்குகின்றதோ. **तत्र** அங்கே **वसतु** உறைவாளாக (அல்லது, **भवतु** இருப்பாளாக).

என்னுடைய சித்தம் எங்கெங்கெல்லாமோ செல்கின்றது. அதனாலே தேவியை என் சித்தத்தாலே பற்றிக்கொள்ள இயலாது. ஆகையால் தேவியே கருணை கூர்ந்து என் சித்தம் செல்லும் இடமெல்லாம் வாஸஞ் செய்ய வேண்டும். அப்போது தான், காற்றிலும் கடியதாகச் செல்லும் சிங்கத்தின்மேல் வெண்குடை நிழலிலே தேவி கௌஸ்துப (அல்லது இந்திர நீல) மணிபோல் நிறம் பெற்று வீற்றிருப்பதையும், இந்திரன் யமன் முதலான லோகபாலர்களையும் இதர தேவர்களையும் ரக்ஷிக்கும் பாதங்களிலே அவர்கள் வணங்குவதையும், ஈசுவரனைக் குறித்துச் செய்யும் யாகங்களிலே அவர்களுக்கு அவிர்ப்பாகங்களை ஜீவனமாக அளிக்கச்

செய்து அவர்களை தேவி காப்பாற்றுவதையும், நற்குணங்களைத் தன்னுடன் என்றும் பழகும் தோழிகளாகக் கொண்டு தேவ மாதர்களோடு சக்தி வடிவமாகப் பழகுவதையும், திருக்கையிலமர்ந்த கிளியோடு கொஞ்சுவதையும் கண்டு வணங்கி, நான் புகழுடைய (சிஷ்யர்) புத்திரர் முதலான சந்ததிகளைப் பெற்றவன் ஆவேன்.

द्वैपायनप्रभृतिशापायुधत्रिदिवसोपानधूलिचरणा
पापाहस्वमनुजापानुलीनजनतापापनोदनिपुणा ।
नीपालया सुरभिधूपालका दुरितकूपादुदञ्चयतु मां
रूपाधिका शिखरिभूपालवंशमणिदीपायिता भगवती ॥ ४ ॥

த்வைபாயனப்ரஹ்ருதிஶாபாயுதத்ரிதிவஸோபானதூலிசரணா
பாபாபஹஸ்வமனுஜாபானுலீனஜனதாபாபனோதநிபுணா |
நீபாலயா ஸுரஹிதூபாலகா துரிதகூபாதுதஞ்சயது மாம்
ரூபாதிகா ஶிகரிஹூபாலவம்ஶமணிதீபாயிதா ஹகவதீ ॥ (4)

द्वैपायन - प्रभृति - शापायुध - त्रिदिव-सोपान-धूलिचरणा - வேத வியாஸர் முதலான முனிவர்கள் தேவ லோகத்திற்குச் செல்வதற்கான படிக்கட்டுகளைப் போன்ற பாததூளிகளை யுடைய திருப்பாதங்களை யுடையவளும் पापापह-स्वमनु-जापानुलीन-जन तापापनोद-निपुणा பாபங்களைப் போக்கும் இயல்பை யுடைய தன் மந்திரத்தை ஜபிப்பதிலே பற்றுடையவர்களான ஜனங்களுடைய (மூவகைத்) தாபங்களையும் போக்குந்திறமை வாய்ந்தவளும் सुरभिधूपालका நறுமணமுள்ள வாசனைப் புகையாலே பரிமளிக்கும் நெறிந்த கூந்தலை யுடையவளும் रूपाधिका மிக்க அழகு வாய்ந்தவளும் नीपालया கடம்பமரத்தினடியிலே வஸிப்பவளும் शिखरिभूपालवंशमणिदीपायिता மலையரசனுடைய வம்சத்தை ஒளிபெறச் செய்யும் மணி விளக்காயிருப்பவளுமான भगवती பகவதியான பிராட்டி मां என்னை दुरित-

कूपात् பாபத்தால் நிறைந்த கிணற்றினின்றும் उद्धरयतु கரை யேற்றி விடுவாளாக.

நிக்ரஹாநுக்ரஹ சக்தியுடையவர்களான வேத வியாஸர் முதலான தூய முனிவர்களும் தேவியின் பாத தூளி களையே படிக்கட்டாகக் கொண்டு மேலுலகஞ் செல்லுகிறார் கள். தாபத் திரயங்களைப் போக்கிக்கொள்ள விரும்பும் மானுடர் அனைவரும் பாபங்களையெல்லாம் போக்கவல்ல தேவி மந்திரங்களை ஜபித்து அவற்றிலே மனதை லயிக்கச் செய்கிறார்கள். மலையரசனுடைய வமிசத்தை விளங்கச் செய்யும் மணி விளக்கைப்போல் ஒளிர்பவளாய், மதுராபுரியிலே கூந்தலழகு வாய்ந்த அதி ஸௌந்தரியாக வாழும் என் பிராட்டி அவ்வடிவழகாலே என்னை வணக்கமுடையவனாக்கி மனனாதி சக்திகள் ஒரு சிறிதும் வாய்க்கப்பெறாது பாபக்கேணியிலே விழுந்து பரிதபிக்கும் என்னையும் அக் கிணற்றிலே மூழ்கிப் போகாமல் கரையேற்றி விடுவாளாக.

याऽऽलीभिरात्मतनुताली सकृत्प्रियकपालीषु खेलति भय-
व्यालीनकुल्यसितचूलीभरा चरणधूलीलसन्मुनिवरा ।
वालीभृति श्रवसि तालीदलं वहति याऽलीकशोभितिलका
साऽलीकरोतु मम काली मनः स्वपदनालीकसेवनविधौ ॥ ५ ॥

யா''லீபிராத்மதனுதாலீஸக்ருத்ப்ரியகபாலீஷு கேலதி பய-
வ்யாலீநகுல்யஸிதசூலீபரா சரணதூலீலஸன்முனிவரா |
வாலீப்ருதி ச்ரவஸி தாலீதலம் வஹதியா'லீகஶோபிதிலகா
ஸா'லீகரோது மம காலீ மன: ஸ்வபதநாலீகஸேவனவிதௌ || (5)

या எவள் प्रियकपालीषु தன்காதலனான பரமசிவனுடைய (மாலையிற் கோத்த) கபாலங்களிலே आत्मतनुताली சுபாவமாகவே மெல்லிய தாளம் போடுகின்றவளாய் आलीभिः सकृत् தோழிகளோடுகூட खेलति விளையாடுகிறாளோ, या எவள் वालीभृति வாளியைப் பூணாகவுடைய श्रवसि காதிலே तालीदलं

பனைக்குருத்தோலையை **वहति** அணிந்து கொண்டிருக்கிறுளோ, **भयव्यालीनकुली** அச்சங்கள் என்னும் பாம்புகளுக்குக் கீரியாயிருக்கிறவளும் **असितचूलीभरा** கரிய கூந்தலையுடையவளும் **चरणधूलीलसन्मुनिवरा** பாததூளிகளாய் விளங்கும் முனிவரர்களையுடையவளும் **अलीकशोभितिलका** திருநெற்றியிலே பிரகாசிக்கும் திலகப் பொட்டையுடையவளுமான **सा** அந்த **काली** (கருநிறமுடையவளான) காளி தேவி **स्वपदनालीकसेवनविधौ** தன்னுடைய பாதங்களில் சேவகஞ்செய்யுங் கடமையிலே **मम मनः** என்னுடைய மனதை **अलीकरोतु** வண்டுபோல் ஈடுபட்டதாகச் செய்வாளாக.

தாமரை மலரில் உறைவதிலே வண்டு ஈடுபட்டிருப்பதைப்போல என் மனதையும் உன் பாதகமலங்களைச்சேவிப்பதிலே ஈடுபடுவதாகச் செய்யவேண்டும். அப்படி உன்னருகிலே ஸேவை செய்துகொண்டிருந்தால், ஜனன மரணுதி பயம் அனைத்தும் கீரியைக் கண்ட பாம்புகளைபோல நீங்கிப்போம்; ஆனபடியால், தலையோடுகளிலே தாளம் போட்டுக்கொண்டு சகிகளோடு நீ விளையாடுவதையும் நின் காதிலே விளங்கும் பொன்மயமான வாளிக்கு நேராய் வெறும் பனையோலைக் குருத்தை நீ உல்லாஸமாகப் பூணுவதையும் பாததூளிகளைப்போல முனிவரர்கள் உன்பாதங்களிலே இடைவருது லயித்திருப்பதையும் பாதாதிகேசமாக அமைந்த உன் பேரழகையும் அவ்வடிவழகை உன் நெற்றியில் அமைந்த திலகம் எடுத்துக் காட்டுவதையும் கண்டு களிப்பவனாய் உன் பாதமூலத்திலே விழுந்து கிடப்பேன்.

न्यङ्काकरे वपुषि कङ्कादिरक्तपुषि कङ्कादिपक्षिविषये
त्वं कामनामयसि किं कारणं हृदय पङ्कारिमेहि गिरिजाम् ।
शङ्काशिलानिशितटङ्कायमानपदसंकाशमानसुमनो-
झंकारिभृङ्गततिमङ्कानपेतशशिसंकाशिवक्त्रकमलाम् ॥ ६ ॥

ந்யங்காகரே வபுஷி கங்காதிரக்தபுஷி கங்காதிபக்ஷிவிஷயே
த்வம் காமனமயஸி கிம் காரணம் ஹ்ருதய பங்காரிமேஹி
கிரிஜாம் |
ஶங்காஶிலாநிஶிதடங்காயமானபதஸங்காஶமானஸுமனோ-
ஜங்காரிப்ருங்கததிமங்கானபேதஶஶிஸங்காஶிவக்த்ரகமலாம் ||

हृदय மனமே! **त्वं** நீ **न्यङ्काकरे** (நெளியும்) புழுக்களுக்கு உறைவிடமாயும் **कङ्कादिरक्तपुषि** கழுகு முதலிய பிராணிகளின் இரத்த மாமிசங்களால் புஷ்டியுடையதாயும் **कङ्कादि-पक्षिविषये** கழுகு முதலிய பறவைகளுக்குரிய உணவாயுமுள்ள **वपुषि** உடலின்மீது **कामनं अयसि** ஆசை கொள்கிறாய் **किं कारणं** (இதற்கு) காரணம் என்ன? **शङ्काशिला-निशितटङ्का-यमान-पदसंकाशमान-सुमनो-झंकारि-भृङ्ग-ततिम्** அச்சங்கள் என்னும் பாறைகளுக்கு (அவற்றைப் பிளக்கும்) கூரான கல்லுளிகளாகும் திருப்பாதங்களிலே விளங்கும் புஷ்பங்களில் ஜங்காரஞ் செய்யும் வண்டு வரிசைகளை யுடையவளும் **अङ्कानपेत-शशि-संकाशि-वक्त्र-कमलां** களங்கத்தோடு சேர்ந்த சந்திரனைப்போல் விளங்கும் திருமுகத் தாமரையையுடையவளும் **पङ्कारिं** பாபமயமான சேற்றிற்கு விரோதியாய் அதை முற்றும் அழிப்பவளுமான **गिरिजां** பர்வத குமாரியை **एहि** சென்றடைவாய்.

என் மனமே! நீ இவ்வுடலைப் பேணுகிறாயே, இது புழுக்கள் வாழும் கூடன்றோ? மாமிசம் முதலியவற்றால் இதனைப் போஷித்தாலும் இறுதியில் இது கழுகு முதலியவற்றிற்கே உணவாகுமன்றோ? திருடமாகக் கொண்ட அச்சங்கள் அனைத்தையும் இடித்துப் பொடியாக்கும் உளியைப் போன்றவை தேவியின் திருப்பாதங்கள் என்று அவைகளிலே அடியார்கள் அர்ச்சித்த பூமொட்டுகள் தேவியின் பாதஸ்பர்சத்தால் மலர, அம்மலர்களிலுள்ள தேனைப்பருக வண்டுகள் கூட்டங்கூட்டமாக அங்கே வந்து, தேனைப்பருகி ரீங்காரஞ் செய்கின்றன. நீயும் தேவியை நாடிச்சென்று உன் பாபங்

களாகிய சேற்றை நீக்குவதான கடாக்ஷத்தை வேண்டி, களங்கத்தோடுகூடிய சந்திர மண்டலத்தையொத்து திலகத்தோடு விளங்கும் தேவியின் திருமுகமண்டலத்தை நோக்கிக் கொண்டு அவளுடைய பாதமூலத்திலேயே கிடப்பாயாக.

कुम्बावतीसमविडम्बा गलेन नवतुम्ब्याभवीणसविधा
शं वाहुलेयशशिविम्बाभिराममुखसंबाधितस्तनभरा ।
अम्बा कुरङ्गमदजम्बालरोचिरिह लम्बालका दिशतु मे
विम्बाधरा विनतशम्बायुधादिनिकुरम्बा कदम्बविपिने ॥ ७ ॥

கும்பாவதீஸமவிடம்பா கலேன நவதும்பீயாபவீணஸவிதா
ஶம் பாஹுலேயஶஶிபிம்பாபிராமமுகஸம்பாதித-
ஸ்தனபரா ।
அம்பா குரங்கமதஜம்பாலரோசிரிஹ லம்பாலகா திஶது மே
பிம்பாதரா வினதஶம்பாயுதாதிநிகுரம்பா கதம்பவிபினே ॥

कुम्बावती-सम-विडम्बा வேட்டுவச்சி வேஷந்தரித்தவளும் **गलेननवतुम्ब्याभ-वीण-सविधा** (இன்னிசையுடைய) தன் தொண்டையால் புதிய சுரைக்காய் போன்றதாய் ஸ்வர ஸஞ்சாரத்தையுடையதான வீணையைப் போன்றவளும் **वाहुलेय-शशिविम्बाभिराम-मुख-संबाधित-स्तनभरा** முருகக் கடவுளின் சந்திரமண்டலத்தைப் போன்ற அழகிய திருமுகங்களாலே நெருக்கப்பட்ட ஸ்தனபாரத்தை யுடையவளும் **कुरङ्गमद-जम्बाल-रोचिः** (மான் மதக் குழம்பை) கஸ்தூரிக்குழம்பைப் பூசிக்கொண்டு காந்தியோடு விளங்குபவளும் **लम्बालका** நீண்ட தலைமயிரையுடையவளும் **विम्बाधरा** கோவைக் கனிபோன்ற உதடுகளையுடையவளும் **कदम्बविपिने** கடம்ப வனத்திலே **विनतशम्बायुधादि-निकुरम्बा** தன்னை வணங்கிக்கொண்டிருக்கும் தேவேந்திரன் முதலான தேவர்களின் கூட்டங்களையுடையவளுமான **मे अम्बा** என் தாயாகிய தேவி **इह** இங்கே **शं** மங்களத்தை **मे दिशतु** எனக்கு அளிப்பாளாக.

Koviloor Digital Library

கடம்பவனம் என்னுங் காட்டிலே கஸ்தூரியைப் பூசிக் கொண்டு திரியும் வேடப் பெண்ணைப்போல விளங்குகிறாள் தேவி; ஆயினும், இந்திராதி தேவர்கள் அவளை அடி வணங்கி, வீணையை யொத்ததான அவளது தொண்டையினின்றும் செங்கனி வாயின் வழியே வெளிவரும் சொற்களின்படி நடக்கக் காத்திருக்கிறார்கள். அவள் ஒக்கலிலே அணைத்துக் கொண்டிருக்கும் ஷண்முகனோ தன் ஆறுமுகங்களையும் அவளுடைய ஸ்தனங்களிலே முழுகிக்கொண்டிருக்கிறான். அவனைப் பெற்ற தாயே எனக்கும் தாயாதலால், என்னைத் தள்ளிவிடாமல் எனக்கு சகல மங்களங்களையும் அளிப்பாளாக.

इन्धानकीरमणिबन्धा भवे हृदयबन्धावतीव रसिका
संधावती भुवनसंधारणेऽप्यमृतसिन्धावुदारनिलया ।
गन्धानुभावमुहुरन्धालिपीतकचबन्धा समर्पयतु मे
शंधाम भानुमपि रुन्धानमाशु पदसंधानमप्यगसुता ॥ ८ ॥

இந்யானகீரமணிபந்யா ஹவே ஹ்ருதயபந்யாவதீவ ரஸிகா •
ஸம்யாவதீ ஹுவனஸம்யாரணே'ப்யம்ருதஸிந்யாவுதாரநிலயா ।
கந்யானுஹாவமுஹுரந்யாலிபீதகசபந்யா ஸமர்(ப்)பயது மே
ஶம்யாம ஹானுமபி ருந்யானமாஶு பதஸம்யான-
மப்யகஸுதா ॥ (8)

इन्धान-कीर-मणिबन्धा (இங்கு இருப்பதால்) பிரகாசிக்கின்ற கிளியை கைமணிக்கட்டிலே யுடையவளும் (அல்லது, கருடமணிகள் கோத்த மாலையாலே பிரகாசிப்பவளும்) **हृदयबन्धौ** காதலனான **भवे** பரமசிவனிடத்தில் **अतीव रसिका** மிகவும் இன்புறும் இயல்புடையவளும் **भुवनसंधारणे** உலகங்களைக் காப்பதிலே **संधावती** பிரதிக்ஞை செய்துகொண்டவளும் **अमृतसिन्धौ उदार-निलया** அமுதக்கடலையே சிறந்தவாஸஸ்தானமாகவுடையவளும் **गन्धानुभाव-मुहुरन्धालि-पीतकचबन्धा**

Koviloor Digital Library

(பூக்களிலுள்ள) நறுமணத்தை அனுபவிப்பதால் அடிக்கடி களிமயக்கத்தால் கண்தெரியாதவையான வண்டுகள் பரவிய மயிர் முடியையுடையவளுமான **अगसुता** பர்வதகுமாரியாகிய தேவி **भानुं अपि रूंधानं** (தன் தேஜஸினால்) சூர்யனைக்கூட அடக்குவதாயும் **शंधाम** மங்களங்களுக்கு உறைவிடமாயும் உள்ள **पदसंधानं** அடியிணையை **मे** எனக்கு **आशु** (விரைவிலே) உடனே **समर्पयतु** அளிப்பாளாக.

தேவியானவள் பர்வதராஜனுடைய மகளாய் அவதரித்து, கிளியோடு விளையாடுங் கன்னிப் பருவத்திலேயே பரமசிவனிடம் காதல் பூண்டு, அவனுடைய இல்லக்கிழத்தியாகி, அமிர்தஸாகரத்தில் வாழ்பவளாய் ஸகல வுலகங்களையும் பாதுகாப்பதென்று விரதம் பூண்டு விளங்குகின்றாள். அவளுடைய திருவடிகள் கதிரவனைக் காட்டிலும் ஒளிமிக்கவை ; மங்களங்களுக்கெல்லாம் உறைவிடமானவை. திருமுடியிற் சூடிய மலர்களின் நறுமணத்தை நாடி, அங்குள்ள மதுவையுண்டு மதம்பிடித்துக் கண் தெரியாமல் அலையும் வண்டுகளுக்கும் நறுமணங்கமழும் தன் கேசத்தையளிக்கும் தேவியானவள் உலகனைத்தையும் காப்பவள் ஆதலால், தன் பாதமலர் இரண்டையும், வேறொன்றும் வேண்டாத எனக்கு, இப்பொழுதே தந்தருளுவாள் என்பது நிச்சயம்.

Koviloor Digital Library

॥ आनन्दलहरी ॥

ஆனந்தலஹரீ

भवानि स्तोतुं त्वां प्रभवति चतुर्भिर्न वदनैः
प्रजानामीशानस्त्रिपुरमथनः पञ्चभिरपि ।
न षड्भिः सेनानीर्दशशतमुखैरप्यहिपति-
स्तदान्येषां केषां कथय कथमस्मिन्नवसरः ॥ १ ॥

1. ஹவாநி ஸ்தோதும் த்வாம் ப்ரஹவதி சதுர்ஹிர்ந வதநைஃ
ப்ரஜாநாமீஶாநஸ்த்ரிபுரமதனஃ பஞ்சஹிரபி |
ந ஷட்ஹிஃ ஸேநானீர்தஶஶதமுகைரப்யஹிபதி—
ஸ்ததாந்யேஷாம் கேஷாம் கதய கதமஸ்மின்னவஸரஃ ||

पार्वति பர்வதராஜனின் மகளே! त्वां உன்னை स्तोतुं துதிப்பதற்கு प्रजानाम् ईशानः ப்ராணிகளைப் படைத்த ப்ரும்மதேவன் चतुर्भिः वदनैः (தனது) நான்கு முகங்களாலும், न प्रभवति சக்தியுடையவனாகிறதில்லை. त्रिपुरमथनः முப்புரங்களையழித்த பரமசிவன் पञ्चभिः अपि (தனது) ஐந்து முகங்களாலும் (துதிக்கத் திறமை வாய்ந்தவனல்ல.) सेनानीः தேவஸேனையின் பதியான முருகக் கடவுளும் षड्भिः (தனது) ஆறுமுகங்களாலும் (துதிக்கத் திறமையற்றவன்.) अहिपतिः ஸர்ப்பங்களுக்குத் தலைவனான ஆதிசேஷனும் दशशतमुखैः अपि (தனது) ஆயிரம் முக மண்டலங்களைக் கொண்டும் (திறமையில்லாதவன்) तदा அப்படியிருக்க, अन्येषां केषां மற்றவர்களுக்கு अस्मिन् இந்த உன்னைத் துதிப்பது என்ற விஷயத்தில் कथं எவ்வாறு अवसरः திறமையுண்டாகும்? कथय சொல்.

Koviloor Digital Library

கருத்து :—எந்த உன்னுடைய குணங்களை யெடுத்துத் துதிக்க நான்முகனே, ஐந்து முகமுடையவனே, ஆறு முகத்தானே, அதிகம் சொல்வதாலென்ன? ஆயிரம் முகத்தைக் கொண்டு பூமியைத் தாங்கும் வல்லமையுள்ள ஆதிசேஷனே, எல்லோரும் சக்தியிழுந்திருக்கையில் அதை யெடுத்துரைக்க' ஒரே முகங் கொண்டவனும், படைக்கவோ, முப்புரங்களை யெரிக்கவோ, அசுரர்களை ஜயிக்கவோ, பூமியைத் தாங்கவோ சிறிதேனும் சக்தியற்றவனுமான மற்ற எவன்தான் வல்லவன் என்பதை நான் அறியேன். அதையும் நீயே சொல் என்று ஸ்ரீமதாசாரியர்கள் தன் வாயிலாக தேவியைத் துதிக்கின்ற பக்தர்களின் மனப்போக்கையும் வாக்கின் வன்மையையும் தெரிவிக்கிருர்.

घृतक्षीरद्राक्षामधुमधुरिमा कैरपि पदै-
र्विशिष्यानाख्येयो भवति रसनामात्रविषयः ।
तथा ते सौन्दर्यं परमशिवदृङ्मात्रविषयः
कथंकारं ब्रूमः सकलनिगमागोचरगुणे ॥ २ ॥

2. க்ருதக்ஷீர த்ராக்ஷாமது மதுரிமா கைரபி பதைர்
விசிஷ்யாநாக்யேயோ பவதி ரஸநாமாத்ரவிஷய꞉ |
ததா தே ஸௌந்தர்யம் பரமஶிவத்ருங்மாத்ரவிஷய꞉
கதங்காரம் ப்ரூம꞉ ஸகலநிகமாகோசரகுணே ||

घृत-क्षीर-द्राक्षा-मधु-मधुरिमा நெய், பால், திராக்ஷை, தேன் இவைகளின் இனிமையானது **कैरपि पदैः** எவ்விதச் சொற்களாலும், **विशिष्य** தனித்து **अनाख्येयः** சொல்வதற்கு இயலாததாய் **रसनामात्रविषयः** நாவிற்குமாத்திரமே புலப்படுவதாக **भवति** இருக்கின்றது. **तथा** அவ்விதமே **सकलनिगमागोचरगुणे** எல்லா வேதங்களுக்கும் புலப்படாத குணங்களையுடையவளே! **ते** உன்னுடைய **सौन्दर्यं** அழகு **परमशिवदृङ्मात्रविषयः** பரமசிவனது கண்களுக்குமட்டுமே புலப்பட

Koviloor Digital Library

கிறது. (அவ்வித அழகை) **कथंकारं** எத்தகையதாக **ब्रूमः** உரைப்போம் (வர்ணிப்போம்.)

கருத்து :—தேன் முதலியவைகளின் இனிப்பை நாக்கிஞல் அனுபவித்து அறியலாமே யல்லாது பிறர் சொல்லி அறியமுடியாது. அவ்விதம் அழகு என்பது கண்களாலே அனுபவிக்கக் கூடியது. உன்னுடைய அழகோ பரமசிவனது கண்களுக்கு மாத்திரம் புலஞகிறது. இந்திரியங்களுக்குப் புலஞகாத விஷயத்தை வேதத்தைக் கொண்டு அறிவது இயல்பு. அந்த வேதமும் உன்அழகை வர்ணிப்பதில் திறமை யற்றது என்று சொல்லும்பொழுது ஒன்று மறியாத மற்ற ஜனங்கள் எப்படி வர்ணிக்கமுடியும்?

குறிப்பு :—இங்கு தேவி **यतो वाचो निवर्तन्ते** என்று சொல்லப் படும் பரப்ரும்ம ரூபமாகச் சொல்லப்படுகிருள்.

मुखे ते ताम्बूलं नयनयुगले कज्जलकला
ललाटे काश्मीरं विलसति गले मौक्तिकलता ।
स्फुरत्काञ्ची शाटी पृथुकटितटे हाटकमयी
भजामि त्वां गौरीं नगपतिकिशोरीमविरतम् ॥ ३ ॥

3. முகே தே தாம்பூலம் நயனயுகலே கஜ்ஜலகலா
லலாடே காஶ்மீரம் விலஸதி கலே மௌக்திகலதா |
ஸ்புரத்காஞ்சீ ஶாடீ ப்ருதுகடிதடே ஹாடகமயீ
பஜாமி த்வாம் கௌரீம் நகபதிகிஶோரீமவிரதம் ||

ते உன்னுடைய **मुखे** வாயில் **ताम्बूलं** வெற்றிலையும் **नयनयुगले** இரு கண்களில் **कज्जलकला** மையின் கோடும் **ललाटे** நெற்றியில் **काश्मीरं** குங்குமமும் **गले** கழுத்தில் **मौक्तिकलता** மெல்லிய முத்து மாலையும் **पृथुकटितटे** பெருத்த இடைப்ரதேசத்தில் **स्फुरत्काञ्ची** ஒட்யாணத்தோடு விளங்கும் **हाटकमयी शाटी** பொன் மயமான வஸ்திரமும் **विलसति** ப்ரகாசிக்கின்

Koviloor Digital Library

றது. **नगपतिकिशोरीं** (இவ்விதமான) மலையரசனது பெண்ணுன **गौरीं त्वां** கௌரீயென்ற உன்னை **अविरतं** இடைவிடாது **भजामि** பூஜிக்கின்றேன்.

கருத்து :—தேவியினது திருமேனி சுத்தஸ்படிகம் போல் தேஜஸ்வாய்ந்ததாக ப்ரகாசித்தாலும் தாம்பூலத்தைக் கொண்டு முகத்தையும், மையைக் கொண்டு கண்களையும், குங்குமத்தைக் கொண்டு நெற்றியையும், முத்துமாலையைக் கொண்டு கழுத்தையும், பொன்னுடை ஒட்டியாணம் இவைகளைக் கொண்டு உடலையும், அறிந்து நான் எப்பொழுதும் பூஜிப்பேன்.

குறிப்பு :—**गौरी** என்பது சுத்தஸ்படிக மயமான தேவியின் உருவத்தைக் காண்பிக்கிறது. (சுத்த ஸத்வகுண வடிவம் என்று பொருள் கொள்ளலாம்.)

विराजन्मन्दारद्रुमकुसुमहारस्तनतटी-
नदद्वीणानादश्रवणविलसत्कुण्डलगणा ।
नताङ्गी मातङ्गी रुचिरगतिभङ्गी भगवती
सती शंभोरम्भोरुहचटुलचक्षुर्विजयते ॥ ४ ॥

4. விராஜன்மந்தார த்ரு மகுஸுமஹாரஸ்தனதடீ
நதத்வீணாநாதச்ரவணவிலஸத்குண்டலகணா |
நதாங்கீ மாதங்கீ ருசிரகதிபங்கீ பகவதீ
ஸதீ சம்போரம்போருஹசடுலசக்ஷுர்விஜயதே ||

विराजन्मन्दार-द्रुम - कुसुम-हार-स्तनतटी-மேலாக விளங்குகின்ற கற்பக வ்ருக்ஷத்தின் புஷ்பங்களாலான மாலையையணிந்த மார்பிலே -**नदद्वीणानादश्रवण**- ஒலிக்கின்ற வீணையின் நாதத்தைக் கேட்கின்ற காதுகளில்-**विलसत्कुण्डलगणा** ஒளிக்கும் குண்டலங்களை யுடையவளும், **नताङ्गी** சிறிது வணங்கிய சரீரத்தை யுடையவளும், **मातङ्गी** மதங்க முனிவரின் புதல்வியும், **रुचिरगतिभङ्गी** அழகிய நடைவரிசையுள்ளவளும்,

Koviloor.Digital Library

अम्भोरुहचटुलचक्षुः தாமரைபோல் மிளிரும் கண்களையுடையவளும், **शंभोः** பரமசிவனுடைய **सती** பத்தினியுமான **भगवती** ஐச்வரியம் நிரம்பிய தேவி **विजयते** வெற்றியோடு விளங்குகிருள்.

கருத்து:—**मातङ्गी** மதங்கமுனிவர் ஸங்கீத ப்ரவர்த்தகர் என்பது தெளிவானதே. அவருடைய பெண்ணுன கலையரசியும் வாத்யங்களுள் உத்தமமான வீணையை மீட்டி அனுபவிக்கிருள்.

குறிப்பு :—**सती** பாதிவ்ரத்யத்தால் ஸௌபாக்யம் என்ற ஸ்திரீகளுக்குரிய பாக்யத்தை பெற்று, வெற்றியோடு விளங்குகின்றனள்.

नवीनार्कभ्राजन्मणिकनकभूषापरिकरैः
वृताङ्गी सारङ्गीरुचिरनयनाङ्गीकृतशिवा ।
तटित्पीता पीताम्बरललितमञ्जीरसुभगा
ममापर्णा पूर्णा निरवधिसुखैरस्तु सुमुखी ॥ ५ ॥

5. நவீனார்கப்⁴ராஜன்மணிகனகபூ⁴ஷாபரிகரை:
வ்ருதாங்கீ ஸாரங்கீ ருசிரநயனாங்கீக்ருதஶிவா |
தடித்பீதா பீதாம்ப³ரலலிதமஞ்ஜீரஸுப⁴கா³
மமாபர்ணா பூர்ணா நிரவதி⁴ஸுகை²ரஸ்து ஸுமுகீ² ||

नवीनार्क-भ्राजन्मणि-कनक-भूषापरिकरैः இளம்ஸூரியன் போல் ஒளிக்கின்ற மணிகளாலிழைக்கப்பெற்ற பொன்னுபரணங்களின் தொகுதிகளால் **वृताङ्गी** சூழப்பட்ட அவயவங்களை யுடையவளும், **सारङ्गीरुचिरनयनाङ्गीकृतशिवा** பெண்மானின் விழிகள் போன்ற விழிகளால் சிவபெருமானையும் வசப்படுத்தியவளும், தென்பக்கத்திலே வைத்துக்கொண்டவளும், **तटित्पीता** மின்னல்போல் பொன்னிறங் கொண்டவளும் **पीताम्बर-ललितमञ्जीरसुभगा** செம்பொன்னிற ஆடையால் அழகுபெற்ற பாதஸரத்தால் சிறந்து விளங்குபவ

Koviloor Digital Library

ளும், **निरवधिसुखैः** எல்லைகடந்த இன்பங்களால் **पूर्णा** நிரம்பிய வளுமான **अपर्णा** பார்வதி தேவியானவள் **सुमुखी** அன்பு மிகுந்த முகமுடையவளாக **मम** எனக்கு (துணையாக) **अस्तु** இருக்கட்டும்.

கருத்து :—இங்கு பாதஸரத்தையும் முகமண்டலத்தையும் குறித்துக் காண்பித்ததால் தேவியினது பாதத்தில் பணிந்த பக்தன் அவளுடைய கடாக்ஷத்திற்கு பாத்திரமாகிறான்.

குறிப்பு :—**अपर्णा** பார்வதி, பரமசிவனையே பர்த்தாவாக அடைய விரும்பி தவம் புரியுங்கால் இலையைக்கூட புசியாமல் இருந்ததால் இந்தப் பெயர் வழங்கலாயிற்று என காளிதாஸன் கூறுகிறான்.

हिमाद्रेः संभूता सुललितकरैः पल्लवयुता
सुपुष्पा मुक्ताभिर्भ्रमरकलिता चालकभरैः ।
कृतस्थाणुस्थाना कुचफलनता सूक्तिसरसा
रुजां हन्त्री गन्त्री विलसति चिदानन्दलतिका ॥ ६ ॥

6. ஹிமாத்ரே: ஸம்பூதா ஸுலலிதகரை: பல்லவயுதா
ஸுபுஷ்பா முக்தாபிர் ப்ரமரகலிதா சாலகபரை: |
க்ருதஸ்தாணுஸ்தானா குசபலநதா ஸூக்திஸரஸா
ருஜாம் ஹந்த்ரீ கந்த்ரீ விலஸதி சிதானந்தலதிகா ||

हिमाद्रेः संभूता பனி மலையில் உண்டானதும் **सुललितकरैः पल्लवयुता** மிக்க அழகு வாய்ந்த கைகளால் தளிர்களையுடையதும் **मुक्ताभिः सुपुष्पा** முத்துக்களால் அழகான புஷ்பங்களையுடையதும், **अलकभरैः भ्रमरकलिता** அலக பாரத்தால் வண்டுகளால் சூழப்பெற்றதும் **कृतस्थाणुस्थाना** மரத்தில் படர்ந்து நிற்பதும், **कुचफलनता** ஸ்தனங்களாகிய பழத்தால் சிறிது வளைந்திருப்பதும், **सूक्तिसरसा** நன்மொழிகள் என்ற ரஸமுள்ளதும் **रुजां हन्त्री** எவ்வித வியாதியையும் போக்க வல்லமையுள்ளதும், **गन्त्री** செல்லும் தன்மை வாய்ந்தது

Koviloor Digital Library

மான **चिदानन्दलतिका** சித் என்ற பெயர் பெற்று நித்யானந்தத்தையளிக்கும் கொடி **विलसति** முக்காலத்துமழிவற்றதாக விளங்குகிறது.

கருத்து :—தேவி ஹிமவானின் புதல்வியாகப் பிறந்து தளிருக்கொப்பான கைகளைப் பெற்று, புஷ்பம் போன்ற முத்துமாலை யணிந்து, வண்டுகளின் வரிசை போன்ற முன்னுச்சி சுருட்டைக் கூந்தலுடையவளாய், என்றுமழிவற்ற சிவனையே இருப்பிடமாகக் கொண்டு, ஸ்தனபாரத்தால் சிறிது வணங்கி நின்று, நவரஸம் பொருந்திய வாக்கைப் பெற்று, ஸம்ஸாரமென்ற பெரும் வியாதியை அறவே நீக்கி, எங்கும் எப்பொழுதும் வியாபித்து விளங்குகிறாள் என்ற பொருள் மறைவாகச் சொல்லப்பட்டது.

குறிப்பு :—**चिदानन्दलतिका, विलसति** என்பதால் உபநிஷத்தில் ப்ரஸித்தமான ஸத், சித், ஆனந்தம் வடிவான பரப்ருஹ்ம ஸ்வரூபம் என்ற பொருள் தெரிகிறது. கேனோபநிஷத்தில் ப்ரப்ருஹ்மத்தை தேவியின் உருவாகவும் சொல்லப்பட்டது கவனிக்கத்தக்கது.

सपर्णामाकीर्णां कतिपयगुणैः सादरमिह
श्रयन्त्यन्ये वल्लीं मम तु मतिरेवं विलसति ।
अपर्णैका सेव्या जगति सकलैर्यत्परिवृतः
पुराणोऽपि स्थाणुः फलति किल कैवल्यपदवीम् ॥ ७ ॥

7. ஸபர்ணாமாகீர்ணாம் கதிபய குணைஃ ஸாதரமிஹ
ச்ரயந்த்யன்யே வல்லீம் மம து மதிரேவம் விலஸதி |
அபர்ணைகா ஸேவ்யா ஜகதி ஸகலைர்யத்பரிவ்ருதஃ
புராணோ'பி ஸ்தாணுஃ பலதி கில கைவல்யபதவீம் ||

इह இவ்வுலகில் **अन्ये** பிறர் **सपर्णां** இலைகளையுடையதும் **कतिपयगुणैः** சில குணங்களாலே **आकीर्णां** சூழப்பெற்றதுமான (குணங்கள் சிலதே பொருந்தியதும்) **वल्लीं** கொடியை (மூலிகையை) **सादरं** பிரியத்தோடு **श्रयन्ति** தேடிச் செல்கின்றனர்.

मम तु मतिः என்னுடைய மனமோ **एवं** இவ்விதம் **विलसति** விளங்குகின்றது (நினைக்கிறது.) (எவ்வாறெனில்) **जगति** இவ்வுலகில் **सकलैः** அனைவராலும் **अपर्णा** இலையில்லாத (அபர்ணா என்ற பெயர்கொண்ட தேவி) **एका** ஒன்றே (ஒருவளே) **सेव्या** ஔஷதமாக உட்கொள்ளத்தக்கது. (சரணடையத்தக்கவள்.) **यत्परिवृतः** எந்த கொடியினால் சூழப்பட்டு (எந்த தேவியினது ஸம்பந்தம் பெற்று) **पुराणः** பட்டுப்போன **स्थाणुरपि** மரமும், (அநாதியானசிவனும்) **कैवल्यपदवीं** அபூர்வமான நிலைமையை **फलति किल** (பெற்று) பழுக்கின்றதன்றோ (மோக்ஷ மார்க்கத்தையும் அளிக்கிறார்).

கருத்து :—உலகிலனைவரும் தன் நோயைத் தீர்க்க மூலிகையை தேடிச் செல்கிறார்கள். என் மனமோ தீராதவியாதியையும் (ஸம்ஸாரத்தையும்) தீர்த்துவைக்கும் மூலிகை போன்ற தேவியையே நாடிச் செல்கிறது. இம்மருந்து மூலிகை, பட்டுப்போன மரத்தையும் தளிர்க்கச் செய்து பிறர்க்கும் பழங்களையளிக்கும் சக்தியைக் கொடுத்தது என்பதே எனக்கு அத்தாக்ஷியாகும். அதாவது பரமசிவன் தேவியின் சம்பந்தத்தாலே விளங்கி நின்று கைவல்யமென்ற மோக்ஷத்தையும் அளிக்கின்றான்.

विधात्री धर्माणां त्वमसि सकलाम्नायजननि
त्वमर्थानां मूलं धनदनमनीयांघ्रिकमले ।
त्वमादिः कामानां जननि कृतकन्दर्पविजये
सतां मुक्तेर्बीजं त्वमसि परमब्रह्ममहिषि ॥ ८ ॥

8. வியாத்ரீ யர்மாணாம் த்வமஸி ஸகலாம்நாயஜநநி
த்வமர்த்யாநாம் மூலம் யநதநமனீயாங்க்ரிகமலே |
த்வமாதி: காமாநாம் ஜநநி க்ருதகந்தர்பவிஜயே
ஸதாம் முக்தேர்வீஜம் த்வமஸி பரமப்ரஹ்மமஹிஷி ||

सकलाम्नायजननि எல்லா வேதங்களுக்கும் காரணமாக இருப்பவளே! **त्वं** நீ **धर्माणां** வர்ணாச்ரமதர்மங்களை **विधात्री**

Koviloor Digital Library

ஏற்படுத்தியவளாக **असि** இருக்கிறாய். **धनद-नमनीयांघ्रिकमले** குபேரனாலும் பணியத்தகுந்த பாதகமலங்களையுடையவளே! **त्वं** நீ **अर्थानां मूलं** பொருள்களுக்கும் ஆதிகாரணமாக (இருக்கிறாய்) **कृतकन्दर्पविजये जननि** மாரனையும் வென்ற தாயே! **त्वं** நீ **कामानाम् आदिः** இன்பத்திற்கும் முதல் காரணமாக (இருக்கிறாய்.) **परमब्रह्ममहिषि** பரம்பொருளான சிவத்தின் மஹிஷியே! **त्वं** நீ **सतां** ஞானிகளுக்குரிய **मुक्तेः बीजं** மோக்ஷத்திற்கு வித்தாகவும் (இருக்கிறாய்.)

கருத்து :—அறம், பொருள், இன்பம், வீடுஎன்ற நான்கு புருஷார்த்தங்களுக்கும் தேவியே காரணம். வேதத்தை வகுத்து தர்மங்களை விதித்தவளும் அவளே. செல்வத் தலைவனுக்கும் செல்வமளித்தது அவளே. காமனை வென்று கரும்பை கையில் ஏந்தியவளும் அவளே, காமனை வென்ற காலகாலனையும் வசப்படுத்தியவள் அவளே. ஞானிகள் மோக்ஷம் பெற காரணமும் அவளே. அந்த தேவியையே பணிந்து நாமும் நான்கு புருஷார்த்தைங்களையும் பெறுவோமாக.

प्रभूता भक्तिस्ते यदपि न ममालोलमनस-
स्त्वया तु श्रीमत्या सदयमवलोक्योऽहमधुना ।
पयोदः पानीयं दिशति मधुरं चातकमुखे
भृशं शङ्के कैर्वा विधिभिरनुनीता मम मतिः ॥ ९ ॥

9. ப்ரபூதா பக்திஸ்தே யதபி ந மமாலோலமனஸ
ஸ்த்வயா து ஸ்ரீமத்யா ஸதயமவலோக்யோ'ஹமதுனா |
பயோதஃ பானீயம் திஶதி மதுரம் சாதகமுகே
ப்ருஶம் ஶங்கே கைர்வா விதிபிரனுனீதா மம மதிஃ ||

आलोलमनसः கலங்கிய மனதையுடைய **मम** எனக்கு **ते** உன்னிடம் **प्रभूता भक्तिः** மிகுதியான பக்தி **यदपि न** இல்லையாயினும் **अहं** நான் **अधुना** இப்பொழுதே **श्रीमत्या** கருணையுடைய

Koviloor Digital Library

வளான **त्वया** உன்னால் **सदयं** தயைகூர்ந்து **अवलोक्यः** கடாக்ஷிக்குத் தகுந்தவன் (எப்படியெனில்) **पयोदः** நீருண்ட மேகமானது **चातकमुखे** சாதகபக்ஷியின் வாயில் **मधुरं पानीयं** இனிப்பான நீரை **दिशति** கொடுக்கிறதோ. **मम** என்னுடைய **मतिः** மனமானது **कैर्वा विधिभिः** எந்த வகையால்தான் **अनुनीता** வசமாக்கப்பட்டதாக (ஆகுமோ என்று) **भृशं** மிகவும் **शङ्के** சந்தேஹப்படுகின்றேன்.

கருத்து :—எவ்வாறு சாதகப் பறவை மேகத்தை எதிர்பார்த்து வானத்தை நோக்கி யிருக்குங்கால் மேகம் ஜலத்துளியை அதன் முகத்தில் வார்க்கிறதோ, அவ்வாறே நீயும் தயை செய்து சாதகம் போலுமில்லாது அலைந்து சுழன்று, நினது பக்தியில் ஈடுபடாத என் மனதை எவ்வகையிலாவது உன் வழிபாட்டில் நிறுத்திக் கடாக்ஷிப்பாயாக.

कृपापाङ्गालोकं वितर तरसा साधुचरिते
न ते युक्तोपेक्षा मयि शरणदीक्षामुपगते ।
न चेदिष्टं दद्यादनुपदमहो कल्पलतिका
विशेषः सामान्यैः कथमितरवल्लीपरिकरैः ॥ १० ॥

10. க்ருபாபாங்காலோகம் விதர தரஸா ஸாதுசரிதே
ந தே யுக்தோபேக்ஷா மயி ஶரணதீக்ஷாமுபகதே |
ந சேதிஷ்டம் தத்யாதநுபதமஹோ கல்பலதிகா
விஶேஷ: ஸாமாந்யை: கதமிதரவல்லீபரிகரை: ||

साधुचरिते நன்னடத்தையுள்ளவளே! **शरणदीक्षाम् उपगते** நின்னை அடைக்கலமென வ்ரதம் கொண்டு அடைந்த **मयि** என் விஷயத்தில் **कृपापाङ्गालोकं** கருணைக்கிடமான கடைக்கண் பார்வையை **तरसा** விரைவாக **वितर** தந்தருள்வாயாக. **ते** உனக்கு **उपेक्षा** (சரண்புகுந்தவர்களை) தள்ளுவது (அலக்ஷ்யம் செய்வது) **न युक्ता** தகாததன்றோ. **कल्पलतिका** கற்பகக்கொடி **इष्टं** தன்னை அடைந்தவர்களின் விருப்பத்தை **अनुपदं**

Koviloor Digital Library

அடிக்கடி **न दद्यात् चेत्** அளிக்காவிடில் **सामान्यैः इतरवल्लीपरिकरैः** எங்கும் ஸுலபமான சாதாரண மற்ற கொடிக் கும்பல்க ளோடு (அவைகளைக் காட்டிலும்) **विशेषः कथं** பேதம் என்ன? (மேன்மை எப்படி வரும்)

கருத்து :—சரண்புகுந்தவன் நீசனுயினும் பெரியோர் களுக்கு அவனைக் காப்பதும் கடைமையன்ரே. கற்பகக் கொடி எப்பொழுதாயினும் யாராயினும் அடிக்கடி கேட்போ ராயினும் அவர்களின் இஷ்டத்தை பூர்த்தி செய்வதல்லவோ அதன் சிறப்பு! அப்படியிருக்குங்கால் அடைக்கலம் புகுந்த யான் எவ்வாருயினன் என்பதை ஆலோசியாமல் சீக்கிரமே கருணை புரிந்து கடாக்ஷிப்பாயாக.

महान्तं विश्वासं तव चरणपङ्केरुहयुगे
निधायान्यन्नैवाश्रितमिह मया दैवतमुमे ।
तथाऽपि त्वच्चेतो यदि मयि न जायेत सदयं
निरालम्बो लम्बोदरजननि कं यामि शरणम् ॥ ११ ॥

11. மஹாந்தம் விஶ்வாஸம் தவ சரணபங்கேருஹயுகே
நிதாயாந்யந்நைவாஶ்ரிதமிஹ மயா தைவதமுமே |
ததாபி த்வச்சேதோ யதி மயி ந ஜாயேத ஸதயம்
நிராலம்போ லம்போதரஜனனி கம் யாமி ஶரணம் ||

उमे உமையே! **तव** உன்னுடைய **चरणपङ्केरुहयुगे** பாதார விந்தங்களிரண்டிலும் **महान्तं विश्वासं** அதிக நம்பிக்கையை **निधाय** வைத்து **अन्यत् दैवतं** வேறு (எந்த) தெய்வமும் **इह** இப்பிறப்பில் **मया** என்னுல் **नैव आश्रितं** சரண் என்று அடையப்பெறவில்லை. **तथाऽपि** அவ்வாருயினும் **त्वच्चेतः** நினது மனமானது **मयि** என்னிடத்தில் **सदयं** கருணையுள்ள தாக **न जायेत यदि** ஆகாதென்ருல் **लम्बोदरजननि** விநாயகரை ஈன்றெடுத்த தேவி! **निरालम्बः** பற்றுக்கோடு பெருத யான் **कं** யாரை **शरणं** ரக்ஷகனுக **यामि** அடைவேன்?

கருத்து :—உலகில் யாவரும் நற்கதி பெற கடவுளைச் சரண்புகுருவது ஸஹஜம். அதில் ஒரே தெய்வத்தை நம்பி அதன் மூலமாக நற்கதியடைகின்றனர். நானோ அவ்விதம் உன்னையே நம்பி மற்ற தேவதையை நினைக்கவேயில்லை, அப்படியிருக்க நீயும் என்மேல் கருணை கொள்ளாவிடில் அதோ கதி யடைவேன் என்பது நிச்சயம். ஆனால் உன் கடாக்ஷத்திற்கு இடையூறு இருப்பினும் அவைகளை விலக்கும் சக்தி உன்னிடமே உள்ளது. அதனால் இடையூறுகளை யகற்றி கருணைகூர்ந்து என்னை கடாக்ஷித்தருள்வீராக.

குறிப்பு :—**लम्बोदरजननि** விநாயகரின் தாயே! விக்னங்களுக்கும் அதன் விலக்கிற்கும் காரணம் விநாயகரே. அவரை பெற்றடுத்த உன்னிடம் உள்ள குணங்களே அவரிடம் காண்கின்றது.

अयःस्पर्शे लग्नं सपदि लभते हेमपदवीं
यथा रथ्यापाथः शुचि भवति गङ्गौघमिलितम् ।
तथा तत्तत्पापैरतिमलिनमन्तर्मम यदि
त्वयि प्रेम्णा सक्तं कथमिव न जायेत विमलम् ॥ १२ ॥

12. அயஸ்பர்ஶே லக்நம் ஸபதி லஹதே ஹேமபதவீம்
யதா² ரத்²யாபாத²: ஶுசி ஹவதி கங்கௌகமிலிதம் |
தயா² தத்தத்பாபைரதிமலிந மந்தர்மம யதி
த்வயி ப்ரேம்ணா ஸக்தம் கத²மிவ ந ஜாயேத விமலம் ||

यथा எவ்விதம் **अयः** இரும்பு **स्पर्शे** பரிசவேதியில **हेमपदवीं** பொன்னின் தன்மையை **लभते** அடைகின்றதோ, **रथ्यापाथः** தெருவிலுள்ள அசுத்த ஜலமும் **गङ्गौघमिलितं** கங்கா ப்ரவாஹத்தோடு கலந்ததாய் **शुचि भवति** புனிதமாகின்றதோ. **तथा** அவ்விதமே **तत्तत्पापैः** (பல பிறப்பெடுத்துச்செய்த) அந்தந்த பாபங்களால் **अतिमलिनं** மிக்க தோஷம் படைத்திருக்கிற **मम अन्तः** என்னுடைய உள்ளம் **त्वयि** உன்னிடம் **प्रेम्णा** பக்தியால் **सक्तं यदि** கலந்துவிட்டால் **कथमिव** என் **विमलं** அழுக்கு நீங்கிச் சுத்தமாக **न जायेत** ஆகாதிருக்கும்?

Koviloor Digital Library

கருத்து :—உலகில் மிகத் தாழ்ந்த வஸ்துவும் மிகச்சிறப்பான வஸ்துவின் சேர்க்கையால் மேலான நிலைமையை அடைகிறது. அவ்விதம் என் மனமோ எவ்வித தோஷமுள்ளது என்பது சொல்ல இயலாது. அதுவும் உன்னுடைய சேர்க்கையால் புனிதமாகும் என்பதில் ஐயமில்லை.

त्वदन्यस्मादिच्छाविषयफललाभे न नियम-
स्त्वमज्ञानामिच्छाधिकमपि समर्था वितरणे ।
इति प्राहुः प्राञ्चः कमलभवनाद्यास्त्वयि मन-
स्त्वदासक्तं नक्तंदिवमुचितमीशानि कुरु तत् ॥ १३ ॥

13. த்வதந்யஸ்மாதிச்சாவிஷயஹலலாபே ந நியம -
ஸ்த்வமஜ்ஞானமிச்சாதிகமபி ஸமர்த்தா விதரணே |
இதிப்ராஹு: ப்ராஞ்ச: கமலபவனாத்யாஸ்த்வயி மன-
ஸ்த்வதாஸக்தம் நக்தம்திவமுசிதமீசானி குரு தத் ||

त्वदन्यस्मात् உன்னைத் தவிர்த்து மற்றவரிடமிருந்து **इच्छाविषयफललाभे** விருப்பத்திற்கு விஷயமான பலனை அடைவதில் **न नियमः** உறுதி (சொல்வதற்கு) இல்லை. **त्वं** நீ **अज्ञानां** அறிவில்லாதவர்களுக்கு **इच्छाधिकमपि** விருப்பத்திற்கு அதிகமாகவே **वितरणे** கொடுப்பதில் **समर्था** சக்தி வாய்ந்தவள் **इति** என்று **त्वयि** உன் விஷயத்தில் **कमलभवनाद्याः** சதுர்முகன் முதலான **प्राञ्चः** நம் முன்னோர்கள் **प्राहुः** நிச்சயமாகச் சொல்கின்றனர். **तत्** ஆகையால் **ईशानि** இறைவனின் பத்னியே! **मनः** என் மனதை **नक्तंदिवं** அல்லும் பகலும் **त्वदासक्तं** உன்னிடத்தில் பற்றுள்ளதாகவும் **उचितं** உனக்கு அனுகூலமாகவும் **कुरु** செய்துகொள்வீராக.

கருத்து :—தேவதைகளில் சிலர் பக்தர்கள் விரும்பியதையே யளிக்கின்றனர். நீயோ விரும்பியதை யளிப்பதோடு, வேண்டவுமறியாத என்னைப் போன்றவர்களுக்கு விருப்பத்தையும், அதற்கு அதிகமும் அளிக்கிறாய் என்பதை

நம் முன்னோர்கள் அனுபவித்தறிந்து பிறருக்கும் உபதேசிக்கிறார்கள். அதனால் அறியாத என் மனதை நீயே உன்னிடம் ஈடுபடச் செய்து அருளும் புரியவேண்டும்.

குறிப்பு :—ईशानि ஈசனின் மனைவியே! ஞானியையும் அஜ்ஞானிகளையும் அடக்கி ஆளுவதற்கு கடமைப்பட்டுள்ள ஈசனின் மனைவியானதால் நீயே சக்திவாய்ந்தவள்.

स्फुरन्नानारत्नस्फटिकमयभित्तिप्रतिफलत्-
त्वदाकारं चञ्चच्छशधरकलासौधशिखरम् ।
मुकुन्दब्रह्मेन्द्रप्रभृतिपरिवारं विजयते
तवागारं रम्यं त्रिभुवनमहाराजगृहिणि ॥ २४ ॥

14. ஸ்ஃபுரந்நாநாரத்னஸ்ஃபடிகமயபித்திப்ரதிஃபலத்-
த்வதாகாரம் சஞ்சச்சசதரகலாஸௌதசிகரம் |
முகுந்தப்ரஹ்மேந்த்ரப்ரப்ருதிபரிவாரம் விஜயதே
தவாகாரம் ரம்யம் த்ரிபுவனமஹாராஜக்ருஹிணி ||

त्रिभुवन-महाराज-गृहिणि மூவுலகிற்கும் சக்ரவர்த்தியாக விளங்கும் பரமசிவனின் மனைவியே! तव உன்னுடைய रम्यं அழகு பொருந்திய अगारं மாளிகையானது स्फुरन्नानारत्न-स्फटिकमय-भित्ति-प्रतिफलत्त्वदाकारं ஒளிவீசுகின்ற பலவகையான ரத்னங்களால் இழைக்கப்பெற்ற ஸ்படிகரூபமான சுவற்றில் ப்ரதிபலிக்கின்ற உனது வடிவத்தையுடையதாகவும் चञ्चच्छ-शधरकला-सौधशिखरं சந்திரகலை செல்லக்கூடிய மாளிகையின் உச்சியை யுடையதும் मुकुन्दब्रह्मेन्द्रप्रभृतिपरिवारं விஷ்ணு, ப்ரும்மன், இந்திரன் முதலானவர்களை பரிவாரமாகவுடையதாகவும் विजयते சிறந்து விளங்குகின்றது.

கருத்து :—மூவுலகச் சக்ரவர்த்தியின் மனைவியே! உன் திருமாளிகையின் அழகை என்னென்றுரைப்பேன். சந்திர மண்டலத்தையும் உலாவிச் செல்கின்றன மேல் மாடியின் சிகரங்கள். விஷ்ணு, ப்ரும்மா, இந்திரன் முதலான மூர்த்தி

விசேஷங்கள் நினது உத்திரவை எதிர்பார்க்கின்றனர். மஹாராணியைக் காணவந்தவர்கள் சுற்றுப்புரமுள்ள ரத்ன மிழைத்த ஸ்படிகச் சுவற்றில் நினது ப்ரதிபிம்பத்தைக் கண்டு பிம்பமெது வெது எதை வணங்குவோம் என வியப்பை யடைகின்றனர்.

குறிப்பு:—**त्रिभुवनमहाराजगृहिणि** மூவுலக மஹாராணிக்கு இந்த மாளிகையே உசிதமானது.

निवासः कैलासे विधिशतमखाद्याः स्तुतिकराः
कुटुम्बं त्रैलोक्यं कृतकरपुटः सिद्धिनिकरः ।
महेशः प्राणेशस्तदवनिधराधीशतनये
न ते सौभाग्यस्य क्वचिदपि मनागस्ति तुलना ॥ १५ ॥

15. நிவாஸ꞉ கைலாஸே விதிஶதமகாத்யா꞉ ஸ்துதிகரா꞉
குடும்பம் த்ரைலோக்யம் க்ருதகரபுட꞉ ஸித்திநிகர꞉ |
மஹேஶ꞉ ப்ராணேஶஸ் தத³வநிதராதீஶதநயே
ந தே ஸௌபாக்³யஸ்ய க்வசித³பி மநாகஸ்தி துலநா ||

निवासः வஸிப்பதோ **कैलासे** வெள்ளி மலையில் **स्तुतिकराः** துதிப்பவர்களோ **विधिशतमखाद्याः** பிரமன் இந்திரன் முதலானவர்கள். **कुटुम्बं** குடும்பமோ **त्रैलोक्यं** மூவுலகம். **कृतकरपुटः** கை கூப்பிக்கொண்டு நிற்பதோ **सिद्धिनिकरः** அணிமாதி ஸித்திகளின் கூட்டம். **प्राणेशः** ப்ராணநாதனோ **महेशः** பரமசிவன். **तत्** ஆகையால் **अवनिधराधीशतनये** மலையரசனின் மகளே! **ते** உன்னுடைய **सौभाग्यस्य** உயர்ந்த செல்வத்திற்கு **तुलना** ஈடு **क्वचिदपि** எங்கேயும் **मनाक्** சிறிதேனும் **नास्ति** இல்லை.

கருத்து:—ஸௌபாக்யவதியான மாந்தர்கள் என்பதற்கு அடையாளங்கள் உயர்குலத்தில் பிறப்பு, சிறந்த தலத்தில் வாஸம், பெரியதான குடும்பம், நல்ல பர்த்தாவை யடைதல், எவ்வித செல்வத்தையும் பெறுதலன்றோ! தேவியே! நீயோ

சக்ரவர்த்தி திருமகள், உனக்கு பர்த்தாவோ பரமேசன், குடும்பமோ மூன்று உலகம், கையிலோ அஷ்டஸித்திகள், உத்திரவை எதிர்பார்த்து நிற்பவர்களோ உலகைப் படைக்க வல்லமையுள்ள பிருமனும் தேவபதியான இந்திரனும், இந்த ஸௌபாக்யம் பெற்றவர்கள் மற்ற யாரும் உளரோ? ஒருவருமில்லை.

वृषो वृद्धो यानं विषमशनमाशा निवसनं
श्मशानं क्रीडाभूः भुजगनिवहो भूषणविधिः ।
समग्रा सामग्री जगति विदितैव स्मररिपोः
यदेतस्यैश्वर्यं तव जननि सौभाग्यमहिमा ॥ ॥ १६ ॥

16. வ்ருஷோ வ்ருத்தோ யானம் விஷமஶனமாஶா நிவஸனம்
ஶ்மஶானம் க்ரீடாபூர் புஜகநிவஹோ பூஷணவிதி: |
ஸமக்ரா ஸாமக்ரீ ஜகதி விதிதைவ ஸ்மரரிபோ-
ர்யதேதஸ்யைஶ்வர்யம் தவ ஜனனி ஸௌபாக்யமஹிமா ||

स्मररिपोः மதனனை வென்ற மஹேசனுக்கு **यानं** வாகனமோ **वृद्धःवृषः** கிழக்காளை; **अशनं** உணவோ **विषम्** நஞ்சு; **निवसनं** ஆடையோ **आशा** திசை; **क्रीडाभूः** (தங்கி) விளையாடுமிடமோ **श्मशानं** சுடுகாடு; **भूषणविधिः** ஆபரண வகையோ **भुजग निवहः** பாம்புக் கூட்டம்; (இவ்விதமான) **सामग्री समग्रा** (அவருடைய) அனுபவ ஸாதனங்கள் யாவும் **जगति** உலகில் **विदितैव** (எல்லோராலும்) அறியப்பட்டதே. (ஆயினும் இவ்வாறிருக்க) **जननि** தாயே **एतस्य** இவருக்கு **यत् ऐश्वर्यं** ஈச்வரத் தன்மை இருக்கிறதென்பது **तव** உன்னுடைய **सौभाग्यमहिमा** ஸௌபாக்கியத்தின் சிறப்பன்றோ

கருத்து :—தேவியே! உன்னுடைய ஸௌபாக்யத்தின் பெருமையை எவ்வாறு உரைப்பேன். ஏறிச் செல்லத்தக்க வாகனமற்றவனும், தகாத வுணவுள்ளவனும், திகம்பரனும், செல்லத்தகாத இருப்பிடத்தை வாஸமாகக் கொண்டவனும்,

பாம்புகளை அணியாகப் பூண்டவனுமான உன் பர்த்தாவிற்கு ஈச்வரன் என்ற பெயர் ஏற்படுவதற்குக் காரணம் உனது ஸௌபாக்யமன்ரே?

குறிப்பு:—**सौभाग्यं** மாந்தர்கள் நல்லபர்த்தாவையடைந்து செல்வங்களோடு இருப்பது பாக்யமாகும். தானும் செல்வத்தை யனுபவிப்பதோடு பர்த்தாவையும் நல்ல நிலைமையில் வைத்து சந்தோஷப்படுவது ஸௌபாக்யம் அந்த ஸௌபாக்யம் தேவிக்குத்தான் பொருந்தியது என்று இரண்டு ச்லோகத்திலும் த்ருடமாகச் சொல்கிறுர்.

अशेषब्रह्माण्डप्रलयविधिनैसर्गिकमतिः
श्मशानेष्वासीनः कृतभसितलेपः पशुपतिः ।
दधौ कण्ठे हालाहलमखिलभूगोलकृपया
भवत्याः संगत्याः फलमिति च कल्याणि कलये ॥ १७॥

17. அசேஷப்ரஹ்மாண்டப்ரலய விதிநைஸர்கிகமதி:
ச்மசாநேஷ்வாஸீந: க்ருதபஸிதலேப: பசுபதி: |
ததௌ கண்டே ஹாலாஹலமகிலபூகோலக்ருபயா
பவத்யா: ஸங்கத்யா: பலமிதிச கல்யாணி கலயே ||

कल्याणि ஸர்வமங்களரூபிணியே! **अशेषब्रह्माण्ड-प्रलयविधि-नैसर्गिकमतिः** ப்ரும்மாண்டம் முழுமையும் அழிப்பது என்ற காரியத்தில் இயற்கையான மனமுள்ளவராயும், **श्मशानेषु आसीनः** சுடுகாடுகளிலே வீற்றிருந்து **कृतभसितलेपः** அங்குள்ள சாம்பலை பூசிக்கொண்டவராயுமிருக்கிற **पशुपतिः** பசுக்களுக்குப் பதியாக இருப்பவர் (பரமசிவன்) **अखिलभूगोल-कृपया** (எந்த ப்ரும்மாண்டங்களை யழித்து சுடிலில் எரித்து சாம்பலை பூசிக்கொண்டிருக்கிருரோ) அதே பூமண்டங்களினிடத்துக் கருணையால் **हालाहलं** காலகூட விஷத்தை **कण्ठे** தனது கழுத்திலேயே **दधौ** வைத்துகொண்டார் (என்பது) **भवत्याः** தங்களுடைய **संगत्याः फलं** சேர்க்கையின் பயனே **इति च** என்பதை **कलये** நன்கு உணர்கிறேன்.

கருத்து :—எல்லோருக்கும் மங்களம் பொங்கச்செய்யும் குணமுடைய உன்னுடைய சேர்க்கையால் பரமேச்வரனது இயற்கை குணமான லோக ஸம்ஹாரம் முதலியதும் மாறி விட்டது. அவ்விதமே பலவித தோஷம் பெற்ற என்னுடைய மனதிலும் பக்தி என்ற ஸம்பந்தத்தைக் கொண்டு தோஷங்களை விலக்கி பூததயை முதலிய உத்தம குணங்கள் நிறையச் செய்து நற்கதி பெர அருள்புரிவீராக.

குறிப்பு :—कल्याणि மங்களரூபிணி! பக்தர்களின் அமங்களங்களை அகற்றி மங்களங்களைக் கொடுப்பவள்.

त्वदीयं सौन्दर्यं निरतिशयमालोक्य परया
भियैवासीद्गङ्गा जलमयतनुः शैलतनये ।
तदेतस्यास्ताम्यद्वदनकमलं वीक्ष्य कृपया
प्रतिष्ठामातेने निजशिरसि वासेन गिरिशः ॥ १८ ॥

18. த்வதீயம் ஸௌந்தர்யம் நிரதிஶயமாலோக்ய பரயா
ஹியைவாஸீத்கங்கா ஜலமயதனுः ஶைலதநயே |
தடேதஸ்யாஸ்தாம்யத்வதநகமலம் வீக்ஷ்ய க்ருபயா
ப்ரதிஷ்டாமாதேநே நிஜஶிரஸி வாஸேந கிரிஶः ||

• शैलतनये பர்வதராஜனின் மகளே! त्वदीयं உன்னுடையதான निरतिशयं सौन्दर्यं எல்லையற்ற வடிவழகை आलोक्य நன்றாகக் கண்டு गङ्गा கங்கையானவள் परया भियैव அதிக பயத்தாலேயே जलमयतनुः (வேர்த்து) ஜலமயமான சரீரத்தையுடையவளாக आसीत् ஆனாள். (तत् அதனால்) एतस्याः இவளுடைய तत् ताम्यत् वदनकमलं பயந்து வாடி வருந்தும் அந்த தாமரை போன்ற முகத்தை कृपया वीक्ष्य தயையோடு பார்த்து गिरिशः (நினது கணவரான) பரமசிவன் निजशिरसि தன்னுடைய தலையில் वासेन வஸிப்பதால் प्रतिष्ठां நிலையுள்ள நிலைமையை आतेने செய்தார்.

கருத்து :—உன்னுடைய வடிவழகைக் கண்டு பயந்து நீராக உருகுகிற கங்கையை கருணையோடு தன் ஜடையில் சிவன் வைத்துக் கொண்டார். அந்த கருணைக்கும் உன்

சேர்க்கையே காரணம் என சொல்லவேண்டியிருக்கிறது. பயந்தவர்களுக்கு அபயம் கொடுத்து ரக்ஷிப்பது உனது இயற்கையல்லவா ?

विशालश्रीखण्डद्रवमृगमदाकीर्णघुसृण-
प्रसूनव्यामिश्रं भगवति तवाभ्यङ्गसलिलम् ।
समादाय स्रष्टा चलितपदपांसून्निजकरैः
समाधत्ते सृष्टिं विबुधपुरपङ्केरुहदृशाम् ॥ १९ ॥

19. விஶாலஶ்ரீகண்டத்ரவம்ருகமதாகீர்ணகுஸ்ருண-
ப்ரஸூனவ்யாமிஶ்ரம் பகவதி தவாப்யங்கஸலிலம் |
ஸமாதாய ஸ்ரஷ்டா சலிதபதபாம்ஸூன்நிஜகரை:
ஸமாதத்தே ஸ்ருஷ்டிம் விபுதபுரபங்கேருஹத்ருஶாம் ||

भगवति பாக்யம் பெற்றவளே! **विशाल-श्रीखण्डद्रव-मृगमदाकीर्णघुसृण-प्रसून-व्यामिश्रं** சிறந்த செஞ்சந்தனக் குழம்பு கஸ்தூரி கலந்த குங்குமம் புஷ்பங்கள் இவை கலந்துள்ள **तव अभ्यङ्गसलिलं** உனது மங்களஸ்நான ஜலத்தையும் **चलितपद-पांसून्** (உன்னுடைய) பாதங்களினின்று விழுகின்ற தூளிகளையும் **निजकरैः** தன் கைகளாலே **समादाय** வாரி எடுத்து **विबुधपुरपङ्केरुहदृशां** தேவலோகத்து கன்னிகைகளின் **सृष्टिं** ஸ்ருஷ்டியை **समाधत्ते** செய்து வருகின்றார்.

கருத்து :—"அழகில் தேவகன்னிகள் போல" என்று கவிகளின் கவியில் உபமானமாக இருந்து கௌரவம் பெற்ற தேவகன்னிகைகளை ப்ரும்மா உன்னுடைய மங்கள ஸ்நானத்தின் நீரைக் கொண்டும், பாத தூளிகளைக் கொண்டும், தன் கைகளாலே பிசைந்து ஸ்ருஷ்டிக்கிறார் என்றால் உனது தேக ஸௌந்தர்யத்தைப் பற்றி நான் யாது சொல்லக்கூடும்.

वसन्ते सानन्दे कुसुमितलताभिः परिवृते
स्फुरन्नानापद्मे सरसि कलहंसालिसुभगे ।
सखीभिः खेलन्तीं मलयपवनान्दोलितजले
स्मरेद्यस्त्वां तस्य ज्वरजनितपीडापसरति ॥ २० ॥

20. வஸந்தே ஸாநந்தே குஸுமிதலதாபி: பரிவ்ருதே
ஸ்புரந்நாநாபத்மே ஸரஸி கலஹம்ஸாலிஸுபகே |
ஸகீபி: கேலந்தீம் மலயபவனாந்தோலிதஜலே
ஸ்மரேத்யஸ்த்வாம் தஸ்ய ஜ்வரஜனிதபீடாபஸரதி ||

सानन्दे எங்குமானந்தம் நிரம்பிய **वसन्ते** வஸந்த காலத்தில் **कुसुमितलताभिः परिवृते** பூக்கள் நிரம்பிய பூங்கொடிகளால் சூழப்பெற்றதும், **स्फुरन्नानापद्मे** மலர்ந்து ப்ரகாசிக்கும் பற்பல தாமரைகளையுடையதும், **कलहंसालिसुभगे** இனிமையாக சப்திக்கின்ற அன்னங்களின் வரிசையால் அழகு பெற்றதும், **मलयपवनान्दोलितजले** மலயமலையினின்று வருகின்ற தென்னல் காற்றினால் சிறிது அலைவீசும் ஜலத்தையுடையதுமான **सरसि** தடாகத்தில் **सखीभिः** தோழிகளோடு **खेलन्तीं** (ஜலக்ரீடை செய்து) விளையாடுகின்ற **त्वां** உன்னை **यः** எவன் **स्मरेत्** நினைப்பானோ **तस्य** அவனுக்கு **ज्वरजनितपीडा** ஜ்வரத்தால் ஏற்பட்ட துன்பம் **अपसरति** (தானே) அறவே நீங்கிவிடுகிறது.

கருத்து :—சுற்றிலும் பூங்கொடிகள் சூழப்பெற்று, தென்னல் வீசுங்கால் அசைகின்ற ஜலத்தில் ஆடுகின்ற தாமரையின் நடுவில் அமர்ந்து உல்லாஸமாக சப்திக்கின்ற ஹம்ஸங்கள் நிரம்பிய தடாகத்தில் வஸந்தகாலத்தில் ஸகிகளோடு நீர் விளையாட்டு செய்வதாக உன்னை எவன் த்யானிக்கிறானோ அவன் பல நாளாக விலகாத ஸம்ஸாரம் என்ற ஜ்வரம் நீங்கி நித்ய ஸுகத்தை யடைகிறான்.

॥ इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यश्रीमच्छङ्करभगवतः कृतौ
आनन्दलहरी संपूर्णा ॥

ஆநந்தலஹரீ முற்றிற்று

॥ शुभम् ॥

ஸ்ரீ மீனாக்ஷி

॥ श्रीमीनाक्षीस्तोत्रम् ॥

ஸ்ரீ மீனாக்ஷீஸ்தோத்ரம்

मधुरापुरनायिके नमस्ते मधुरालापिशुकाभिरामहस्ते ।
मलयध्वजपाण्ड्यराजकन्ये मयि मीनाक्षि कृपां विधेहि धन्ये ॥१॥

1. மதுராபுரநாயிகே நமஸ்தே
 மதுராலாபிசுகாபிராமஹஸ்தே |
 மலயத்வஜபாண்ட்யராஜகன்யே
 மயி மீனாக்ஷி க்ருபாம் விதேஹி தன்யே ||

मधुरापुरनायिके மதுரைமா நகரத்துத் தலைவியும், **मधुरालापिशुक** - இனிமையாகப் பேசுகின்ற கிளியால் **अभिरामहस्ते** அழகியகையோடுகூடியவளும், **मलयध्वजपाण्ड्यराजकन्ये** மலயத்வஜனென்ற பாண்டிய நாட்டு மன்னன் மகளுமான **मीनाक्षि** மீன் போன்ற கண்களையுடையவளே! **ते** உனக்கு **नमः** நமஸ்காரம். **धन्ये** (உன்னைத் துதிக்கும் பாக்யம் பெற்ற **मयि** என் விஷயத்தில் **कृपां** கருணையை **विधेहि** செலுத்துவாயாக.

கருத்து :—இம்மீனாக்ஷித்துதியில் மீனாக்ஷிக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் அடைமொழிகள் யாவற்றும் விளிவேற்றுமையில் இருப்பது கவனிக்கத்தக்கது. பாண்டியமன்னனாகிய மலயத்வஜன் காலகதி யடைந்தபிறகு அவர்புதல்வியான மீனாக்ஷி அப்பாண்டிய நாட்டையாண்டுகொண்டு, திக்விஜயஞ்செய்து, வடகிழக்குமூலையாகிய ஈசானதிக்கோணத்தை வெல்லச்செல்லுங்கால் யுவவேடம் பூண்டுவந்த சிவபெருமானைக்கண்டு தன் மூன்றாவது ஸ்தனம் மறைய, ஏற்கனவே நிகழ்ந்த அசரீரிவாக்கின்படி இவரே நமது கணவன் என்று

தீர்மானித்து அச்சிவபெருமானே மணந்தபிறகு ஸௌந்தர பாண்ட்யராஜன் என்ற திருநாமத்துடன் மதுரைமாநகரில் சிவபெருமான் அரசுபுரிந்துவந்தார் என்ற திருவிளையாடல் புராணக்கதை இங்கு குறிப்பிடபட்டிருக்கிறது. ஒவ்வொரு செய்யுளிலும் "மீனாக்ஷிதேவியே! என்னிடத்தில் தயை காட்டவேண்டும்" என வேண்டுகோளுக்கு அனுகுணமாக, "धन्ये, शान्ते, दीने" என்ற விசேஷணங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பாண்ட்யதேசத்து மன்னனான மலயத்வஜராஜனது தவப்புதல்வியாக அவதரித்து, மதுரைமாநகரத்துத் தலைவியாக விளங்குபவளும், கிளியைக் கையிலணிந்து அதற்கு இனிமையான பேச்சுக்களைப் பயிற்சிசெய்துவைத்திருப்பவளுமான ஓ மீனாக்ஷியே! உன்னைத் துதிக்கும் பாக்யம் பெற்ற என்விஷயத்தில் கருணைகூர்ந்து மனோரதங்களைக் கைகூடச்செய்வாயாக. "பிறரை தனிகனாகச் செய்பவன் சிறந்த தனவந்தனாக இருத்தல்வேண்டும். பிறரை ஆநந்திக்கச் செய்பவன் தான் அதிக ஆநந்தியாக இருத்தல்வேண்டும். அவ்விதமே கிளிகளுக்கு இனியமொழி கற்பிப்பவள் ஸ்வயம் இனியமொழி நிறம்பியவளாயிருத்தல் வேண்டும் என்பது.

குறிப்பு :—உன்னைத் துதிக்கும் பாக்யம் பெறும்படி எனக்குக் கிருபை செய். மற்ற எல்லா விஷயங்களிலும் தன்யனாக ஆகும்படி எனக்குக் கிருபைசெய் என்பது.

இச் செய்யுள்களில் **मयि** என்று போடப்பட்டிருப்பது, அஹந்தையுள்ளவனாக யிருக்கிறேன்; ஆதலால் ஸர்வானர்த்தபீஜமான அவ்வஹந்தையை யகற்றி, தேவி! நீ எனக்கு அருள்புரியவேண்டும்.

कचनिर्जितकालमेघकान्ते कमलासेवितपादपङ्कजान्ते ।
मधुरापुरवल्लभेष्टकान्ते मयि मीनाक्षि दयां विधेहि शान्ते ॥ २ ॥

2. கசநிர்ஜிதகாலமேகுகாந்தே
கமலாஸேவிதபாதபங்கஜாந்தே |
மதுராபுரவல்லபேஷ்டகாந்தே
மயி மீனாக்ஷி தயாம் விதேஹி ஶாந்தே ||

कचनिर्जित-குழலால் ஜயிக்கப்பட்ட कालमेघकान्ते மாரி காலத்து மேக காந்தி வாய்ந்தவளும், कमलासेवित-இலக்குமி யால் ஸேவிக்கப்பட்ட पादपङ्कजान्ते தாமரை போன்ற திருவடியின் முனையையுடையவளும், मधुरापुरवल्लभ-மதுரைமா நகரத்தரசனாகிய ஸுந்திர பாண்டிய ராஜனுடைய इष्टकान्ते அன்பிற்கிடமான காதலியுமான मीनाक्षि மீனலோசனியே! शान्ते (ஐம்புலன்களை) அடக்கிய मयि என் விஷயத்தில் दयां கருணையை विधेहि கொள்வீராக.

கருத்து :—மாரிகாலத்து நீருண்டமேகம்போல கருத்த குழல் கூட்டத்தால் விளங்குபவளும் இலக்குமியால் தாமரைத்திருவடிகளில் பணியப்பெற்றவளும், ஈசனை மணந்து ஸுந்தரபாண்ட்யராஜன் என்ற பெயருடன் மதுரைமா நகரில் அரசுபுரியும்படி செய்தவளுமான ஓ மீனலோசனி! ஐம்புலன்களை யடக்கி உன்னை தியானிக்கும் என்விஷயத்தில் கருணைகொள்வீராக.

குறிப்பு :—மீன்போல ஸூக்ஷ்மமாக கவனிக்கும் சக்திவாய்ந்தவளாதலால் என்னையும் சற்று நோக்கி க்ருபைசெய். ஐம்புலன்களை அடக்கி உன்னை த்யானிக்கும் சக்தி ஏற்படும்படி தயை காட்டுவாயாக என்பதும் பொருள்படும். निधेहि विधेहि என்ற இரு பதங்கள் மாறிமாறி வருகின்றன. निधेहि வைத்துவிடு, विधेहि கட்டளையிடு (விதிசெய்) என்று கொஞ்சம் ஸூக்ஷ்மமாக அர்த்தபேதமிருந்தாலும் விதிசெய்து, கட்டளையிட்டு, என்னிடம் கருணையை ஸ்திரமாக நிலை நாட்டி வைத்துவிடு என்ற இரண்டு பதங்களின் பொருளும் ப்ரதி ச்லோகம் கொள்ளல்வேண்டும். கேசத்தையும் பாதத்தையும் வர்ணித்ததால் ப்ரத்யாஹார ந்யாயமாக கேசாதி பாதாந்தமான தேவியின் ஸர்வ அவயவங்களை ஸங்க்ரஹித்து வர்ணித்ததில் தாத்பர்யம். மதுரைமா நகரை இனிமையாகக் களிக்கும்படி யரசுபுரியும் ராஜனுடைய காதலி என்றதால் ப்ரஜாரஞ்ஜனத்தி லிருவர்களும் ஈடுபட்டு ஊக்கத்துடன் ஜனங்களைக் களிக்கச் செய்கிறவர்களென்றும் கணவன் பரோபகாரத்தை யநுஸரிப்பதே ஸதீதர்மம் என்றும் விளங்குகிறது.

कुचयुग्मविधूतचक्रवाके कृपया पालितसर्वजीवलोके ।
मलयध्वजसंततेः पताके मयि मीनाक्षि कृपां निधेहि पाके ॥ ३ ॥

3. குசயுக்மவிதூதசக்ரவாகே
க்ருபயா பாலிதஸர்வஜீவலோகே |
மலயத்வஜஸந்ததே: பதாகே
மயி மீனாக்ஷி க்ருபாம் நிதேஹி பாகே ||

कुचयुग्म இரண்டு கொங்கைகளால் **विधूत** அவமதிக்கப் பட்ட **चक्रवाके** சக்ரவாகபக்ஷியையுடையவளும், **कृपया** கருணை கூர்ந்து **पालित** காப்பாற்றப்பட்ட **सर्वजीवलोके** ஸகல ப்ராணி வர்க்கங்களையுடையவளும், **मलयध्वजसंततेः** மலயத்வஜராஜனது மரபிற்கு **पताके** கொடி போன்றவளுமான **मीनाक्षि** மீனாக்ஷியே ! **पाके** பாலனாகிய (விவேகமற்ற) **मयि** என்னிடத்தில் **कृपां** கருணையை **निधेहि** வைப்பீர்களாக.

கருத்து :-சக்ரவாகப் பறவைகளையொத்த இருகொங்கைகளால் எழில்பெற்றவளும், தயைகூர்ந்து எல்லா ப்ராணி வர்கங்களையும் ஸம்ரக்ஷிப்பவளும், மலயத்வஜபாண்ட்ய ராஜனது மரபிற்குக்கொடிபோல விளங்கி, அம்மரபைக் கீர்த்திபெறச் செய்பவளுமான மீனாக்ஷிதேவியே! விவேகமற்ற பாலனாகிய எனக்கு நீயே யோசித்து ஹிதத்தைத் தெரிவித்துக்கருணை புரிவாயாக.

குறிப்பு :—கர்ம பலன்களை அளிக்கும் தேவியே! ஸுக்ருதத்தைச் செய்பவனுக்குப் பலன் அளிக்கிறேன் என்று இருக்கக் கூடாது. நானே ஸுக்ருத துஷ்க்ருத கர்மாக்களை அறிந்து செய்யத் தகுந்த விவேகமற்றவன் யான். அது மட்டுமல்லாமல் அஹங்தையும் நிறம்பப் பெற்றவன். ஆதலால் பாலர்களுக்கு விவேகமற்ற பால்ய தசையில் மாதா பிதாக்கள் ஹிதமறிந்து பாலர்களை அந்தந்த காரியங்களைச் செய்விப்பதுபோல உலக அன்னையாகிய நீதான் விவேகமற்ற பாலனுக்கு ஹிதத்தை யறிவித்து அவைகளில் ப்ரவ்ருத்தித்துப் பலனடையும்படி செய்யவேண்டும்.

கொடி (த்வஜம்) உன்னத ஸ்தானத்திலிருந்து அனைவரும் தூர தேசத்திலுள்ளவர்களும் அறியச் செய்வதுபோல மலயத்வஜ மரபை புகழ்படுத்தி உலக ப்ரஸித்தமாக்கியவள் மீனாக்ஷி தேவி.

विधिवाहनजेतृकेलियाने विमतामोटनपूजितापदाने ।
मधुरेक्षणभावपूतमीने मयि मीनाक्षि कृपां विधेहि दीने ॥ ४ ॥

4. விதிவாஹனஜேத்ருகேளியானே
விமதாமோடனபூஜிதாபதானே |
மதுரேக்ஷணபாவபூதமீனே
மயி மீனாக்ஷி க்ருபாம் விதேஹி தீனே ||

विधिवाहनजेतृकेलियाने விளையாட்டு நடையால் அன்ன (ப்ரும்மாவின் வாஹனம்) நடையை ஜயிக்கிறவளும், **विमता-मोटनपूजितापदाने** சத்ருக்களை வென்றதால் புகழப்படுகிற சரித்திரத்தையுடையவளும், **मधुरेक्षणभावपूतमीने** அழகிய கண்களாக அமைந்ததால் புனிதமாக்கப்பட்ட மச்சத்தை யுடையவளுமான **मीनाक्षि!** மீனாக்ஷியே! **दीने** மிக எளியவனை **मयि** என் விஷயத்தில் **कृपां विधेहि** கருணைபுரிவீராக.

கருத்து :—நடையிற்சிறந்த அன்னநடையையும் அதிசயித்து விளையாட்டு நடைவாய்ந்தவளாதலால் நடையில் அன்னப்பக்ஷியை ஜயிக்கும் இயற்கைவாய்ந்தவளும், வேதமுறண்பாடான மதங்களையறவே யழித்து வேதமார்க்கத்தை நிலை நாட்டியதால், துஷ்டர்களை யடக்கி ஸாதுக்களை உய்யச் செய்ததால் தேவஸ்திரிகள் முதலியவர்களால் புகழ்ந்து கொண்டாடி பாடப்படும் சரித்திரம்வாய்ந்தவளும், உருவத்திலும் சடுலமான இனிய பார்வையிலும் கண்களால் மீனை ஒத்தவளுமான ஓ! மீனாம்பிகையே! மிக எளியவனை என் விஷயத்தில் தயையைச் செலுத்துவாயாக.

குறிப்பு :—விளையாட்டு நடையே அன்னநடையை ஜயிக்கும் வல்லமை வாய்ந்ததென்றால் ப்ரயத்ந புரஸ்ஸரமாக புத்தி பூர்வகமாகச் செய்யப்படும் நடையின் அழகு வர்ணிக்கத் தக்கதன்று என்பது பொருள். தேவியின் அவதாரங்களுக்கு வேத முறண்பாடான மதங்களை யழித்து வேத வித்வேஷிகளான துஷ்டர்களை த்வம்ஸஞ் செய்வதுதான் முக்ய பலனென்பதைக் குறிக்கிறது. மீன்கள் ஜலத்திலுள்ள அழுக்கை யகற்றிச் சுத்தஞ் செய்வதுபோல பக்தர்களின்

நைந்யத்தை நீக்கி பாக்யமளிக்க வல்லமை வாய்ந்த கடாக்ஷம்பெற்றவள் மீனம்பிகை.

तपनीयपयोजिनीतटस्थे तुहिनप्रायमहीधरोदरस्थे ।
मदनारिपरिग्रहे कृतार्थे मयि मीनाक्षि कृपां निधेहि सार्थे ॥ ५ ॥

5. தபனீயபயோஜிநீதடஸ்யே
துஹிநப்ராயமஹீதரோதரஸ்யே |
மதனாரிபரிக்ரஹே க்ருதார்யே
மயி மீனாக்ஷி க்ருபாம் நியேஹி ஸார்யே ||

तपनीयपयोजिनीतटस्थे பொற்றாமரைக் குளத்தின் கரையிலிருப்பவளும் **तुहिनप्रायमहीधरोदरस्थे** பனி நிரம்பிய மலையின் நடுவிலிருப்பவளும், (இமயமலையின் பெண்ணானவளும்) **मदनारिपरिग्रहे** காமனை எறித்தவனின் காதலியும், **कृतार्थे** பயனனைத்தையும் பெற்றவளுமான **मीनाक्षि** மீனாக்ஷியே! **सार्थे** பயனைப்பெற விரும்புகின்ற **मयि** என்னிடத்தில் **कृपां** கருணையை **विधेहि** வைப்பீராக.

கருத்து :—"ஹேமாப்ஜினீ புஷ்கரிணீ" "பொற்றாமரைக் குளம்" என்று ப்ரஸித்தி பெற்ற தடாகத் தடத்தில் வீற்றிருப்பவளும், பூமியைத் தாங்கும் பனிமலை நடுவிலிருப்பவளும், பனிமலை வயிற்றில் உதித்தவளும், காமனை வென்ற பெருமானை வசப்படுத்திய காதலியும் அவாப்த ஸமஸ்த காமனைகள் உடையவளுமான ஓ! மகாதேவியே! விருப்பம் நிரம்பிய இச்சிறுவன்மீது தயை செலுத்திக் குழந்தையின் சில்லரை விருப்பங்களைப் பெற்றோர்கள் நிறைவேற்றிக் களிக்கச் செய்வதுபோல எனது விருப்பங்களைக் கொடுத்து என்னைக் களிப்படையச் செய்வாயாக.

குறிப்பு :—தங்கத் தாமரைகள் நிரம்பிய புஷ்கரிணியின் அழகு கோடி சூர்யனுதித்ததை யொத்தது. அத்தடாகக் கரையில் வஸிக்கும் மீனலோசனியின் தேஜஸ்ஸோ மனத்தாலும் மதிப்பிடத் தகாதது. குளிர்ந்த ஹ்ருதயம் படைத்த தேவி, பனியால் குளிர்ந்த மலைநடுவில் வஸிப்பதும் அம்மலையின் வயிற்றிலவதரித்ததும் பொருத்தமானதே.

பூமியைத் தாங்கும் மலையிலுண்டாகி அங்கேயே வீற்றிருப்பதும் உலகனைத்தும் காக்கும் பாரம் பூண்ட தேவிக்குத் தகுந்ததே. மதம் முதலிய அரிஷட்வர்க்கங்களை ஒழிக்கும் பக்தர்களைத் தான் அநுக்ரஹித்து க்ருதார்த்தர்களாகச் செய்வாள் மீனாம்பிகை என்பதும் மற்றொரு பொருள். உன் பக்தர்கள் கூட்டத்தில் கலந்த என்னைக் குற்றங்களை களைந்து தயைகூர்ந்து பக்தனென்று காப்பாயாக.

कलकीरकलोक्तिनाददक्षे कलितानेकजगन्निवासिरक्षे ।
मदनाशुगहल्लकान्तपाणे मयि मीनाक्षि कृपां कुरु प्रवीणे ॥ ६ ॥

6. கலகீரகலோக்திநாதத‌க்ஷே
கலிதானேகஜகந்நிவாஸிரக்ஷே |
மதநாசுகஹல்லகாந்தபாணே
மயி மீனாக்ஷி க்ருபாம் குரு ப்ரவீணே ||

कलकीर - இனிமையாகப் பாடுகின்ற கிளியினுடைய **कलोक्ति** - அழகிய மொழி போன்ற **नाददक्षे** இசையில் தேர்ச்சி பெற்றவளும் **कलितानेकजगन्निवासरक्षे** உலகத்தில் வசிக்கும் ப்ராணிகளை காப்பவளும், **मदनाशुग** *மன்மதனது பாணமாகிய **हल्ल** - செந்தாமரையால் **कान्तपाणे** அழகிய கையையுடையவளுமான **मीनाक्षि** மீனாக்ஷியே! **प्रवीणे** (உனது கருணையால் கொடுக்கப்படுகிற ஸாதனங்களை ரக்ஷிக்கும்) வல்லமை வாய்ந்த **मयि** என்னிடத்தில் **कृपां कुरु** கருணை செய்வீராக.

கருத்து:—கிளிபோல இனிய மொழிகளாலேயே துஷ்டர்களை யடக்கி உலகில் வஸிக்கும் ப்ராணிகளனைத்தையும் காப்பவளும், பஞ்சபாணனென்று உலக ப்ரஸித்தனாகி மதத்தைத் தரும் காமனுடைய முதல் பாணமாகிய அரவிந்தத்தைக் கையில் தாங்கியவளுமான ஓ மீனாம்பிகையே! உனது ஹிதமொழிகளுக்குக் கீழ்படிந்து நடக்கத் திறமை வாய்ந்த தாஸனான என் விஷயத்தில் கருணை செய்வீராக.

---

* தாமரை, அசோகம், மாம்பூ, நவமல்லிகை, கருநெல் புஷ்பம் இவ்வைந்தும் மன்மதனுடைய பாணங்களாகும்.

குறிப்பு :—இனிய மொழிகளா லனைவரையும் ரக்ஷிப்பது எளிது. ஸாம தான பேத தண்டம் என்ற நான்கு உபாயங்களில் சிறந்தது ஸாமம். அதனால் ஸாத்யமாகாதது ஒன்றுமில்லை. ஸங்கீத நாதத்தால் எவ்வித துக்கமு மகலும். ஸ்ரீ வாஸுதேவனது வேணுநாதத்தால் பசு பக்ஷிகளுங்கூட பசி யறியாது மயங்கி நின்றது உலகமறிந்த விஷயம். ஸங்கீதத்தால் அநுராகம் வளர்வது ஸஹஜம். **प्रवीणे** என்ற பதம் சிறந்த வீணை வாத்தியம் தரித்தவள் என்றும் பொருள்படும். வீணாதாரியான எனக்கு இனிமையான தந்த்ரிநாதத்தைக் கொடுத்து உலகங்களைச் சந்தோஷப்படுத்தும் (மதப்படுத்தும்) சக்தியைத் தந்தருள்வாயாக.

मधुवैरिविरिञ्चिमुख्यसेव्ये मनसा भावितचन्द्रमौलिसव्ये ।
तरसा परिपूतयज्ञहव्ये मयि मीनाक्षि कृपां विधेहि भव्ये ॥ ७॥

7. மதுவைரிவிரிஞ்சிமுக்யஸேவ்யே
மனஸா ஹாவிதசந்த்ரமௌளிஸவ்யே |
தரஸா பரிபூதயஜ்ஞஹவ்யே
மயி மீனாக்ஷி க்ருபாம் விதேஹி ஹவ்யே ||

मधुवैरि மதுவை யழித்த மஹாவிஷ்ணு **विरिञ्चि** ப்ரும்ம தேவன் **मुख्य** முதலியவர்களால் **सेव्ये** ஸேவிக்கப்படுகிறவளும், **मनसा** மனதினால் **भावित**-த்யானிக்கப்படுகிற **चन्द्रमौलि-सव्ये** சிவனது இடப்புறமாயிருப்பவளும், **तरसा** சக்தியினால் **परिपूत** - நன்கு புனிதமாக்கப்பட்ட **यज्ञहव्ये** வேள்வியின் ஹவிர்ப்பாகத்தையுடையவளுமான **मीनाक्षि** ஏ மீனாக்ஷியே! **भव्ये** பணிந்தவளாகிய **मयि** என் விஷயத்தில் **कृपां** கருணையை **विधेहि** புரிவீராக.

ப்ரும்மா விஷ்ணு முதலிய தேவர்கள் இடைவிடாது தேவியை த்யானிக்கிறார்கள். தேவி தெளிந்த மனத்தோடு இடைவிடாது தன் பதியான சிவனது இடப்பக்கத்தி லமர்ந்துகொண்டு சிவனையே த்யானிக்கிறாள்.

கருத்து :—பிரமன், விஷ்ணு முதலியவர்களால் ஸேவிக்கப்படுகிறவளும், பிரமன் முதலியவர்களுக்கு ப்ரதானமான

உபாஸ்ய தேவதையா யிருப்பவளும், சந்திரனை சேகரமா யணிந்துகொண்ட சிவனது இடப்புறமாக அமர்ந்திருப்பவளும், யாகங்களின் ஹவிர்ப்பாகத்தைப் புனிதமாக்குபவளுமான ஓ மீனாக்ஷித் தாயே! பணிந்த இந்த தாஸனுக்குத் தயை புரிவாயாக.

கருத்து:—உலகங்களைப் படைக்கும் ப்ரம்மதேவனுக்குப் படைத்தல் சக்தியையும், காக்கும் விஷ்ணுவுக்குக் காத்தல் சக்தியையும் கொடுத்தருளுவதால், அவர்களால் அந்தந்தத் தொழில்புரியுங்கால் ஸேவிக்கப்படுகிறாள். சந்திரனிடமிருந்து மனது உத்பத்தியானதாக ஸ்ருஷ்டி ப்ரகரணங்களிற் சொல்லப்பட்டிருப்பதால் மனதுக்கு அநுக்ரஹ சக்தியைத் தந்தருளுவது சந்திரன். அச் சந்திரன் தலையி லணியாக்கப்பட்டிருக்கும் பொழுது அந்த அநுக்ரஹ தேவதையின் முன்னிலையில் மனதால் பதியை நினைப்பது மிக எளிது என்பதைக் காட்டுகிறது. சூர்யனுடைய ப்ரஸாதத்தால் கண் சக்தி வளர்வதுபோல சந்திரன் அநுக்ரஹத்தால் மனதின் ஸ்மரண சக்தி வளர்கிறது.

குறிப்பு :—யாகங்களில் கொடுக்கப்படும் ஹவிர்ப்பாகம் மந்திர மஹிமையால் சுத்தமாகி அந்தந்த தேவதைகளின் திருப்திக்கு வேண்டிய அளவு வளர்கின்றது என்பது ச்ருதி ஸித்தாந்தம். அதன்படி வேதவாக்ரூபியாக இருந்து யாகங்களில் கொடுக்கப்படும் ஹவிர் பாகங்களை சுத்தமாக்கி வேண்டிய அளவு வளரச் செய்து அந்தந்த தேவதைகளை புஜிக்கச் செய்து திருப்தி செய்விப்பவளான பரதேவதையே! சரண்யையான நீ, சரணமடைந்திருக்கும் என்னை, தயை கூர்ந்து காக்கவேண்டியது மிக்க அவச்யமானது.

जगदम्ब कदम्बमूलवासे कमलामोदमुखेन्दुमन्दहासे ।
मदमन्दिरचारुदृग्विलासे मयि मीनाक्षि कृपां निधेहि दासे ॥८॥

8. ஜகதம்ப கதம்பமூலவாஸே
கமலாமோதமுகேந்துமந்தஹாஸே |
மதமந்திரசாருத்ருக்விலாஸே
மயி மீனாக்ஷி க்ருபாம் நிதேஹி தாஸே ||

जगदम्ब லோகமாதாவும், कदम्बमूलवासे கடம்பமரத்தி னடியில் வஸிப்பவளும், कमलामोद - தாமரை மணம் வீசும்

मुखेन्दु - சந்திரனுக்கொப்பான முகத்தில் **मन्दहासे** புன்னகை கொண்டவளும், (அல்லது **कमलामोद** லக்ஷ்மி கடாக்ஷம் நிரம்பிய **मुखेन्दुमन्दहासे** சந்திரன் போன்ற முகத்தில் புன்னகையை யுடையவளும்) **मदमन्दिर** - மதத்திற்கிருப்பிடமாகிய **चारुदग्विलासे** அழகிய கண்ணோக்கை யுடையவளுமான **मीनाक्षि** மீனாக்ஷியே! **दासे** (புன்னகையையும் கடாக்ஷத்தையும் விரும்பி நிற்கும்) தாஸனாகிய **मयि** என் விஷயத்தில் **कृपां निधेहि** கருணை வைப்பீராக.

கருத்து :—தாமரை மணம்போன்ற மணம் வீசும் நிச்வாஸம் பெற்றவளும், சந்திரன்போலக் களிப்பூட்டும் முககாந்தி நிரம்பியவளும், புன்னகையால் பக்தர்களை ஆனந்திக்கச் செய்பவளும், அழகிய கடாக்ஷத்தால் ஸம்பத்தை அளித்து மதம் நிரம்பச் செய்பவளும், அடம்ப மரத்தடியில் வஸிப்பவளுமான ஓ! உலகத்தாயே! தாஸனுக்குப் புன்னகையையும் கடாக்ஷத்தையும் அளித்து அநுக்ரஹிப்பாயாக.

குறிப்பு :—சூர்யனுடைய ஒளி கடுமையானது. அதற்கு மாறுபாடாக சந்திரனது ஒளி மந்தமானது. ஆதலால் சந்திரன் போன்ற முகத்திலுண்டாகும் ஹாஸம் மந்தமாயிருப்பது பொருத்தமானது. சந்திரன் ஒளி, தாமரைகளை (ஆமோதிக்க) மலரச் செய்கிறது என்பது இயற்கைக்கு முரண்பாடு ஆயினும், முக சந்திரனது ஹாஸம் லக்ஷ்மிதேவியை வளர்க்கிறது என்பது பரிஹாரம். ஆனதுபற்றி விரோதாபாஸவணியாக இங்கு அமைந்துள்ளது.

पठतामनिशं प्रभातकाले मणिमालाष्टकमष्टभूतिदायि ।
घटिकाशतचातुरीं प्रदद्यात् करुणापूर्णकटाक्षसन्निवेशात् ॥ ९ ॥

9. படதாமனிசம் ப்ரபாதகாலே
மணிமாலாஷ்டக மஷ்டபூதிதாயி ।
கடிகாசதசாதுரீம் ப்ரதத்யாத்
கருணாபூர்ண கடாக்ஷ ஸந்நிவேசாத் ॥

अष्टभूतिदायि அணிமாதி அஷ்ட ஐச்வரியங்களை யளிக்க வல்லமையுள்ள **मणिमालाष्टकं** (மணிகள் கோர்த்த மாலை போன்ற) மணிமாலாஷ்டகம் என்ற இத்துதி **अनिशं** தினந் தோறும் **प्रभातकाले** வைகறை வேளையில் **पठतां** (தேவியை த்யானித்து) பாராயணம் செய்பவர்களுக்கு **करुणापूर्ण**-தயை நிரம்பிய **कटाक्षसन्निवेशात्** கடைக்கண்ணோக்கின் சம்பந்தத் தால் **घटिकाशतचातुरीं** (ஒரு முகூர்த்தத்தில் நூற்றுக்கணக் கான விஷயங்களைக் கவனிக்கும்) சதாவதானம் என்ற சக்தியை **प्रदद्यात्** அளிக்கும்

கருத்து :—நவரத்ன மாலைபோல ஒன்பது செய்யுள்களா லாகிய இந்த மீனாக்ஷித் துதியைத் தவறாது ப்ரதிதினம் அதி காலையி லெழுந்து பக்தியோடு படிப்பவர்களுக்கு தேவியி னது கடாக்ஷ பலத்தால் அஷ்டைச்வரியமும், சதாவதானம் என்ற விசேஷ சக்தியுமுண்டாகும்.

குறிப்பு :—அஷ்டகம் அஷ்ட ஐச்வர்யங்களை யளிப்பது பொருத்த மானதே. முதலில் தயைபுரியவேண்டுமென்று ப்ரார்த்தித்துப் பிறகு மந்தஹாஸத்தையும் கடாக்ஷ விலாஸத்தையும் வேண்டியதால், மீனாம் பிகை தயை நிரம்பிய புன்னகையுடன் கடாக்ஷத்தை யளித்து விரும்பிய யாவற்றையும் நிறைவேற்றிக் களிக்கச் செய்வாள். மீன் ஜலத்திலிருக்கும் அழுக்கை அகற்றிச் சுத்தஞ் செய்வது யாவருமறிந் தது. அவ்வாறே, மீனாம்பிகையும் நாஸ்ரைக வந்தடைந்த அனைவர் களையும் தனது கடாக்ஷத்தால் வழியிலே பாபங்களை விலக்கிப் புனிதர்களாக்கி ஞான ஒளி தந்து அருள்புரிகிறாள் என்பது வெளி யாகிறது.

॥ श्रीमीनाक्षीस्तोत्रं समाप्तम् ॥

ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்திரம் ஸமாப்தம்

ஸ்ரீ மீனாக்ஷியின் துதி முற்றிற்று

॥ शुभम् ॥

॥ श्रीत्रिपुरसुन्दरीस्तोत्रम् ॥

ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்

कदम्बवनचारिणीं मुनिकदम्बकादम्बिनीं
नितम्बजितभूधरां सुरनितम्बिनीसेविताम् ।
नवाम्बुरुहलोचनाम् अभिनवाम्बुदश्यामलां
त्रिलोचनकुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ १ ॥

1. கதம்பவனசாரிணீம் முனிகதம்பகாதம்பினீம்
நிதம்பஜிதபூதராம் ஸுரநிதம்பினீஸேவிதாம் |
நவாம்புருஹலோசநாம் அபிநவாம்புதச்யாமலாம்
த்ரிலோசனகுடும்பினீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ||

कदम्बवनचारिणीं கடம்ப வனத்தில் உலாவுகிறவளும், **मुनिकदम्बकादम्बिनीं** மஹரிஷிகளின் கூட்டத்திற்கு கார் வரிசை போன்றவளும், **नितम्बजितभूधरां** நிதம்பத்தால் மலையை வென்றவளும், **सुरनितम्बिनीसेवितां** தேவமாதர்க ளால் பணி செய்யப்படுகிறவளும், **नवाम्बुरुहलोचनां** புதிதாக மலர்ந்த தாமரைக்கு நிகரான கண்களோடு கூடியவளும், **अभिनवाम्बुदश्यामलां** புதிதாகத் தோன்றுகிற மேகம்போல் கருத்தவளும் (தாபத்தை யகற்றுபவளும்) **त्रिलोचनकुटुम्बिनीं** முக்கண்ணனது மனையாளுமான **त्रिपुरसुन्दरीं** த்ரிபுர ஸுந்தரியை, **आश्रये** சரணம் புகுகிறேன்.

கருத்து :—நீருண்ட கார்காலத்து மேகவரிசைபோல, த்யானிக்கும் ஜனங்களது தாபத்தையகற்றிக் குளிரச் செய்ப வளும், கடம்பவனத்தில் உலாவிநிற்பவளும், மலையை ஒத்த நிதம்பங்களும் தாமரையை ஒத்த நேத்ரங்களும் அமையப்

பெற்றவளும், தேவமாந்தர்களால் பணிசெய்யப்பட்டவளும், முக்கண்ணனது குடும்பம்நடத்துபவளும், முப்புரமெறித்த சிவபெருமானது கோபத்தைத் தணித்த ஸுந்தரியுமான த்ரிபுரஸுந்தரீதேவியை சரணமடைகிறேன்.

குறிப்பு :—சூர்யன், சந்திரன், அக்நி என்ற முத்தேஜஸ்ஸையும் மூன்று கண்களாகக் கொண்ட ஸம்ஹார மூர்த்தியான ருத்ரரின் கோபம் அளவற்றது. அத்தேவனோடு குடும்பம் நடத்துவதால் கோபத்தைத் தணிக்கும் தேவியின் சக்தியும், வசிகார சக்தியும், சிறந்தது. முக்கண்ணனாக இருந்து முப்புரமெறித்த தேவனையும் அழகுபடுத்தினாள் தேவீ என்பது பொருள். கதம்பவனத்தில் ஸஞ்சரிக்கு மியற்கை யுள்ளவள் மூலி கதம்பத்தை யநுக்ரஹிப்பதும், நிதம்ப அழகுபெற்றவள் நிதம்பிநிகளால் ஸேவிக்கப்படுவதும், பொருத்தமானதே.

कदम्बवनवासिनीं कनकवल्लकीधारिणीं
महार्हमणिहारिणीं मुखसमुल्लसद्वारुणीम् ।
दयाविभवकारिणीं विशदलोचनीं चारिणीं
त्रिलोचनकुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ २ ॥

2. கதம்பவனவாஸினீம் கனகவல்லகீதாரிணீம்
மஹார்ஹமணிஹாரிணீம் முகஸமுல்லஸத்வாருணீம் ।
தயாவிபவகாரிணீம் விசதலோசனீம் சாரிணீம்
த்ரிலோசனகுடும்பினீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ॥

कदम्बवनवासिनीं கதம்ப வனத்தை வாஸஸ்தலமாகக் கொண்டவளும், कनकवल्लकीधारिणीं ஸ்வர்ணயாழைக் கையிலேந்தியவளும், महार्हमणिहारिणीं மதிப்பிற் கெட்டாத ரத்ன மாலே யணிந்தவளும், मुखसमुल्लसद्वारुणीं முகத்திலுள்ள மத்யமென்ற மாதக த்ரவ்யத்தால் ப்ரகாசிப்பவளும், दयाविभवकारिणीं கருணைகூர்ந்து (பக்தர்களுக்கு) ஐச்வரியத்தை யளிப்பவளும், (அல்லது பக்தர்களிடத்து மிகுதியாக தயை காட்டுபவளும்) विशदलोचनीं கலங்கமற்ற கண்ணேக்கை புடையவளும், (அல்லது நிர்மல ஞானவடிவா யிருப்பவளும்)

चारिणीं எங்கும் பரவி நிற்பவளும், **त्रिलोचनकुटुम्बिनीं** சிவனது மனைவியுமான, **त्रिपुरसुन्दरीं** த்ரிபுரஸுந்தரியை **आश्रये** அண்டி நிற்கின்றேன்.

கருத்து:—கதம்ப வனத்தில் வஸிப்பவளும், தங்கமயமான யாழை ஏந்தியவளும், விலையுயர்ந்த ரத்னமாலை யணிந்தவளும், மாதகவஸ்துவை முகத்தில் கொண்டு விளங்குகிறவளும், தயைபுரிந்து ஐச்வர்ய மளிப்பவளும், மாசற்ற கடாக்ஷத்தால் எங்கும் ஸஞ்சரிப்பவளும் முக்கண்ணனின் குடும்பினியுமான த்ரிபுரஸுந்தரீ தேவியை யான் அடைக்கலமடைகிறேன்.

குறிப்பு:—பக்தர்களுக்குக் கருணைகூர்ந்து பிறவிக்கடலை அகற்றித் தெளிவான அறிவாகிய ஞானக் கண்ணைக் கொடுத்து த்ரிபுரஸுந்தரி அருள்புரிகிறுள். **भव** என்பது பிறவிக் கடலாகிய ஸம்ஸாரத்தைக் குறிக்கும். **वि** என்பது அதன் இல்லாமையைக் காட்டும். **विशदलोचनं** ஞானக்கண். விலையுயர்ந்த ரத்னமாலைகளணிந்தபோதிலும் மற்ற அணிகளை நீக்கி யாழையே சிறந்த ஆபரணமாக மதித்து தரித்திருப்பவள் என்பது **धारिणीं, हारिणीं** என்ற பதங்களிலிருந்து வெளியாகிறது. **धारिणीं** தரித்திருப்பவள், **हारिणीं** நீக்குபவள்.

कदम्बवनशालया कुचभरोल्लसन्मालया
कुचोपमितशैलया गुरुकृपालसद्वेलया ।
मदारुणकपोलया मधुरगीतवाचालया
कयापि घननीलया कवचिता वयं लीलया ॥ ३ ॥

3. கதம்பவனஶாலயா குசபரோல்லஸந்மாலயா
குசோபமிதஶைலயா குருக்ருபாலஸத்வேலயா ।
மதாருணகபோலயா மதுரகீதவாசாலயா
கயாபி கனநீலயா கவசிதா வயம் லீலயா ॥

कदम्बवनशालया கதம்ப வனத்தை இருப்பிடமாகக் கொண்டதும், **कुचभरोल्लसन्मालया** பருத்த கொங்கைகளின்

மேல் விளங்கும் ஹாரத்தை யுடையதும், कुचोपमितशैलया கொங்கைகளால் மலையை யொத்ததும், गुरुकृपालसद्वेलया கருணை மிகுதிக்குக் கரையாக விளங்குவதும், मदारुणकपोलया மதத்தால் சிவந்த கன்னங்களையுடையதும், मधुरगीतवाचालया இனிமையான கீதத்தை மொழியாகக் கொண்டதும். घननीलया மேகம்போல் கருத்து விளங்குகிற துமான कयाऽपि முக்கரணங்களுக்குமெட்டாத लीलया (மனதைக் கவருகின்ற) லீலா விசேஷத்தால் वयं நாம் कवचिताः கவச மணிந்தவர்களாக்கப்பட்டோம்.

கருத்து :—கதம்பவனத்தை வீடாகக் கொண்டவளும், மலையை ஒத்த கொங்கைகளின் பாரத்தில் மாலையணிந்தவளும், கருணைக் கடலின் கரையாக விளங்குபவளும், சிவந்த கன்னங்களால் ப்ரகாசிப்பவளும், மெய் மறந்து இனிய பாட்டுக்களால் ஆனந்திப்பவளும், மேகம் போன்றதுமான ஒரு லீலாவிபூதியால் நாம் கவச மணிந்தவர்கள் போல காப்பாற்றப்பட்டு வருகிறோம்.

குறிப்பு :—மலையில் அருவி ஓடுவதுபோல மலையை யொத்த கொங்கைகளில் மாலை அமைந்துள்ளது. அடம்பவனச் சோலையில் கொங்கை மலைகள் அமையப் பெற்றிருப்பதும் தகுந்ததே. குருவின் ப்ரஸாதத்தாலே தான் கருணைக்கடலை யடைய முடியும் என்பதும், தக்ஷிணாமூர்த்தி உருவத்துடன் விளங்கும் பரமசிவனது கருணைக் கடலுக்குத் த்ரிபுரஸுந்தரீ தேவீ கரையாக விளங்குகிறாள் என்பதும் வெளிப்படுகிறது. மாதக திரவ்யங்களை யுபயோகித்து கன்னங்களில் சிவந்த நிறம் ஏற்பட்டபிறகே இனிமையான ஸங்கீதங்கள் உற்பத்தியாகும் என்ற இயற்கை வெளியாகிறது. மேகம்போல நீல வர்ணமுள்ள திருமேனி கொண்ட தேவியை இரும்புக் கவசமாக ரூபணஞ் செய்வது நிறத்திலும் குணத்திலும் பொருத்தமுள்ளது. கவசம் பூண்டவர்கள் யுத்தரங்கத்தில் அம்புகளின் அடியால் காயமடையாமல் காக்கப்படுவார்கள். அவ்வாறே லீலையாக அவதரித்த தேவியின் கருணையால் துஷ்டர்களின் தொந்தரவு நீங்கிக் காக்கப்படுகிறோம்.

कदम्बवनमध्यगां कनकमण्डलोपस्थितां
षडम्बुरुहवासिनीं सततसिद्धसौदामिनीम् ।
विडम्बितजपारुचिं विकचचन्द्रचूडामणिं
त्रिलोचनकुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ ४ ॥

4. கதம்பவனமத்யகாம் கனகமண்டலோபஸ்திதாம்
ஷடம்புருஹவாஸினீம் ஸததஸித்தஸௌதாமினீம் |
விடம்பிதஜபாருசிம் விகசசந்த்ரசூடாமணிம்
த்ரிலோசனகுடும்பினீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ||

कदम्बवनमध्यगां கதம்ப வனத்தின் நடுவை யடைந்தவளும், **कनकमण्डलोपस्थितां** ஸ்வர்ணமயமான ஸூர்ய மண்டலத்தில் தோற்றம் பெற்றவளும், **षडम्बुरुहवासिनीं** மூலாதாரம் முதலான ஆறு கமலங்களில் (சக்ரங்களில்) வாஸம் பெற்றவளும், **सततसिद्धसौदामिनीं** யோகிகளுக்கு நிலைபெற்ற மின்னலொளியாக விளங்குபவளும், **विडम्बितजपारुचिं** செம்பருத்தியின் காந்தியை யொத்தவளும், **विकचचन्द्रचूडामणिं** ஒளிக்கின்ற சந்திரகலையை தலையணியாக அணிந்தவளும், **त्रिलोचनकुटुम्बिनीं** பரமசிவனது க்ருஹிணியுமான **त्रिपुरसुन्दरीं** த்ரிபுரஸுந்தரியை **आश्रये** சரணமடைகின்றேன்.

கருத்து :—பூமியில் அடம்பக் காட்டின் நடுவில் வஸிப்பவளும், ஆகாயத்தில் ஸூர்ய மண்டலத்தின் நடுவில் யோகிகளால் த்யானிக்கப்படுபவளும், மூலாதாரம் முதலிய ஆறு தாமரை போன்ற சக்ரங்களில் சரீரத்தில் தோன்றுபவளும், உண்மையில் சுத்த ஸத்வ ப்ரதானமாய் மின்னல் கொடி போல நிர்மலமாக இருப்பவளும், ரஜோ குணத்தின் சேர்க்கையால் செம்பரத்தியின் சிவந்த நிறம் பெற்றவளும், சந்திர கலையைச் சேகரமாக வணிந்து உலகங்களைக் களிக்கச் செய்கின்றவளுமான த்ரிபுரஸுந்தரியை வணங்குகிறேன்.

குறிப்பு :—ஆத்யாத்மிகத்தில் நமது தேஹத்திலேயே மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரம், அநாஹதம், ஆஞ்ஞா, விசுத்தி என்ற ஷட்கமல சக்ரங்களில் வஸித்துக்கொண்டும், ஆதிபௌதிகத்தில் கதம்ப வனத்தில் வசித்துக்கொண்டும், ஆதிதைவிகத்தில் ஸ்வர்ண மயமான பாநுமண்டலத்தில் வஸித்துக்கொண்டும், பக்தர்களுக்கு அருள்புரிகிறாள். ஸித்தர்களான யோகிகளுக்கு மின்னல் கொடி போல ஹ்ருதய கமலத்தில் த்யான காலத்தில் தோன்றுகிறாள். ப்ர வ்ருத்தி மார்க்கத்தைக் கைக்கொண்ட கர்மிகளுக்கு ரஜோகுண ஸம் பந்தத்தால் சிவந்த உருவமாகத் தோன்றுகிறாள். மின்னல் சஞ்சல மானது, தேவியோ (ஸித்தஸௌதாமினீ) நித்யமான அழிவற்ற மின் னல் கொடி என்று வ்யதிரேகவணியும் விளங்கும். சந்திரசேகரரான பரமசிவனையும் ஒளிக்கச் செய்கிறாள் என்றால் த்ரிபுரஸுந்தரீ தேவியின் ஒளி மகிமை எவ்வாறு இருக்கவேண்டும்.

कुचाञ्चितविपञ्चिकां कुटिलकुन्तलालङ्कृतां
कुशेशयनिवासिनीं कुटिलचित्तविद्वेषिणीं ।
मदारुणविलोचनां मनसिजारिसंमोहिनीं
मतङ्गमुनिकन्यकां मधुरभाषिणीमाश्रये ॥ ५ ॥

5. குசாஞ்சிதவிபஞ்சிகாம் குடிலகுந்தலாலங்க்ருதாம்
குஶேஶயநிவாஸினீம் குடிலசித்தவித்வேஷிணீம் |
மதாருணவிலோசனாம் மனஸிஜாரி ஸம்மோஹினீம்
மதங்கமுனிகன்யகாம் மதுரபாஷிணீமாஶ்ரயே ||

कुचाञ्चितविपञ्चिकां கொங்கைதனிலணைக்கப்பட்ட யாழையுடையவளும், कुटिलकुन्तलालङ्कृतां சுருண்ட குழல்க ளால் எழில் பெற்றவளும், कुशेशयनिवासिनीं தாமரையிலம ரப்பெற்றவளும், कुटिलचित्तविद्वेषिणीं வஞ்சக எண்ணத்தை விசேஷமாக வெறுப்பவளும், मदारुणविलोचनां மதத்தால் சிவந்த கண்களையுடையவளும், मनसिजारिसंमोहिनीं மாரனை யெரித்த சிவனையும் மயங்கச் செய்பவளும், मधुरभाषिणीं இனிமையான மொழி வாய்ந்தவளும் ஆன मतङ्गमुनिकन्यां

மதங்கமுனிவரின் புதல்வியை (திருபுரஸுந்தரியை) ஆச்ரயே அடைக்கலம் புகுகிறேன்.

கருத்து :—சிரஸ்ஸில் சுருண்ட குழல்களால் சுழல்பெற்றிருப்பவளும், மார்பில் அணைக்கப்பட்ட வீணையால் விளங்குபவளும், மிருதுவான தாமரையி லமர்ந்துகொண்டு மிருதுவான ஹ்ருதய கமலம் படைத்தவர்களிடம் அன்பு காட்டுகிறவளும், மதத்தால் சிவந்த கண்களின் பார்வையால் மதனனை யழித்த ஈசனையும் நன்கு மயக்குகிறவளும், இனிமையாகப் பேசும் இயற்கையுள்ளவளும், மதங்கமுனிவரின் புதல்வியுமான த்ரிபுரஸுந்தரீ தேவியைப் பணிகிறேன்.

स्मरप्रथमपुष्पिणीं रुधिरबिन्दुनीलाम्बरां
गृहीतमधुपात्रिकां मधुविघूर्णनेत्राञ्चलाम् ।
घनस्तनभरोन्नतां गलितचूलिकां श्यामलां
त्रिलोचनकुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ ६ ॥

6. ஸ்மரப்ரதமபுஷ்பிணீம் ருதிரபிந்து நீலாம்பராம்
க்ருஹீதமதுபாத்ரிகாம் மதுவிகூர்ணநேத்ராஞ்சலாம் |
கனஸ்தனபரோன்னதாம் கலிதசூலிகாம் ச்யாமளாம்
த்ரிலோசனகுடும்பினீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ||

स्मरप्रथमपुष्पिणीं மதனனது பாணங்களுள் முதலான அரவிந்தத்தை கையிலேந்தியவளும், **रुधिरबिन्दुनीलाम्बरां** சிவப்புப் புள்ளிகள் நிரம்பிய கருத்த ஆடை தரித்தவளும், **गृहीतमधुपात्रिकां** மது பாத்திரத்தைக் கையில் கொண்டவளும், **मधुविघूर्णनेत्राञ्चलां** மதுவை அருந்தியதால் சுழலுகின்ற கண்கோணங்களை யுடையவளும், **घनस्तनभरोन्नतां** பருத்த கொங்கைகளின் பாரத்தால் (சிறிது) நிமிர்ந்தவளும், **गलित-चूलिकां** தொங்குகிற பின்னலையுடையவளும், **श्यामलां** கருத்த

மேனியை உடையவளும், (ச்யாமளா தேவியும்) त्रिलोचनकुटुम्बिनीं பரமேச்வரனது மனையாளுமான त्रिपुरसुन्दरीं த்ரிபுரஸுந்தரியை आश्रये சரணமடைகிறேன்.

கருத்து :—அரவிந்த பாணமேந்தி, சிவப்புப் புள்ளி நிரம்பிய கருத்த மதுரைச் சுங்குடி ஆடைதரித்து, மதுபாத்ரத்தைக் கையில்கொண்டு, மதுவை அருந்தி, தானும் சுழன்று, உலகங்களையும் சுழற்றுகிறவளும், நெருக்கமான கொங்கை பாரங்களால் நிமிர்ந்தவளும், தொங்கும் வேணிபந்தமுடையவளுமான த்ரிபுரஸுந்தரியைச் சரணமடைகிறேன்.

குறிப்பு :—ச்யாமளா தேவியின் ஸ்வரூபமிங்கு வர்ணிக்கப்பட்டுள்ளது.

*सकुङ्कुमविलेपनां अल(लि)कचुम्बिकस्तूरिकां
समन्दहसितेक्षणां सशरचापपाशाङ्कुशाम् ।
अशेषजनमोहिनीम् अरुणमाल्यभूषाम्बरां
जपाकुसुमभासुरां जपविधौ स्मराम्यम्बिकाम् ॥ ७ ॥

7. ஸகுங்குமவிலேபனாம் அல(லி)கசும்பிகஸ்தூரிகாம்
ஸமந்தஹஸிதேக்ஷணாம் ஸசரசாபபாசாங்குசாம் |
அசேஷஜனமோஹினீம் அருணமால்யபூஷாம்பராம்
ஜபாகுஸுமபாஸுராம் ஜபவிதௌ ஸ்மராம்யம்பிகாம் ||

सकुङ्कुमविलेपनां குங்குமப்பூ கலந்த சந்தனப் பூச்சு உடையவளும், अल(लि)कचुम्बिकस्तूरिकां (மகுட்டில்) நெற்றியில் கஸ்தூரி யணிந்தவளும், அல்லது கஸ்தூரியைத் தொடுகின்ற அலகத்தையுடையவளும், समन्दहसितेक्षणां புன்னகை பொருந்திய பார்வைவாய்ந்தவளும், सशरचापपाशाङ्कुशां கணை, வில், கயிறு, அங்குசம் என்ற ஆயுதம் தரித்தவளும், अशेषजनमोहिनीं ஜனங்களனைத்தையும் மாயைக்குட்படுத்து

* ஸ்ரீ மஹா திரிபுரஸுந்தரி மந்திரத்தை ஜபிக்குமவர்களுக்கு இது த்யான ச்லோகமாகக் கொள்ளத்தக்கது.

பவளும், **अरुणमाल्यभूषाम्बराम्** ஆரத்திலும் அணியிலும், ஆடையிலும் செம்மை வாய்ந்தவளும், **जपाकुसमभासुरां** செம்பருத்திப் பூவைப்போல் ப்ரகாசிப்பவளுமான **अम्बिकां** உலகத் தன்னையை **जपविधौ** ஜபகார்யத்தில் **स्मरामि** த்யானிக்கின்றேன்.

கருத்து :—குங்குமப்பூ கலந்த சந்தனம் பூசிக்கொண்டு, நெற்றியிலும் வகுட்டிலும் கஸ்தூரிப் பொட்டு தரித்து, சதுர்புஜங்களிலும் கணை, வில், கயிறு, அங்குசம் என்ற நான்கு ஆயுதங்களைத் தாங்கி, மாலை, நகை, ஆடைகளில் சிவந்த நிறமுள்ளவளாய், மந்தஹாஸத்துடன் அபாங்கத்தால் சற்று நோக்கி, ஜனங்களனைத்தையும் மாயாவலையில் சிக்கச் செய்யும் தாயை ஜபகாலத்தில் நினைக்கவேண்டும்.

குறிப்பு :—ப்ரவ்ருத்தி மார்க்கத்துக்குத் தகுந்த ரஜோகுணம் நிரம்பியவளாய், பூச்சு, மாலை, நகை, ஆடை, பொட்டு முதலிய யாவற்றிலும் செம்மை நிறம் வாய்ந்தவளாக த்ரிபுரஸுந்தரீ தேவியை ஜப காலத்தில் தியானிக்கவேண்டும். துஷ்டநிக்ரஹத்தின் பொருட்டு நான்கு கைகளிலும் நான்கு ஆயுதம் தரித்தவளாகவும் தியானிக்க வேண்டும். அநுக்ரஹம் செய்யும் காலத்தில் மந்தஹாஸத்துடன் கடைக்கண் நோக்கைச் செலுத்துகிறவளாகவும் த்யானிக்கவேண்டும்.

पुरन्दरपुरन्ध्रिकाचिकुरवन्धसैरन्ध्रिकां
पितामहपतिव्रतापटुपटीरचर्चारताम् ।
मुकुन्दरमणीमणीलसदलंक्रियाकारिणीं
भजामि भुवनाम्बिकां सुरवधूटिकाचेटिकाम् ॥८॥

8. புரந்தரபுரந்த்ரிகாசிகுரபந்தஸைரந்த்ரிகாம்
பிதாமஹ பதிவ்ரதா படுபடீரசர்சாரதாம் |
முகுந்தரமணீ மணீலஸதலங்கிரியாகாரிணீம்
பஜாமி புவனாம்பிகாம் ஸுரவதூடிகாசேடிகாம் ||

पुरन्दरपुरन्ध्रिका தேவமாதர்களை **चिकुरवन्धसैरन्ध्रिकां** கூந்தல் சேமித்துப் பின்னும் தொழில் புரிபவர்களாக

உடையவளும், **पितामहपतिव्रता** - ப்ரும்மனின் மனைவியான கலைமகளை **पटुपटीरचर्चारतां** தேர்ச்சிபெற்ற சந்தனம் பூசுகிற வளாக உடையவளும், **मुकुन्दरमणी**-விஷ்ணுவின் மனைவியான ஸ்ரீ லக்ஷ்மியை **मणीलसदलंक्रियाकारिणीं** அணிகளை யமைத்து அலங்கரிக்கும் காரியத்தில் ஈடுபட்டவளாகக் கொண்டவளும் **सुरवधूटिकाचेटिकां** தேவமாந்தர்களைத் தொண்டுபுரிபவர்களாகக் கொண்டவளுமான **भुवनाम्बिकाम्** லோக மாதாவை **भजामि** பணிகின்றேன்.

கருத்து :—கூந்தலைச் சேமித்து வாரிப் பின்னலாக்கிக் கொண்டும், நல்ல மணம் பொருந்திய பூச்சுப் பூசிக்கொண்டும், ரத்ன பூஷணங்களணிந்து விளங்கும் உத்தம மாந்தர்கள், சேடிப் பெண்களால் சூழப்படுவார்கள். த்ரிபுரஸுந்தரியின் கூந்தலைச் சேமித்து அழகுபடுத்துபவர்கள் இந்த்ர லோகத்து மாந்தர்களான அப்ஸரப் பெண்கள். வாஸனைப் பூச்சு பூசுபவள் ப்ரம்மனின் மனைவியான ஸரஸ்வதிதேவியாவள். ரத்னபரணங்களால் அழகுபடுத்துபவள் விஷ்ணுவின் மனைவியான லக்ஷ்மீதேவி யாவள். பணிவிடை செய்யக் காத்திருக்கும் சேடிகளாகச் சூழ்ந்து நிற்கிறார்கள் தேவ கன்யகைகள். இவ்விதம் ஸகல உலகிற்கும் தாயான த்ரிபுர ஸுந்தரி தேவியை நான் ஸேவித்துச் சரணமடைகிறேன்.

குறிப்பு :—தந்தைக்கும் தந்தையான பிதாமஹரின் பதிவ்ரதை சந்தனம் பூசுவதால் சந்தான பாக்யமும் பாதிவ்ரத்ய மகிமையும் நிரம்பியவள் என்றும், ரத்னாகரத்திலுதித்த மகாலக்ஷ்மி அணிகளை யமைப்பதால் ரத்னமயமான பூஷணங்கள் அபரிமிதமானவை என்றும், த்ரிபுரஸுந்தரிக்குச் சேடியாக இருந்த பாக்யத்தால் தேவமாந்தர்களானார்கள் என்பதும் பொருந்தும்.

॥ त्रिपुरसुन्दरीस्तोत्रं समाप्तम् ॥

ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம் ஸமாப்தம்.

ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்திரம் முற்றிற்று.

शुभम्

॥ श्री अन्नपूर्णाष्टकम् ॥

ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம்

नित्यानन्दकरी वराभयकरी सौन्दर्यरत्नाकरी
निर्धूताखिलघोर[1]पापनिकरी प्रत्यक्षमाहेश्वरी ।
प्रालेयाचलवंशपावनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ १ ॥

1. நித்யானந்தகரீ வராபயகரீ ஸௌந்தர்யரத்நாகரீ
நிர்தூதாகிலகோரபாபநிகரீ ப்ரத்யக்ஷமாஹேச்வரீ |
ப்ராலேயாசலவம்சபாவனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதாந்நபூர்ணேச்வரீ ||

नित्यानन्दकरी அழிவற்ற ஆனந்தமென்ற மோக்ஷத்தை யளிப்பவளும், **वराभयकरी** இருகரங்களால் (பக்தர்களுக்கு) வரப்ரதான முத்ரையையும், அபயப்ரதான முத்ரையையும் தாங்கி நிற்பவளும், **सौन्दर्यरत्नाकरी** அழகிற்கு கடலாக யிருப்பவளும், **निर्धूताखिलघोर-पापनिकरी** கடுமையான பாபங்களனைத்தையும் அறவே யழித்து (புனிதமாக்குபவளும்,) **प्रत्यक्षमाहेश्वरी** (ப்ராணிகளுக்கு அன்னமளித்து) மஹேச்வரனது மனைவித் தன்மையை கண்முன்னே காண்பிப்பவளும் **प्रालेयाचलवंशपावनकरी** பனிமலை (இமயன்) யின் குலத்தை (தான் அவதரித்து) புனிதமாக்குபவளும், **काशी-पुराधीश्वरी** காசி நகரத்தின் எஜமானியும் **कृपावलम्बनकरी** கருணையாகிய ஊன்றுகோலை (பக்தர்களுக்கு) கொடுப்பவ

1 **पावनकरी** என்றும் பாடம் இருக்கிறது.

ளும் **अन्नपूर्णेश्वरी माता** நிரம்ப அன்னமளிக்கும் தாயாக இருந்து உலகத்தை யடக்கி ஆளுபவளுமான (त्वं मे) **भिक्षां देहि** எனக்கு பிச்சை யிடுவாயாக.

கருத்து :—அகண்டமான மாயாசக்தியானது பக்தர் களுக்கு அனுக்ரஹத்தை முன்னிட்டு அவ்வப்பொழுது உருவெடுத்து பக்தர்களின் மனப்பான்மைக்குரிய வரமளிக் கிறது.

नानारत्नविचित्रभूषणकरी हेमाम्बराडम्बरी
मुक्ताहारविलम्बमानविलसद्वक्षोजकुम्भान्तरी ।
काश्मीरागरुवासिता[1] रुचिकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ २ ॥

2. நாநாரத்னவிசித்ரபூஷணகரீ ஹேமாம்பராடம்பரீ
முக்தாஹாரவிலம்பமானவிலஸத்வக்ஷோஜகும்பாந்தரீ |
காஶ்மீராகருவாஸிதா ருசிகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதாந்நபூர்ணேஶ்வரீ ||

नानारत्नविचित्रभूषणकरी பலவித ரத்னங்களி லிழைக்கப் பெற்ற அணிகளை கையில் அணிந்தவளும், **हेमाम्बराडम्बरी** தங்கநிறமுள்ள ஆடையால் அழகு பெற்றிருப்பவளும், **मुक्ताहार-विलम्बमान-विलसद् -वक्षोजकुम्भान्तरी** தொங்குகின்ற முத்தாரங்களால் எழில்பெற்ற குடத்தை யொத்த கொங்கை களின் நடுவையுடையவளும், **काश्मीरागरु-वासिता** காச்மீரத்து அகில் தூபத்தால் வாஸிக்கப்பட்டவளும், **रुचिकरी** ஆசையை வளர்ப்பவளுமான *काशी— **भिक्षां देहि** ॥

---

1 **वासिताङ्गरुचिरे** என்றும் பாடமிருக்கிறது.

* [இந்த ச்லோகத்திலிருந்து ஒவ்வொரு ச்லோகத்திலும் **काशीपु-राधीश्वरी** என்பது முதல் **मातान्नपूर्णेश्वरी** என்பது வரை முதல் ச்லோகத்தில் சொல்லப்பட்டபடி அர்த்தம் செய்துகொள்ளவும்.

योगानन्दकरी रिपुक्षयकरी [1]धर्मैकनिष्ठाकरी
चन्द्रार्कानलभासमानलहरी त्रैलोक्यरक्षाकरी ।
[2]सर्वैश्वर्यकरी तपःफलकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ३ ॥

3. யோகாநந்தகரீ ரிபுக்ஷயகரீ தர்மைகநிஷ்டாகரீ
சந்த்ரார்காநலபாஸமாநலஹரீ த்ரைலோக்யரக்ஷாகரீ |
ஸர்வைஶ்வர்யகரீ தப:பலகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதாந்நபூர்ணேஶ்வரீ ||

योगानन्दकरी யோக மார்க்கத்தால் ஏற்பட்ட ஆனந்தத்தை யளிப்பவளும், **रिपुक्षयकरी** சத்ருக்களை (அகத்திலும் புரத்திலும்) அழிப்பவளும், **धर्मैकनिष्ठाकरी** அறம் ஒன்றையே கடை பிடித்திருப்பவளும், **चन्द्रार्क-अनल-भासमानलहरी** சந்திரன், சூரியன், அக்னி இம் மூன்றிலும் தோன்றும் தேஜோ வடிவானவளும், **त्रैलोक्यरक्षाकरी** மூவுலகை காத்தருள்கிறவளும், **सर्वैश्वर्यकरी** எல்லா ஐச்வரியத்தையு மளிப்பவளும், **तपः फलकरी** தவத்தின் பயனைக் கொடுப்பவளும், **काशी— भिक्षां देहि ॥**

• கருத்து :—புரத்தில் உள்ள சத்ருக்களையும் அகத்திலுள்ள காமம் குரோதம் முதலான ஆறு சத்ருக்களையும் அழித்து பேரானந்தத்தைக் கொடுப்பவளே! தர்மத்தை நிலைநாட்டி சூரிய சந்திர உலகமடைதல் என்ற பயனை யளித்து மூவுலகைக் காப்பவளே! தவப் பயனையு மளிப்பவளே! எனக்குப் பிச்சையிடு.

कैलासाचलकन्दरालयकरी गौरी ह्युमा शांकरी ।
कौमारी निगमार्थगोचरकरी ह्योंकारबीजाक्षरी ।
मोक्षद्वारकवाटपाटनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ४ ॥

---

1 " धर्मार्थनिष्ठाकरी,

2 सर्वैश्वर्यसमस्तवाञ्छितकरी என்றும் பாடமுள்ளது.

4. கைலாஸாசலகந்தராலயகரீ கௌரீ ஹ்யுமா ஶாங்கரீ
கௌமாரீ நிகமார்த்தகோசரகரீ ஹ்யோங்காரபீஜாக்ஷரீ |
மோக்ஷத்வாரகவாடபாடநகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதாந்நபூர்ணேஶ்வரீ ||

कैलासाचल-कन्दरालयकरी வெள்ளி மலையின் குகையை இருப்பிடமாகக் கொண்டவளும், **गौरी** செம்பொன்னிற முள்ளவளும், **उमा** உமாதேவியும் **शांकरी** சங்கரனைச் சார்ந்தவளும், **कौमारी** நித்ய யௌவனம் பெற்றவளும், **निगमार्थ-गोचरकरी** வேத வாக்யங்களின் பொருளாகத் தோன்றுகிறவளும், (வேதத்தின் பொருளை அறியச் செய்பவளும்) **ओङ्कारबीजाक्षरी** ப்ரணவத்தை பீஜாக்ஷரமாகக் கொண்டவளும், **मोक्षद्वारकवाटपाटनकरी** முக்தி என்றவாயிலின் கதவைத் திறப்பவளும், **काशी—भिक्षां देहि** ||

கருத்து :—ஓங்காரத்தை பீஜாக்ஷரமாகக் கொண்டிருப்பதால் பரம், அபரம் என்று இருவிதமான ஓங்கார உபாஸனத்தின் வழியே ப்ரணவோபாஸனம் செய்கின்ற ஸந்யாஸிகளுக்கும் மோக்ஷமென்ற பிக்ஷையைத் தருபவளே! எனக்கும் பிக்ஷையிடு.

दृश्यादृश्यविभूतिवाहनकरी ब्रह्माण्डभाण्डोदरी
लीलानाटकसूत्रखेलनकरी विज्ञानदीपाङ्कुरी ।
श्रीविश्वेशमनःप्रसादनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ५ ॥

5. த்ருஶ்யாத்ருஶ்யவிபூதிவாஹநகரீ ப்ரஹ்மாண்டபாண்டோ[தரீ
லீலாநாடகஸூத்ரகேலநகரீ விஜ்ஞானதீபாங்குரீ |
ஸ்ரீவிஶ்வேஶமந:ப்ரஸாதநகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதாந்நபூர்ணேஶ்வரீ ||

दृश्यादृश्य-विभूतिवाहनकरी மூர்த்தம், அமூர்த்தம் என்ற ப்ரபஞ்ச விபூதிக்கு ஆதாரமாக நிற்பவளும், **ब्रह्माण्डभाण्डोदरी** ப்ரும்மாண்டத்தை உதரத்தில் அடக்குகிறவளும், **लीलानाटक-सूत्रखेलनकरी** உலக லீலை என்ற நாடகத்தை ஸூத்ரதாரனாகயிருந்து நடத்துபவளும், **विज्ञानदीपाङ्कुरी** தத்வ ஞானமாகிய விளக்கினது ஜ்வாலையாகத் தோன்றுபவளும், **श्रीविश्वेश-मनः-प्रसादनकरी** விச்வேச்வரரது மனதை சந்தோஷமுறச் செய்பவளும், **काशी—भिक्षां देहि** ॥

கருத்து :—இப் பஞ்ச பூதங்களிலிருந் துண்டாகும் ப்ரபஞ்சத்திற்கு உத்பத்தி ஸ்தானமாகவும் லய ஸ்தானமாகவும் இருந்து, ஸ்திதி காலத்தும் நாடகம்போல் விளையாட்டாக ஆட்டி வைத்து, இறுதியில் பரிபூர்ண ஞான ஒளியாக விளங்குபவளே ! எனக்கு ஞானப் பிச்சையிடு.

குறிப்பு :—**दृश्यादृश्यं** புலப்படுவது, புலப்படாதது. **दृश्यं** ப்ருதிவி, அப்பு, தேயு, **अदृश्यं** வாயு, ஆகாயம்.

आदिक्षान्तसमस्तवर्णनकरी [1]शम्भोस्त्रिभावाकरी
काश्मीरा त्रिपुरेश्वरी त्रिनयनी विश्वेश्वरी शर्वरी ।
स्वर्गद्वारकवाटपाटनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ६ ॥

6. ஆதிக்ஷாந்தஸமஸ்தவர்ணநகரீ ஶம்போஸ்த்ரிபாவாகரீ
காஶ்மீரா த்ரிபுரேஶ்வரீ த்ரிநயநீ விஶ்வேஶ்வரீ ஶர்வரீ |
ஸ்வர்கத்வாரகவாடபாடநகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதாந்நபூர்ணேஶ்வரீ ||

आदिक्षान्त-समस्त-वर्णनकरी அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள எழுத்துக்களாக விருப்பவளும், **शंभोः त्रिभा-वाकरी** பரமசிவனது மூன்று தோற்றங்களுக்கு மிருப்பிடமானவளும், **काश्मीरा** குங்குமப்பூச்சு உள்ளவளும், **त्रिपुरेश्वरी** முப்புரத்தை யெரித்தவனின் மனைவியாளும் **त्रिनयनी** முக்

1. **शम्भुप्रिया शाङ्करी** என்றும் பாடம்.

கண்ணனின் மனைவியும், **विश्वेश्वरी** விச்வேச்வரரது காதலி யும் **शर्वरी** ராத்திரி தேவதா ரூபியும் **स्वर्गद्वारकवाटपाटनकरी** ஸ்வர்க்கவாயில் கதவைத் திறப்பவளுமான, **काशी—भिक्षां देहि ॥**

கருத்து :—இரவுபோல் உண்மையை மறைக்கும் மாயை யாகவுமிருப்பதால் மாயிகமாகவும் அழிவுள்ளதுமான ஸ்வர்க்க ஸுகத்தை கர்ம மார்க்கத்தில் செல்பவர்களுக்குக் கொடுப்பவளே! எனக்கும் ஸ்வர்க்க பிச்சை யிடுவாயாக.

उर्वी सर्वजनेश्वरी जयकरी माता कृपासागरी
[1]वेणीनीलसमानकुन्तलधरी नित्यान्नदानेश्वरी ।
साक्षान्मोक्षकरी सदा शुभकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ७ ॥

7. உர்வீ ஸர்வஜனேச்வரீ ஜயகரீ மாதா க்ருபாஸாகரீ
'வேணீநீலஸமாநகுந்தலதரீ நித்யான்னதானேச்வரீ |
ஸாக்ஷாந்மோக்ஷகரீ ஸதா சுபகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பநகரீ மாதாந்நபூர்ணேச்வரீ ||

उर्वी பூரூபியும், **सर्वजनेश्वरी** ஸகல ஜனங்களுக்கும் எஜ மானியும், **जयकरी** ஜயமளிப்பவளும், **माता** (உலக) அன்னை யும் **कृपासागरी** கருணைக்கடலானவளும், **वेणी-नीलसमान-कुन्तल-धरी** கருத்து ஸமமான கூந்தலை பின்னலாகக்கொண்ட வளும், **नित्यान्नदानेश्वरी** இடைவிடாது அன்னமளிப்பவளும், **साक्षान्मोक्षकरी** நேராக முக்தி யளிப்பவளும், **सदा शुभकरी** எப் பொழுதும் மங்களத்தைச் செய்பவளுமான, **काशी—भिक्षां देहि ॥**

குறிப்பு:—**नित्यान्न,** என்பது **"अहमन्नमहमन्नं"** என்ற தைத்திரிய வாக்யப்படி ஆத்ம வஸ்துவைக் குறிக்கும். ஆத்ம ஞானத்தை யளித்து மோக்ஷ மளிப்பவளே! எனக்கும் ஞானப் பிச்சையிடு.

---

1. **नारीनील** என்றும் பாடம்.

देवी सर्वविचित्ररत्नरचिता दाक्षायणी सुन्दरी
वामा स्वादुपयोधरा प्रियकरी सौभाग्यमाहेश्वरी ।
भक्ताभीष्टकरी सदा शुभकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ८ ॥

8. தேவி ஸர்வவிசித்ரரத்னரசிதா தாக்ஷாயணீ ஸுந்தரீ
வாமா ஸ்வாதுபயோதரா ப்ரியகரீ ஸௌபாக்யமாஹேஶ்வரீ ।
பக்தாபீஷ்டகரீ ஸதா ஶுபகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதாந்நபூர்ணேஶ்வரீ ॥

देवी ப்ரகாசிப்பவளும், **सर्वविचित्ररत्न-रचिता** பலவித ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், **दाक्षायणी** தக்ஷனது மகளும், **सुन्दरी** அழகு பொருந்தியவளும், **वामा** ஆசைப் படத் தகுந்தவளும், **स्वादुपयोधरा** இனிப்பான பாலமுதத்தை ஊட்டுபவளும், **प्रियकरी** ப்ரியத்தை செய்பவளும், **सौभाग्यमाहेश्वरी** அழகின் அதிஷ்டான தேவதையும், **भक्ताभीष्टकरी** அடிபணிந்தவர்களது விருப்பத்தை நிறைவேற்றுபவளும் **सदा शुभकरी** எப்பொழுதும் மங்களம் அளிப்பவளுமான, **काशी—भिक्षां देहि** ॥

चन्द्रार्कानलकोटिकोटिसदृशी चन्द्रांशुबिम्बाधरी
चन्द्रार्काग्निसमानकुण्डलधरी चन्द्रार्कवर्णेश्वरी ।
मालापुस्तकपाशसाङ्कुशधरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ ९ ॥

9. சந்த்ரார்கானலகோடிகோடிஸத்ருஶீ சந்த்ராம்ஶுபிம்பாதரீ
சந்த்ரார்காக்னிஸமானகுண்டலதரீ சந்த்ரார்கவர்ணேஶ்வரீ ।
மாலாபுஸ்தகபாஶஸாங்குஶதரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேஶ்வரீ ॥

चन्द्रार्कानलकोटिकोटि-सदृशी கோடிக்கணக்கான சந்திரன் ஸூர்யன் அக்னி இவர்களுக்கொப்பானவளும், **चन्द्रांशु-बिम्बाधरी** சந்திர கிரணம் போன்ற (பற்காந்திகளோடுகூடிய) கோவைக்கனிக்குச் சமமான உதடுள்ளவளும், **चन्द्रार्काग्नि-समानकुण्डलधरी** சந்திரன் சூரியன் அக்னிகளைப்போன்ற காதோலை யணிந்திருப்பவளும், **चन्द्रार्कवर्णेश्वरी** மேனியின் ஒளியால் சூரியனையும் சந்திரனையும் ஒத்தவளும், **माला-पुस्तक-पाश-साङ्कुशधरी** மாலை, புஸ்தகம், பாசக் கயிறு, அங்குசம் இவைகளை கையிலேந்தியவளுமான **काशी—भिक्षां देहि ॥**

क्षत्रत्राणकरी महाभयहरी माता कृपासागरी ।
सर्वानन्दकरी सदा शिवकरी विश्वेश्वरश्रीधरी ।
दक्षाक्रन्दकरी निरामयकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥ १० ॥

10. க்ஷத்ரத்ராணகரீ மஹாபயஹரீ மாதா க்ருபாஸாகரீ
ஸர்வாநந்தகரீ ஸதா ஶிவகரீ விஶ்வேஶ்வரஶ்ரீதரீ |
தக்ஷாக்ரந்தகரீ நிராமயகரீ காஶீபுராதீஶ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதான்னபூர்ணேஶ்வரீ ||

क्षत्रत्राणकरी க்ஷத்ர தர்மத்தைக் காப்பவளும் **महाभयहरी** மிகுந்த பயத்தை நீக்குபவளும், **माता** தாயும், **कृपासागरी** கருணைக் கடலும், **सर्वानन्दकरी** எல்லோருக்கு மானந்தத்தைக் கொடுப்பவளும், **सदा शिवकरी** எப்பொழுதும் மங்களமளிப்பவளும், **विश्वेश्वरश्रीधरी** விச்வேச்வரரது பாக்யத்திற்குக் காரணமானவளும், **दक्षाक्रन्दकरी** தக்ஷனைக் கதறச் செய்தவளும், **निरामयकरी** (ஸம்ஸார) பிணியை யகற்றுபவளும் **काशी—भिक्षां देहि ॥**

கருத்து :—க்ஷத்ர தர்மத்தை ஓங்கச்செய்து ஸகல பயத்தையும் நீக்கி, தாய்போல் கருணைபுரிந்து வ்யாதிகளைப் போக்கி, ஆரோக்ய மளித்து, அன்னப் பிச்சை இடுபவளே!

நெடுங் காலமாய் ஏற்பட்டுள்ள பவரோகத்தை நீக்கி ஆத்மானந்தமென்ற ஆரோக்யத்தை அளிப்பவளே! பிச்சையிடு.

अन्नपूर्णे सदा पूर्णे शंकरप्राणवल्लभे ।
ज्ञानवैराग्यसिद्ध्यर्थं भिक्षां देहि च पार्वति ॥ ११ ॥

11. அன்னபூர்ணே ஸதாபூர்ணே ஶங்கரப்ராணவல்லபே |
ஜ்ஞானவைராக்ய ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஹி ச பார்வதி ||

सदा पूर्णे என்றும் நிரம்பிய, **अन्नपूर्णे** அன்னபூர்ணையே! **शंकरप्राणवल्लभे** சங்கரரது மனைவியே! **पार्वति** மலைமகளே! **ज्ञानवैराग्यसिद्ध्यर्थं च** (மோக்ஷ ஸாதனமான) ஞானம் வைராக்யம் நிலைபெறுவதற்காகவும் **भिक्षां देहि** பிச்சை யிடுவாயாக.

माता च पार्वती देवी पिता देवो महेश्वरः ।
बान्धवाः शिवभक्ताश्च स्वदेशो भुवनत्रयम् ॥ १२ ॥

12. மாதா ச பார்வதீ தேவீ பிதா தேவோ மஹேஶ்வர: |
வாந்தவா: ஶிவபக்தாஶ்ச ஸ்வதேஶோ புவனத்ரயம் ||

पार्वतीदेवी மலைமகளான தேவிதான் (எனக்கு) **माता** அன்னை, **देवः महेश्वरः** பரமசிவன்தான் (எனக்கு) **पिता** தந்தை, **शिवभक्ताश्च** ஈசனடியார்கள்தான் **बान्धवाः** (எனக்கு) உற்றார்கள், **भुवनत्रयं** மூவுலகும், **स्वदेशः** தனக்குரிய இடம்.

கருத்து:—இத் துதியால் தேவியைத் துதிப்பவர்கள் ஸமபுத்தி யுள்ளவர்களாக ஆகி, மூவுலகையும் தன்னிருப்பிடமாகவும், சிவபக்தர்களனைவரையும் தன் உறவினர்களாகவும், உலகிற்கு அன்னையும் பிதாவுமான பார்வதி பரமேச்வரர்களை தன் பெற்றோர்களெனவும் கொண்டு களிப்பார்கள்.

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यस्य श्रीगोविन्द-
भगवत्पूज्यपादशिष्यस्य श्रीमच्छङ्करभगवतः कृतौ
अन्नपूर्णाष्टकं संपूर्णम् ॥

ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம் முற்றிற்று.

॥ शुभम् ॥

॥ श्री अम्बापञ्चरत्नम् ॥

ஶ்ரீ அம்பாபஞ்சரத்னம்

अम्बा शम्बरवैरितातभगिनी श्रीचन्द्रबिम्बानना
बिम्बोष्ठी स्मितभाषिणी शुभकरी कादम्बवाट्याश्रिता ।
ह्रीङ्काराक्षरमन्त्रमध्यसुभगा श्रोणीनितम्बाङ्किता
मामम्बापुरवासिनी भगवती हेरम्बमाताऽवतु ॥ १ ॥

1. அம்பா ஶம்பரவைரிதாதபகினீ ஶ்ரீசந்த்ரபிம்பானனா
பிம்போஷ்டீ ஸ்மிதபாஷிணீ ஶுபகரீ காதம்பவாட்யா
ஶ்ரிதா ।
ஹ்ரீங்காராக்ஷரமந்த்ரமத்யஸுபகா ஶ்ரோணீநிதம்பாங்கிதா
மாமம்பாபுரவாஸினீ பகவதீ ஹேரம்பமாதாவது ॥

अम्बा உலகன்னையும், **शम्बरवैरि-तात** சம்பராஸுரனை வதைத்த மன்மதனது தந்தையான மகாவிஷ்ணுவிற்கு **भगिनी** சகோதரியாகத் தோன்றியவளும், **श्रीचन्द्रबिम्बानना** பூர்ண வடிவோடு அழகாகத் தோன்றும் சந்திரன் போன்ற முகமுள்ளவளும், **बिम्बोष्ठी** கோவைக் கனிபோன்ற உதடுள்ளவளும், **स्मितभाषिणी** புன்னகை பொருந்திப் பேசுபவளும், **शुभकरी** (எல்லோருக்கும்) மங்களமளிப்பவளும், **काद-म्बवाट्याश्रिता** கதம்பமரச் சோலையிலிருப்பவளும், **ह्रींकाराक्षर-मन्त्रमध्यसुभगा** 'ஹ்ரீம்' என்ற எழுத்தை நடுவாகக் கொண்ட மந்திரத்தின் நடுவே ப்ரகாசிப்பவளும், **श्रोणीनितम्बाङ्किता** தாழ்வரை போன்ற நிதம்பத்தை யுடையவளும், **भगवती** எல்லாவித பாக்யம் பெற்றவளும், **अम्बापुरवासिनी** அம்பாபுரம் என்ற ஊரை வாஸஸ்தானமாகக் கொண்டவளுமான

हेरम्बमाता விநாயகரின் தாயான தேவி, **मां** என்னை **अवतु** ரக்ஷிப்பாளாக.

உலகில் தாய் குழந்தைகளைத் தேடுவதும் குழந்தைத் தாயைத் தேடிச் செல்வதுமுண்டு. அங்குமிங்கு மலைந்து திரிந்து தாய் நிச்சயமாக எங்கிருக்கக் கூடுமோ அந்த இடத்தையே குழந்தை அறிந்து அந்த இடம்தான் தாயிருக்குமிடம் என்பதை பழக்கத்தால் அறிந்துகொள்ளும். அல்லது அங்கு உனது தாய் இருக்கிறாள். செல் என்று சிலர் இரக்கத்தோடு காண்பிப்பார்கள். அவ்விதமே ஸ்ரீ மதாசாரியர்கள், பிணியாலும் தாகத்தாலும் தவித்துயிருக்குமிடத்தையு மறியாமலலைந்து திரிகின்ற குழந்தைகளான நமக்கு தாயிருக்குமிடத்தை கருணையோடுத் தெரிவிக்கின்றனர். அதுதான் தாயிருக்குமிடம் 'அம்பாபுரம்' என்று அம்பா-தாய் புரம் வாஸஸ்தானம், என்று பொருள் கூறலாம். அங்கு சென்று நாம் நம்தாயைப் பார்த்து அவளுடைய கடாக்ஷாமுதத்தைப்பெற்று களிப்போமாக.

கருத்து :—இந்த ச்லோகத்தில் தியானம் செய்யத் தகுந்தவளும் அந்த தேவியே. நேரில் கண்ணாரக் கண்டு களிக்கக்கூடியவளும் தேவியே.

குறிப்பு :—**स्मितभाषिणी, शुभकरी** இந்த விசேஷணங்கள் உலகன்னைக்கு மிக்கப் பொருந்தியது. பால் குடிக்க ஆவலோடு வரும் குழந்தைகளை தாயானவள் புன்னகையுடன் வா வா என்று அழைப்பது ஸ்வபாவமல்லவா? அவ்வாறே தேவியும் பக்தர்களை புன்னகை புரிந்துப் பேசி அழைக்கிறாள்.

कल्याणी कमनीयसुन्दरवपुः कात्यायनी कालिका
कालश्यामलमेचकद्युतिमती कादित्रिपञ्चाक्षरी ।
कामाक्षी करुणानिधिः कलिमलारण्यातिदावानला
मामम्बापुरवासिनी भगवती हेरम्बमाताऽवतु ॥ २ ॥

2. கல்யாணி கமனியஸுந்தரவபுः காத்யாயனீ காலிகா
காலஶ்யாமலமேசகத்யுதிமதீ காதித்ரிபஞ்சாக்ஷரீ |
காமாக்ஷீ கருணாநிதிः கலிமலாரண்யாதிதாவானலா
மாமம்பாபுரவாஸினீ பகவதீ ஹேரம்பமாதாவது ||

कल्याणी ஸகல மங்கள மளிப்பவளும், **कमनीयसुन्दरवपुः** ஆசைப்படத் தகுந்த அழகிய திருமேனியை யுடையவளும், **कात्यायनी** காத்யாயனீ என்ற பெயர் பெற்றவளும், **कालिका** காளி உருக்கொண்டவளும், **कालश्यामलमेचकद्युतिमती** மேகம் போல் கருத்தமேனியின் காந்தியுள்ளவளும், **कादित्रिपञ्चाक्षरी** க என்ற அக்ஷரம் முதற்கொண்ட ஐம்பத்து மூன்று அக்ஷர ரூபியும், **कामाक्षी** (பக்தர்களின்) விருப்பத்தை உடனே கை கூடச் செய்யும் கண்களையுடையவளும், **करुणानिधिः** இரக்கத்திற் கிருப்பிடமானவளும், **कलिमलारण्यातिदावानला** கலியிலுள்ள தோஷங்களாகிய காட்டை யழிக்கவந்த தீ போன்றவளுமான **अम्बापुरवासिनी मां अवतु.**

[நான்காவது பாதத்திற்கு முதல் ச்லோகத்தில் சொல்லியபடி அர்த்தம் வைத்துக்கொள்ளவும்.]

குறிப்பு :—தேவியின் மூல மந்த்ரம், பதினைந்து எழுத்துக்களாலமைந்த பஞ்ச தசாக்ஷரி என்பது. அம் மந்த்ரம் 'க' என்ற எழுத்திலாரம்பமாகிறது. க முதலிய ஒவ்வொரு எழுத்துக்களிலும் இருபது நாமாக்கள் வீதம் பதினைந்து எழுத்துகளிலும் 300 நாமாக்கள் அடங்கியது தான் லலிதாத்ரிசதீ என்று சொல்லப்படுகிறது.

काञ्चीकङ्कणहारकुण्डलवती कोटीकिरीटान्विता
कन्दर्पद्युतिकोटिकोटिसदना पीयूषकुम्भस्तना ।
कौसुम्भारुणकाञ्चनाम्बरवृता कैलासवासप्रिया
मामम्बापुरवासिनी भगवती हेरम्बमाताऽवतु ॥ ३ ॥

3. காஞ்சிகங்கணஹாரகுண்டலவதீ கோடீகிரீடாந்விதா
கந்தர்பத்யுதிகோடிகோடிஸதநா பீயூஷகும்பஸ்தநா |
கௌஸும்பாருணகாஞ்சநாம்பரவ்ருதா கைலாஸவாஸப்ரியா
மாமம்பாபுரவாஸினீ பகவதீ ஹேரம்பமாதாவது ||

काञ्चीकङ्कणहारकुण्डलवती இடுப்பில் ஒட்டியாணத்தையும், கைகளில் வளைகளையும் மார்பில் ஹாரத்தையும், செவிகளில் தோடுகளையுமணிந்தவளும், **कोटीकिरीटान्विता** கூர்மையான முனையுடன் கூடிய கிரீடந் தரித்தவளும் **कन्दर्पद्युतिकोटिकोटिसदना** கோடிக் கணக்கான காமனின் காந்திக்கு இருப்பிடமானவளும் **पीयूषकुम्भस्तना** அமுதம் நிரம்பிய குடம்போன்ற கொங்கைகளைப் பெற்றவளும், **कौसुम्भारुणकाञ्चनाम्बरवृता** குஸும்பச்சாய மேற்றிய சிவந்த ஸ்வர்ண ஆடையால் மறைக்கப்பட்டவளும் **कैलासवासप्रिया** கைலயங்கிரியில் வஸிக்கும் சிவபெருமானின் காதலியுமான **अम्बापुरवासिनी मामवतु ।**

குறிப்பு :—இயற்கையாகவே கோடி மன்மதனுக் கொத்த ஒளி வீசப்பெறும் அன்னை, ஆரம், தோடு, கிரீடம் முதலிய ஆபரணம் பூண்டு சிவந்தாடை உடுத்தி, வெள்ளிமலை நாதனுக்கும் மயக்கம் தரும்படி ஒளிபெற்று அமுதக் குடம்போன்ற பால் நிரம்பிய கொங்கை கொண்டு விளங்குகிறாள்.

या सा शुंभनिशुंभदैत्यशमनी या रक्तबीजाशनी
या श्रीविष्णुसरोजनेत्रभवना या ब्रह्मविद्यासती ।
या देवी मधुकैटभासुररिपुः या माहिषध्वंसिनी
मामम्बापुरवासिनी भगवती हेरम्बमातावतु ॥ ४ ॥

4. யா ஸா ஶும்ப⁴நிஶும்ப⁴தை³த்யஶமனீ யா ரக்தபீ³ஜாஶனீ
யா ஶ்ரீவிஷ்ணுஸரோஜநேத்ரப⁴வனா யா ப்³ரஹ்மவித்³யாஸதீ ।
யா தே³வீ மது⁴கைடபா⁴ஸுரரிபு: யா மாஹிஷத்⁴வம்ஸினீ
மாமம்பா³புரவாஸினீ ப⁴க³வதீ ஹேரம்ப³மாதாவது ॥

या எவள் **शुंभ-निशुम्भ-दैत्य-शमनी** சும்பன் நிசும்பன் என்ற அசுரர்களை வதைத்து (உலகைக் காப்பாற்றினளோ) **या** எவள் **रक्तबीजाशनी** ரக்தபீஜன் என்ற அசுரனையு மழித்தவளோ, **या** எவள் **श्रीविष्णुसरोजनेत्रभवना** அழகு வாய்ந்த எங்கும் பரவிய ஈசனது தாமரை போன்ற கண்களால் அன்போடு பார்க்கப்படுகிறாளோ,

या எவள் **देवी ब्रह्मविद्या सती** ஸத் ரூபமாயும் சைதன்ய வடிவாயும் ப்ரும்மவித்யா ரூபமாயும் உபநிஷத்துக்களில் தோன்றுபவளோ **या** எவள் **मधुकैटभासुररिपुः** மது கைடபர்களை வென்றவளோ, **या** எவள் **माहिषध्वंसिनी** மஹிஷாஸுரனை நாசமாக்கியவளோ **सा** அந்த **अम्बापुरवासिनी—मां अवतु ॥**

கருத்து :—எந்த தேவியானவள் இங்கு கூறப்பட்டுள்ள ஆறுவித அசுரர்களை அழிப்பதின் நிமித்தம் பல உருவங்கள் கொண்டு ஜகத்தை ரக்ஷித்து அபயம் கொடுத்தாளோ அந்த தேவி எனது மனதில் குடிகொண்டு என்னை பாழாக்கும் சத்ருக்களான காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்பவர்களையும் வதைத்து உபநிஷத்துக்களில் அறிவிக்கப்படுகிற 'ஸத்' 'சித்' ஆனந்தம், என்ற உண்மையான தனது ஸ்வரூபத்தைத் தோன்றும்படி அருள்புரிவாளாக.

देवी சித், **सती** ஸத்.

श्रीविद्या परदेवताऽदिजननी दुर्गा जया चण्डिका
वाला श्रीत्रिपुरेश्वरी शिवसती श्रीराराजेश्वरी ।
श्रीराज्ञी शिवदूतिका श्रुतिनुता शृङ्गारचूडामणिः
मामम्बापुरवासिनी भगवती हेरम्बमातावतु ॥ ५ ॥

5. ஸ்ரீவித்யா பரதேவதாதிஜநநீ துர்கா ஜயா சண்டிகா
வாலா ஸ்ரீத்ரிபுரேச்வரீ சிவஸதீ ஸ்ரீராஜராஜேச்வரீ |
ஸ்ரீராஜ்ஞீ சிவதூதிகா ச்ருதிநுதா ச்ருங்காரசூடாமணி:
மாமம்பாபுரவாஸினீ பகவதீ ஹேரம்பமாதாவது ||

श्रीविद्या ஸ்ரீ வித்யா என்று ப்ரஸித்திபெற்ற வித்யா ஸ்வரூபிணியும் **परदेवता** சிறந்த தேவதையும் **आदिजननी**

உலகிற்கு முதல் அன்னையும் **दुर्गा** துர்கை ரூபந் தரித்த வளும் **जया** ஜயை என்ற ஸகி வேடந்தரித்தவளும் **चण्डिका** சண்டீ என்ற நாமம் பூண்டு விளங்குபவளும் **बाला** பாலா ரூபிணியும் **श्रीत्रिपुरेश्वरी** ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ என்று க்யாதி பெற்றவளும் **शिवसती** சிவனது ஸதீ (பதிவ்ரதா) தேவியும் **श्रीराजराजेश्वरी** ஸ்ரீ ராஜராஜேஶ்வரியும் **श्रीराज्ञी** ஜகத்துக்கு ஸம்பத் நிறைந்த அரசியாக விளங்குபவளும் **शिवदूतिका** சிவனது தூதியும் **श्रुतिनुता** வேதங்களால் புகழப்படுகிற வளும் அல்லது **शिवदूतिकाश्रुतिनुता** சிவனது தூதிகளால் வேத வாக்யங்களைக் கொண்டு துதிக்கப்படுபவளும், **शृङ्गार-चूडामणिः** ச்ருங்கார ரஸத்துக்குத் தலை ஆபரணமாகச் சிறப் புற்று விளங்குபவளுமான **अम्बापुरवासिनी अवतु**—

ஸ்ரீசக்கரத்தில் அமையப்பெற்ற ஸ்ரீ வித்யா ரூபிணீ பரதேவதை. துர்கை, ஜயை, சண்டீ, பாலை, த்ரிபுரஸுந் தரீ, ராஜராஜேஶ்வரீ என்பவைகள், அந்தந்த காலங்களில் பல காரியங்களின் நிமித்தம் எடுத்துக்கொள்ளப்பட்ட மூர்த்தி பேதங்கள். வேத வேதாந்தங்கள் யாவற்றிற்கும் உட்பொருளாக விளங்குபவள் தேவியே. ப்ரஹ்மானந்தத் துக்கு நிகராக ச்ருதிகளிலேயே சொல்லப்பட்டுள்ள ப்ரியன் ப்ரியை விஷயமான அன்பு எனப்படும் நவரஸங்களுள் முக்கியமான ச்ருங்காரத்திற்குச் சிறந்த அதிஷ்டான தேவ தையாக விளங்கி நிற்பவள் தேவியே. அதனால் சிரோமணி போல ப்ரதானஸ்தானம் பெற்றதுபற்றி ச்ருங்கார சூடா மணி என்று வழங்கப்படுகிறாள்.

இந்த ச்லோகத்தில் தேவியின் அடைமொழிகள் யாவும் ஸஹஸ்ரநாம, அஷ்டோத்தர, த்ரிஶதீ நாமாவளிகளில் உள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

अम्बापञ्चकमद्भुतं पठति चेद्यो वा प्रभातेऽनिशम्
दिव्यैश्वर्यशतायुरुत्तममतिं विद्यां श्रियं शाश्वतीम् ।
लब्ध्वा भूमितले स्वधर्मनिरतां श्रीसुन्दरीं भामिनी-
मन्ते स्वर्गफलं लभेत विबुधैस्संस्तूयमानो नरः ॥ ६ ॥

6. அம்பாபஞ்சகமத்புதம் படதி சேத்யோ வா ப்ரபாதே'நிஶம்
திவ்யைஶ்வர்யஶதாயுருத்தமமதிம் வித்யாம் ஶ்ரியம் ஶாஶ்வதீம் |
லப்த்வா பூமிதலே ஸ்வதர்மநிரதாம் ஶ்ரீஸுந்தரீம் பாமிநீம்
அந்தே ஸ்வர்கபலம் லபேத விபுதைஸ்ஸம்ஸ்தூயமாநோ
நர: ||

यो वा எவனொருவன் **अद्भुतं** ஆச்சரியப்படக்கூடிய **अम्बापञ्चकं** அம்பா பஞ்சரத்ன மென்ற இத்துதியை **प्रभाते** அதிகாலையில் **अनिशं** தினந்தோறும் **पठति चेत्** படிக்கிறனே (அல்லது **पठति** படிக்கிறனே **सः** அவன் **चेत्** நிச்சயமாக) **दिव्यैश्वर्यशतायुः** தேவ உலகத்து ஸம்பத்தையும் தேவமானப் படி நூறு வருஷங்கொண்ட ஆயுளையும் **उत्तममतिं** சிறந்த புத்தி சக்தியையும் **विद्यां** கல்வியையும் **शाश्वतीं श्रियं** அழி வற்ற நிலைத்த செல்வத்தையும் **स्वधर्मनिरतां** தன் கடமை களைச் செய்வதில் ஊக்கங்கொண்ட **श्रीसुन्दरीं** லக்ஷ்மீதேவி போல அழகுவாய்ந்த **भामिनीं** எழில்பெற்று விளங்கும் உத்தமமான பத்னீ என்ற பெண்டிரையும் **भूमितले** இப் பூவுல கில் **लब्ध्वा** அடைந்து **विबुधैः** படித்த வித்வான்களால், விண் ணுலகத்திய தேவர்களால் **संस्तूयमानः** நன்கு சிறப்புற்றுப் புகழப்படும் **नरःसन्** மனிதனுக இருந்துகொண்டு **अन्ते** முடி வில் (பூவுலகத்திய ஸுகங்க ளனைத்து மநுபவித்து முடிந்த பிறகு) **स्वर्गफलं लभेत** விண்ணுலகத்திய ஸுகத்தை அடை வான்.

கருத்து :—பூவுலகில் சுக வாழ்க்கைக்கு முக்கிய காரண மானவை மூன்று. வச்யையான மனைவி, அளவற்ற நிலைத்த

செல்வம், விவேசன் சக்தியுடன் கூடிய சிறந்த கல்வி. அதிலும் புத்தியும் கல்வியு மில்லாதவனிடம் சென்ற செல்வம். அனர்த்தத்தை யளிக்கும் என்பது ப்ரஸித்தமாதலால் "ततो मे श्रियमावह" என்று புத்தி (சக்தி யளித்த பிறகு எனக்கு நிலைத்த செல்வப் பெருக்கை யளிக்கவேண்டும்) என வேண்டுகிறது வேதம். தன் கடைமைகளை ஆக்குதல் தான் முதல் குணம் மனையாளுக்கு. இரண்டாவதாக அழகு என்ற அடைமொழி கருத்துடன் க்ரமமாக கொடுக்கப்பட்டுள்ளது. பூவுலகில் வித்வான்களால் துதிக்கப்பட்டு விண்ணுலகிலும் தேவர்களால் துதிக்கப்படுவான் என்று இரண்டு அர்த்தங்கள் விளங்கும்படி ச்லேடையாக विबुध என்று அமைக்கப்பட்டுள்ளது. நரனாக மனிதனாக இருந்தாலும் தேவர்களால் விண்ணுலகத்தார்களால் மண்ணுலகத்தான் நன்கு துதிக்கப்படுகிறான் என்று விரோதாபாஸவணியும் பெற்றுள்ளது. "उभाभ्यामेव मनुष्यलोकम्" என்றபடி புண்ய பாபங்களின் பயனாக அமையப்பெற்றது பூவுலகில் ஜன்மம். ஸ்வர்க்க ஸுகமோ அதற்கு மாறுபாடாக துக்கம் கலக்கப்படாத சுத்த ஸுக ஸ்வரூபமானது. அவ்விதமான சுகத்தை ப்ராரப்த கர்மத்தின் முடிவில் சந்திரலோகம் சென்று அநுபவிப்பான் என்பது பொருள்.

श्री अम्बापञ्चरत्नं संपूर्णम्

அம்பாபஞ்சரத்னம் முற்றிற்று.

சுபம் பவது

॥ श्री कनकधारास्तवः ॥

ஸ்ரீ கனகதாராஸ்தவம்

अङ्गं हरेः पुलकभूषणमाश्रयन्ती
भृङ्गाङ्गनेव मुकुलाभरणं तमालम् ।
अङ्गीकृताखिलविभूतिरपाङ्गलीला
माङ्गल्यदास्तु मम मङ्गलदेवतायाः ॥ १ ॥

1. *அங்ஹம் ஹரேः புலகபூஷணமாச்ரயந்தீ*
ப்ருங்காங்கநேவ முகுலாபரணம் தமாலம் |
அங்கீக்ருதாகிலவிபூதிரபாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்களதேவதாயா: ||

मुकुलाभरणं மொக்குகளாலலங்கரிக்கப்பட்ட **तमालं** பச்சிலை மரத்தை **भृङ्गाङ्गनेव** பெண்வண்டு (அண்டியிருப்பது) போல **पुलकभूषणं** மயிர்கூச்சலாலலங்கரிக்கப்பட்ட **हरेः अङ्गं** ஸ்ரீமந்நாராயணன் உடம்பை **आश्रयन्ती** தழுவி நிற்பதும் **अङ्गीकृताखिलविभूतिः** விபூதிகளனைத்தையும் ஏற்றதுமான **मङ्गलदेवतायाः** மங்களங்களுக்கதிஷ்டான தேவதையான ஸ்ரீ மகாலக்ஷ்மியின் **अपाङ्गलीला** கடைக்கண்விலாஸம் **मम** எனக்கு **माङ्गल्यदा अस्तु** மங்களங்களை அளிப்பதாக இருக்கட்டும்.

கருத்து :—தேவியின் கடைக்கண் நோக்கு ஸ்ரீ நாராயணன் மேல்பட, உடன் புலகாங்கிதராக ஆகிவிடுகிறார். எட்டுவித ஐச்வர்யங்களையும் பக்தர்களுக்கு எளிதிலளிக்க வல்லமை உடையது என்பது உட்கருத்து.

குறிப்பு :—விஷ்ணுவின் நீலமானமேனி பச்சிலைமரத்திற்கும், மயிர்கூச்சல் மொட்டுகளுக்கும், கடைக்கண்நோக்கு பெண்வண்டுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது.

मुग्धा मुहुर्विदधती वदने मुरारेः
प्रेमत्रपाप्रणिहितानि गतागतानि ।
माला दृशोर्मधुकरीव महोत्पले या
सा मे श्रियं दिशतु सागरसंभवायाः ॥ २ ॥

2. முக்³தா⁴ முஹுர்வித³த⁴தீ வத³நே முராரே:
ப்ரேமத்ரபாப்ரணிஹிதாநி க³தாக³தாநி |
மாலா த்³ருஶோர்மது⁴கரீவ மஹோத்பலே யா
ஸா மே ஶ்ரியம் தி³ஶது ஸாக³ரஸம்ப⁴வாயா: ||

या எது **प्रेमत्रपाप्रणिहितानि** அநுராகத்தாலும் வெட்கத்தாலும் ஏற்பட்ட **गतागतानि** செல்லுதல் திரும்புதல்களை **मुरारेः** முரனையழித்த கடவுளுடைய **वदने** முகத்தில் **मुहुः** அடிக்கடி **विदधती** செய்கின்றதோ, **मुग्धा** அழகுவாய்ந்து, தைர்யம் ஏற்படாது **महोत्पले मधुकरीव** பெரிய கருநீலத் தாமரையில் (உட்கார்ந்து கொண்டும் வெளியில் சென்று கொண்டும்) இருக்கிற பெண் வண்டுபோன்றதோ **सा** அவ்விதமான **सागरसम्भवायाः** க்ஷீரக் கடலிலுதித்த மகாலக்ஷ்மியினது **दृशोर्माला** கண்நோக்கின் வரிசை **मे** எனக்கு **श्रियं दिशतु** ஸம்பத்தை யளிக்கட்டும்.

கருத்து :— அநுராகவசத்தால் பதியைக் கடைக்கண்ணால் நோக்குங்கால் வெட்கம் குறுக்கிட்டுத் தடை செய்கிறது ஆதலாலேயே முக்தை.

குறிப்பு :—முராரியின் முககமலம் உத்பலபுஷ்பத்திற்கும், கண் பார்வைகளின் வரிசை பெண்வண்டிற்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது. அநுராகத்தால் முககமலத்தில் செல்லுதல், வெட்கத்தால் திரும்பிவருதல் என்று முறையே அர்த்தஞ் செய்வதால் யதாஸங்கியவணி இங்கு தோன்றும்.

आमीलिताक्षमधिगम्य मुदा मुकुन्दम्
आनन्दकन्दमनिमेषमनङ्गतन्त्रम् ।
आकेकरस्थितकनीनिकपक्ष्म नेत्रम्
भूत्यै भवेन्मम भुजङ्गशयाङ्गनयाः ॥ ३ ॥

3. ஆமீலிதாக்ஷமதி₄க₃ம்ய முதா₃ முகுந்த₃ம்
ஆனந்த₃கந்த₃மநிமேஷமனங்க₃தந்த்ரம் |
ஆகேகரஸ்தி₂தகநீநிகபக்ஷ்மநேத்ரம்
பூ₄த்யை ப₄வேந்மம பு₄ஜங்க₃ஶயாங்க₃நாயா: ||

मुदा ஸந்தோஷத்தினல் आमीलिताक्षं கொஞ்சம் ஒரு பாகத்தில் மூடிக்கொள்ளப்பட்ட கண்ணையுடைய मुकुन्दं பெருமானை अधिगम्य அடைந்து आनन्दकन्दं ஆனந்தத்துக்கு மூலமாயும் अनिमेषम् ஏமைக்கொட்டு நீங்கப்பெற்றதும் अनङ्गतन्त्रम् காமத்தை (அநுராகத்தை)வளர்ப்பதும் आकेकर-स्थितकनीनिकपक्ष्म கொஞ்சங் கோணலாக்கப்பட்ட கருவிழி, இமைகளை உடையதுமான भुजङ्गशयाङ्गनायाः சேஷதல்பத்தில் சயனித்திருக்கும் பெருமானின் பிராட்டியினுடைய नेत्रम् திருஷ்டிவிலாஸம் मम எனக்கு भूत्यै भवेत् க்ஷேமத்தை யளிக்கட்டும்.

கருத்து :— ஆனந்தத்தை அநுபவிக்குங்கால் கண் கொஞ்சம் மூடப்படுவது ஸஹ்ருதய ஸாக்ஷிகம். மங்களங்களை அளிக்கும் வல்லமை மங்களாதிஷ்டான தேவதைக்கு, ஸம்பத்தையளிக்கும் வல்லமை ரத்னகரத்திலுதித்த தேவதைக்கு, பயத்தை நீக்கி க்ஷேமமளிக்குந் திறமை ஸர்பராஜன் அருகில் பழகுந் தேவதைக்குப் பொருத்தமானது என்ற கருத்து முறையே மூன்று பத்யங்களிலுள்ள லக்ஷ்மியைக் குறிக்கும் பதங்களால் வெளிப்படுகிறது.

बाह्वन्तरे मधुजितः श्रितकौस्तुभे या
हारावलीव हरिनीलमयी विभाति ।
कामप्रदा भगवतोऽपि कटाक्षमाला
कल्याणमावहतु मे कमलालयायाः ॥ ४ ॥

4. பாஹ்வந்தரே மதுஜித: ஶ்ரிதகௌஸ்துபே யா
ஹாராவளீவ ஹரிநீலமயீ விபாதி |
காமப்ரதா பகவதோ'பி கடாக்ஷமாலா
கல்யாணமாவஹது மே கமலாலயாயா: ||

श्रितकौस्तुभे கௌஸ்த்துப ரத்னமணிந்த **मधुजित:** மதுவை வென்ற நாரணனுடைய **बाह्वन्तरे** மார்பில் **या** எது **हरिनीलमयी** இந்திரநீலக் கற்களாலாகிய **हारावलीव** மாலை வரிசைபோல **विभाति** விளங்குகிறதோ, **भगवतोऽपि** ஷாட்குண்யம் நிரம்பிய கடவுளுக்கும் **कामप्रदा** இஷ்டத்தை (அநுராகத்தை) யளிக்க வல்ல **कमलालयाया:** தாமரையில் வீற்றிருக்கும் தேவியின் **सा** அந்த **कटाक्षमाला** கடைக்கண் நோக்கின் வரிசை **मे** எனக்கு **कल्याणमावहतु** ஸகல மங்களத்தையு மளிக்கட்டும்.

"उत्पत्तिं च विनाशं च भूतानामागतिं गतिम् ।
वेत्ति विद्यामविद्याञ्च स वाच्यो भगवानिति ॥"

"ऐश्वर्यस्य समग्रस्य धर्मस्य यशसः श्रियः ।
ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भग इतीरणा ॥"

என்று பகபதத்தின் பொருள் இருவிதமாகக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பு:—கடாக்ஷமாலை இந்திரநீலக்கல்களாலாகிய ஆரத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. கௌத்துபமணி ஹாரத்தின் நடுவிலுள்ள மேருமணிபோல விளங்குகிறது. கமலத்தை இருப்பிடமாகக் கொண்டவள் கல்யாணத்தையளிப்பது பொருத்தமே. மங்களமான புஷ்பமன்றோ கமலம்; காமனைப்பெற்றவன் ஸ்ரீமந்நாராயணன் அந்த பகவானுக்கும் காமனையளிக்கிறாள் என்பது ஆச்சரியம்.

कालाम्बुदालिललितोरसि कैटभारेः
धाराधरे स्फुरति या तडिदङ्गनेव ।
मातुस्समस्तजगतां महनीयमूर्तिः
भद्राणि मे दिशतु भार्गवनन्दनायाः ॥ ५ ॥

5. காலாம்புதாலிலலிதோரஸி கைடபாரேः
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கனேவ |
மாதுஸ்ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்திः
பத்ராணி மே திசது பார்கவநந்தநாயாः ||

कैटभारेः கைடபாஸுரனை வதைத்த எம்பெருமானுடைய **कालाम्बुदालि** நீருண்ட மேகக்கூட்டம்போன்ற **ललितोरसि** அழகிய மார்பில் **धाराधरे** நீர்நிரம்பிய மேகத்தில் **तडिदङ्गनेव** மின்னல் கொடிபோல **या** எது **स्फुरति** பிரகாசிக்கின்றதோ (**सा** அந்த) **समस्तजगतां मातुः** உலகம் யாவற்றிற்குமன்னையான **भार्गवनन्दनायाः** பார்கவனது பெண்மணியான தேவியின் **महनीयमूर्तिः** கொண்டாடப்படும் உருவம் **मे** எனக்கு **भद्राणि** மங்களங்களை **दिशतु** அளிக்கட்டும்.

குறிப்பு :—மார்பு மேகத்திற்கும் உருவம் மின்னலுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது. லக்ஷ்மீதேவியின் பூஜிக்கத்தகுந்த திருமேனி மேகத்திலுள்ள மின்னல்கொடிபோல நாரணன் மார்பில் விளங்குகிறது என்ற உவமை நன்கு பொருத்தமாயுள்ளது.

प्राप्तं पदं प्रथमतः खलु यत्प्रभावात्
माङ्गल्यभाजि मधुमाथिनि मन्मथेन ।
मय्यापतेत् तदिह मन्थरमीक्षणार्धम्
मन्दालसं च मकरालयकन्यकायाः ॥ ६ ॥

6. ப்ராப்தம் பதம் ப்ரதமதः கலு யத்ப்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதினி மன்மதேந |
மய்யாபதேத் ததிஹ மந்தரமீக்ஷணார்தம்
மந்தாலஸம் ச மகராலயகன்யகாயாः ||

यत्प्रभावात् எந்த கடாக்ஷத்தின் மஹிமையால் **माङ्गल्य-भाजि** ஸர்வமங்களங்களுடன்கூடிய **मधुमाथिनि** மது என்ற அரக்கனை அழித்த பெருமானிடத்தில் **मन्मथेन** உலகங்களின் மனதைக்கடைந்து துன்புறுத்தும் இயற்கை வாய்ந்த காமனுங்கூட **प्रथमतः** முதலில் **पदं प्राप्तं खलु** ப்ரவேசிக்கப்

பட்டதோ **तत्** அந்த **मन्थरं** மெதுவானதும் **मन्दालसं** மதத்தால் மந்தமும் சோம்பல் நிரம்பியதுமான **मकरालयकन्यकायाः** ஸமுத்ரராஜனது மகளின் **ईक्षणार्धं** பாதி கடாக்ஷ வீக்ஷணம் **इह मयि** இந்த தாஸனாகிய என்மேல் **आपतेत्** கொஞ்சம் விழட்டும்.

கருத்து :—மது என்ற கொடியவனை அழித்த பெருமானிடத்தில், உலகெங்கும் விஜயமடைந்துவிளங்கும் காமனுக்கும் மகாலக்ஷ்மீ ப்ரபாவத்தால் தான் மயக்கும் சக்தி ஏற்பட்டது என்பதால் "**मन्मथेन**" என்பது ஸாபிப்ராய விசேஷணமானது என்றதால் இது 'பரிகராங்குரவணி' எனப்படும்.

विश्वामरेन्द्रपदविभ्रमदानदक्षम् आनन्दहेतुरधिकं मुरविद्विषोऽपि ।
ईषन्निषीदतु मयि क्षणमीक्षणार्द्धम् इन्दीवरोदरसहोदरमिन्दिरायाः ॥७

7. விஶ்வாமரேந்த்ரபதவிப்ரமதாநதக்ஷம்
ஆநந்தஹேதுரதிகம் முரவித்விஷோ’பி |
ஈஷந்நிஷீதது மயி க்ஷணமீக்ஷணார்த்தம்
இந்தீவரோதரஸஹோதரமிந்திராயா: ||

विश्वामरेन्द्रपद-நரராஜ, தேவராஜப் பதவிகளின் **विभ्रम**-மகிமையை **दानदक्षं** கொடுக்க வல்லமை பொருந்தியதும் **मुरविद्विषोऽपि** முராசுரனையழித்தத் திருமாலுக்கும் **अधिकमानन्दहेतुः** மிகுந்த ஸந்தோஷமளிக்கும் சக்திவாய்ந்ததும் **इन्दीवरोदरसहोदरम्** கருந்தாமரையின் நடு போன்றதுமான **इन्दिरायाः** ஸ்ரீ தேவியின் **ईक्षणार्धम्** அரைப் பார்வையானது **मयि** (தாஸனாகிய) என் விஷயத்தில் **क्षणम्** கணப்பொழுது **ईषन्निषीदतु** கொஞ்சம் தங்கி நிற்கட்டும்.

குறிப்பு :—இந்தீவரத்திலுதித்த இந்திரை என்று வழங்கப்படும் லக்ஷ்மீதேவியின் கடைக்கண், உத்பத்திஸ்தானமாகிய இந்தீவரம் போல இருப்பது நியாயமே. கார்யகுணம் காரணகுணத்தை ஒத்திருப்

பதுதான் உலகப்ரஸித்தம். கொஞ்சம் செலுத்தினுலேயே உலகராஜ்யத்தையும் தேவராஜ்யத்தையும் கொடுக்க வல்லமையுள்ளது என்ருல் கடாக்ஷத்தின் மஹிமை சொல்ல இயலாது. ஒருபிடி அவல் குசேலருக்கு ஸர்வஸம்பத்தை அளிக்கவல்லமையுள்ளது என்றல்லவோ ஸ்ரீதேவியால் இரண்டாவது அவல்பிடி சாப்பிடும்போது தடுக்கப்பட்டது.

इष्टाविशिष्टमतयोऽपि यया दयार्द्रदृष्ट्या त्रिविष्टपपदं सुलभं लभन्ते ।
दृष्टिः प्रहृष्टकमलोदरदीप्तिरिष्टां पुष्टिं कृषीष्ट मम पुष्करविष्टरायाः ॥८

8. இஷ்டாவிஶிஷ்டமதயோபி யயா தயார்த்ர-
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டபபதம் ஸுலபம் லபந்தே |
த்ருஷ்டிஃப்ரஹ்ருஷ்டகமலோதரதீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ்ட மம புஷ்கரவிஷ்டராயாஃ ||

इष्टाविशिष्टमतयः अपि (அச்வமேதம் முதலிய) யாகங்களால் புனிதஞ்செய்யப்படாத சித்த விருத்தியையுடைய மனிதர்களும் **यया** எந்த தேவியின் கடாக்ஷத்தால் **दृष्टाः** நோக்கப்பட்டவர்களாய் **त्रिविष्टपपदं सुलभं** எளிதில் மூவுலகிற்கு அதிபதியாக இருக்கும். பதவியைக்கூட **लभन्ते** அடைகின்றனரோ **सा** அந்த **प्रहृष्टकमलोदरदीप्तिः** மலர்ந்த தாமரையின் நடுபோல் ப்ரகாசிக்கின்ற **पुष्करविष्टरायाः** தாமரையில் வீற்றிருக்கும் ஸ்ரீ தேவியின் **दृष्टिः** பார்வை **मम** எனக்கு **इष्टां पुष्टिं** விரும்பப்படும் தனதாந்ய புத்ரன் முதலான ஸம்பத்துக்களின் நிறைவை **कृषीष्ट** செய்யட்டும்.

கருத்து :—நூறு அசுவமேதயாகங்கள் செய்தவன்தான் இந்திர பதம்பெற வல்லமையுள்ளவன் என்பது சாஸ்திரங்களின் ஸித்தாந்தம். அவ்விதம் செய்யாதவர்களும் ஸ்ரீ தேவியின் ப்ரஸாதத்தால் மகேந்திரப் பதவியேறச் சக்தி வாய்ந்தவர்களாக ஆகிருர்கள்.

குறிப்பு :—புஷ்கரத்திலமர்ந்தவள் புஷ்டியை யளிக்கவல்லமையுள்ளவள் என்று அடைமொழிகாரணங்காட்டுவது கவனிக்கத்தக்கது.

दद्याद्दयानुपवनो द्रविणाम्बुधारामस्मिन्नकिञ्चनविहङ्गशिशौ विषण्णे ।
दुष्कर्मघर्ममपनीय चिराय दूरं नारायणप्रणयिनीनयनाम्बुवाहः ॥९॥

9. தத்யாத்தயாநுபவநோ த்ரவிணாம்புதாராம்
அஸ்மிந்நகிஞ்சநவிஹங்கசிசௌ விஷண்ணே |
துஷ்கர்மகர்மமபநீய சிராய தூரம்
நாராயணப்ரணயிநீநயநாம்புவாஹ: ||

दयानुपवनः கருணையாகிற அநுகூலமான காற்றோடு கூடிய **नारायणप्रणयिनी**-நாராயணனின் காதலியின் **नयनाम्बुवाहः** கண்ணாகிற கார்மேகம் **विषण्णे** (பசியால்) வருந்துகிற **अस्मिन्** இந்த **अकिञ्चनविहङ्गशिशौ** தரித்திரனாகிய (சாதக)ப் பறவைக்குஞ்சு விஷயத்தில் **चिराय** வெகு காலமாயுள்ள **दुष्कर्मघर्मम्** தீவினையாகிய கோடைவெப்பத்தை **दूरात्** வெகு தூரத்தில் **अपनीय** நீக்கி **द्रविणाम्बु धाराम्** பொருளாகிய ஜலப் பெருக்கை **दद्यात्** கொடுக்கவேண்டும்.

கருத்து:—கழுத்தில் த்வாரத்தால் பூமியிலுள்ள உணவை உண்டு பசிப்பிணியை நீக்கிக்கொள்ளச் சக்தியில்லாத சாதகப் பறவை, அதிலும் குஞ்சு, பசிப்பிணி தீர தேவ மாத்ருகமான ஸ்தலங்கள் போல வானத்தை நோக்கி வருந்திருக்குங்கால், காற்றலடித்து வரப்பட்ட கார்மேகம் ஆகாயத்தில் தோன்றி குளிர்ந்த நிழலைத் தந்து, வெப்பம் நீக்கி, மழைத்துளி வெள்ளத்தைப் பொழிய, கழுத்தை நிமிர்த்து மழை ஜலம் பருகிப் பசியை நீக்கிக் களிப்பதுபோல, தரித்திரக் குழந்தையாகிய, இந்த என்னையும் கருணையால் கடைக்கண் நோக்கைச் செலுத்தி, பொருள் பெருக்கை யளித்துக் களிக்கச் செய்யவேண்டும். அத்துடன் ஏழ்மைக்குக் காரணமாகிய யான் செய்த தீயச்செயல்களையும் விலகச் செய்யவேண்டும்.

गीर्देवतेति गरुडध्वजसुन्दरीति शाकम्भरीति शशिशेखरवल्लभेति ।
सृष्टिस्थितिप्रलयकेलिषु संस्थितायै तस्यै नमस्त्रिभुवनैकगुरोस्तरुण्यै ॥

10. கீர்தேவதேதி கருடத்வஜஸுந்தரீதி
ஶாகம்பரீதி ஶஶிஶேகரவல்லபேதி ।
ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயகேளிஷு ஸம்ஸ்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவனைக குரோஸ்தருண்யை ॥

गीर्देवतेति ஸரஸ்வதீ தேவியென்றும் **गरुडध्वज-सुन्दरीति** கருடனைக் கொடியில்கொண்ட ஸ்ரீமந்நாராயணன் காதலியான ஸ்ரீ இலக்குமியென்றும் **शाकम्भरीति** சாகம்பரீயென்றும் **शशिशेखरवल्लभेति** சந்திரனை மகுடத்தில் தாங்கிநிற்கும் பரமசிவனின் காதலியான ஸர்வமங்களையென்றும் (நாமத்துடன் பிரசித்திபெற்று) **सृष्टिस्थितिप्रलयकेलिषु** படைத்தல் ,காத்தல், அழித்தல் என்ற விளையாட்டான காரியங்களில் **संस्थितायै** நிற்கின்ற **त्रिभुवनैकगुरोः** மூவுலகிற்கும் அறியாமையை யகற்றி முத்தியளிக்கும் எம்பெருமானின் **तरुण्यै** காதலியான **तस्यै** அந்த ஸ்ரீ தேவியின்பொருட்டு **नमः** நமஸ்காரம்.

கருத்து :—படைத்தல் என்ற தொழில் புரியுங்கால் ஸரஸ்வதி யென்றும், காத்தல் தொழில் செய்யும்போது மகாலக்ஷ்மீ யென்றும், அழித்தல் என்ற தொழில் செய்யும் பொழுது குளிர்ந்த சந்த்ரனை மகுடத்திலணிந்த சிவனது காதலியென்றும் பல நாமங்களால் ப்ரஸித்திபெற்றவள் என்று முறையே அர்த்தம் கொள்ளல் வேண்டும்.

श्रुत्यै नमोऽस्तु शुभकर्मफलप्रसूत्यै
रत्यै नमोऽस्तु रमणीयगुणार्णवायै ।
शक्त्यै नमोऽस्तु शतपत्रनिकेतनायै
पुष्ट्यै नमोऽस्तु पुरुषोत्तमवल्लभायै ॥ ११ ॥

11. ஶ்ருத்யை நமோ'ஸ்து ஶுபகர்மஃபலப்ரஸூத்யை
ரத்யை நமோஸ்து ரமணீய குணார்ணவாயை |
ஶக்த்யை நமோ'ஸ்து ஶதபத்ரநிகேதநாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தமவல்லபாயை ||

शुभकर्मफलप्रसूत्यै நற்செய்கைகளின் பயன்களையளிக்கும் **श्रुत्यै** வேதமாதாவாகிய தங்களுக்கு **नमोऽस्तु** நமஸ்காரம்-**रमणीयगुणार्णवायै** இனிய நற்குணங்களுக்கு இருப்பிடமாகிய **रत्यै नमोऽस्तु** ரதிதேவியாகிய தங்களுக்கு நமஸ்காரம். **शतपत्र-निकेतनायै** தாமரையில் வசிக்கும் **शक्त्यै नमोऽस्तु** சக்திஸ்வரூபியான தேவிக்கு நமஸ்காரம். **पुरुषोत्तमवल्लभायै** சிறந்த பெருமாளின் காதலியான **पुष्ट्यै नमोऽस्तु** (தநதாந்ய புத்ரமித்ர களத்ராதி ஸம்பத்தாகிய) புஷ்டிதேவிக்கு நமஸ்காரம்.

குறிப்பு :—நல்லகர்மாக்களை போதித்து செய்வித்துப் பயனை அனுபவிக்கச் செய்வது ச்ருதி. அழகிய குணங்களிருந்தால் மனதிற்கு ரதி (ஸந்தோஷம்) உண்டாவது அநுபவஸித்தம். நூறு இதழமைந்த தாமரையில் வீற்றிருப்பவள் சக்திஸ்வரூபிணீ. புருஷோத்தமன் காதலி புஷ்டிதேவதை என்று ஆங்காங்கு பொருளையொட்டிய அடைமொழிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

नमोऽस्तु नालीकनिभाननायै नमोऽस्तु दुग्धोदधिजन्मभूम्यै ।
नमोऽस्तु सोमामृतसोदरायै नमोऽस्तु नारायणवल्लभायै ॥ १२ ॥

12. நமோ'ஸ்து நாளீகநிபாநநாயை
நமோ'ஸ்து துக்தோததிஜந்மபூம்யை |
நமோ'ஸ்து ஸோமாம்ருதஸோதராயை
நமோ'ஸ்து நாராயணவல்லபாயை ||

नालीकनिभाननायै தாமரையொத்த முகம்வாய்ந்த மகாதேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம் இருக்கட்டும். **दुग्धोदधिजन्म-भूम्यै** பாற்கடலினுதித்த ஸ்ரீ தேவிக்கு **नमोऽस्तु** வணக்கமிருக்கட்டும். **सोमामृतसोदरायै** சந்திரன் அமுதம் இவைகளுடன் கூடப் பிறந்து அவைகளைப்போல சுகத்தையளிப்பவ

ளான லக்ஷ்மீ தேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரமிருக்கட்டும். **नारायणवल्लभायै** உலகங்கள் யாவற்றையும் தன்னுள்ளடக்கி வைத்திருக்கும் பெருமாளின் காதலிக்கு **नमोऽस्तु** வணக்கம் இருக்கட்டும்.

கருத்து:—தாமரையையொத்த முகத்தால் பார்ப்பவர்களின் கண்களை மகிழச்செய்கிருள். பால்கடலிலுதித்தவளாதலால் காரணத்தையொட்டி மிகச்சுத்தமானவள். தன்னை துதிப்பவர்களுக்கு, பால் ஜலத்திற்குத் தன்ஸாம்யத்தைக் கொடுப்பதுபோல கொடுப்பவள். சந்திரனுடன்கூடப்பிறந்ததால் ஸர்வஜனங்களையும் ஸந்தோஷப்படுத்துகிருள். அமுதத்துடன் கூடப்பிறந்ததால் இப்புவியில் சுவையூட்டிப்பிறகு பிறப்புப்பிணி நீக்கி சாச்வதஸுகமாகிய முக்தி என்ற இறவாமையை அளிக்கிருள். இருபத்துநான்குத் தத்வங்களுக்கு அதிஷ்டானமான விஷ்ணுவின் காதலி என்றதால் ப்ரபஞ்சதத்வங்கள் இருபத்துநான்கும் ஏற்படுவதற்கு மூலகாரணமாயுள்ளவள்.

***नमोऽस्तु हेमाम्बुजपीठिकायै नमोऽस्तु भूमण्डलनायिकायै ।**
नमोऽस्तु देवादिदयापरायै नमोऽस्तु शार्ङ्गायुधवल्लभायै ॥ १३ ॥

13. நமோ'ஸ்து ஹேமாம்புஜபீடிகாயை
நமோ'ஸ்து பூமண்டலநாயிகாயை |
நமோ'ஸ்து தேவாதிதயாபராயை
நமோ'ஸ்து ஶார்ங்காயுதவல்லபாயை ||

हेमाम्बुजपीठिकायै தங்கத்தாமரையை ஆசனமாகக் கொண்டமகாதேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **भूमण्डलनायिकायै** வட்டவடிவமுள்ள பூமியின் தலைவிக்கு **नमोऽस्तु** வணக்கம் இருக்கட்டும். **देवादिदयापरायै** தேவர்கள் முதலியவர்களுக்குக் கருணைகூர்ந்து அநுக்ரஹிப்பதிலே நோக்கமுள்ள தேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம் **शार्ङ्गायुधवल्लभायै** "ஶார்ங்கம்" என்று பெயர்கொண்ட வில்லை ஆயுதமாக அணிந்த பெருமாளின் காதலிக்கு **नमोऽस्तु** வணக்கம் இருக்கட்டும்.

---

* 13, 14, 15 இம்மூன்று ச்லோகங்களும் நிர்ணயஸாகர் பதிப்பில் உள்ளன.

கருத்து :—தங்கத்தாமரையில் வீற்றிருந்து பூவுலகை களிக்கச் செய்து, சார்ங்கம் என்றவில்லைக் கையிலேந்தி துஷ்ட அரக்கர்களை யுத்தத்தில் வென்று, தேவர்களிழந்த ஸ்தானத்தை மீட்டுக் கொடுப்பதால் தேவர்களையும் களிக்கச் செய்யும் இயற்கை வாய்ந்தவள் தேவி.

नमोऽस्तु देव्यै भृगुनन्दनायै नमोऽस्तु विष्णोरुरसि स्थितायै ।
नमोऽस्तु लक्ष्म्यै कमलालयायै नमोऽस्तु दामोदरवल्लभायै ॥ १४ ॥

14. நமோ'ஸ்து தேவ்யை ப்ருகுநந்தநாயை
நமோ'ஸ்து விஷ்ணோருரஸி ஸ்திதாயை |
நமோ'ஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோ'ஸ்து தாமோதரவல்லபாயை ||

भृगुनन्दनायै देव्यै ப்ருகுவின் புதல்வியான தேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **विष्णोरुरसि स्थितायै** ஜகத்தில் வ்யாபித்திருக்கும் கடவுளின் மார்பில் குடிகொண்டிருப்பவளுக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **कमलालयायै लक्ष्म्यै** தாமரையில் வஸிக்கும் மகாலக்ஷ்மிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **दामोदरवल्लभायै** திருடியதற்கு சிக்ஷையாக உரலில் கயிற்றால் கட்டப்பட்டிருந்தாலும் கட்டை விடுவிக்கவல்ல பெருமாளின் பிராட்டிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம்.

नमोऽस्तु कान्त्यै कमलेक्षणायै नमोऽस्तु भूत्यै भुवनप्रसूत्यै ।
नमोऽस्तु देवादिभिरर्चितायै नमोऽस्तु नन्दात्मजवल्लभायै ॥ १५ ॥

15. நமோ'ஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோ'ஸ்து பூத்யை புவநப்ரஸூத்யை |
நமோ'ஸ்து தேவாதிபிரர்சிதாயை
நமோ'ஸ்து நந்தாத்மஜவல்லபாயை ||

कमलेक्षणायै कान्त्यै தாமரைபோன்ற கண்களையுடைய ஒளியின் வடிவமான தேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **भुवनप्रसूत्यै** உலகங்களைப்படைத்த **भूत्यै** பூதிஸ்வரூபமான தேவிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **देवादिभिरर्चितायै** விண்ணுலகத்தார் முத

ஷியவர்களால் பூஜிக்கப்படுபவளுக்கு **नमोऽस्तु** நமஸ்காரம். **नन्दात्मजवल्लभायै** நந்தனின் புதல்வனாக அவதரித்த நாராயணனின் காதலிக்கு **नमोऽस्तु** நமஸ்காரம்.

सम्पत्कराणि सकलेन्द्रियनन्दनानि
साम्राज्यदानविभवानि सरोरुहाक्षि ।
त्वद्वन्दनानि दुरिताहरणोद्यतानि
मामेव मातरनिशं कलयन्तु मान्ये ॥ १६ ॥

16. ஸம்பத்கராணி ஸகலேந்த்ரியநந்தநாநி
ஸாம்ராஜ்யதாநவிபவாநி ஸரோருஹாக்ஷி |
த்வத்வந்தநாநி துரிதாஹரணோத்யதாநி
மாமேவ மாதரநிசம் கலயந்து மாந்யே ||

मातः ஓ தாயே! **सरोरुहाक्षि** தாமரைக்கண் படைத்தவளே! **मान्ये** பூஜிக்கத்தகுந்தவளே! **सम्पत्कराणि** ஸகல ஸம்பத்துக்களையளிப்பதும் **सकलेन्द्रियनन्दनानि** புலன்களனைத்தையும் மகிழச்செய்வதும் **साम्राज्यदानविभवानि** ஏகசக்ராதிபத்யம் என்ற உத்தம நிலையைக்கொடுக்கும் சக்திவாய்ந்ததும் **दुरिताहरणोद्यतानि** பாபங்களை விலக்கிப் புனிதப்படுத்துவதில் முயற்சியுள்ளதுமான **त्वद्वन्दनानि** உனக்குச் செய்யும் நமஸ்காரங்கள் **मामेव** என்னையே **अनिशं** எப்பொழுதும் **कलयन्तु** அடையட்டும் (அச்ரயிக்கட்டும்)

கருத்து :—ஓ பூஜிக்கத் தகுந்த தாயே! எப்பொழுதும உன் பாதாரவிந்தங்களில் பணிந்துகொண்டு அந்த புண்ணிய பலத்தால் பாபங்களை யொழித்து இறுதியில் "ஸாம்ராஜ்யம்" என்ற ஸம்பத்தை அடையும்படி. கடாக்ஷித்து அநுக்ரஹிப்பாயாக.

यत्कटाक्षसमुपासनाविधिः सेवकस्य सकलार्थसम्पदः ।
संतनोति वचनाङ्गमानसैः त्वां मुरारिहृदयेश्वरीं भजे ॥ १७ ॥

17. யத்கடாக்ஷஸமுபாஸநாவிதி:
ஸேவகஸ்ய ஸகலார்த்தஸம்பத: |
ஸந்தநோதி வசநாங்கமாநஸை:
த்வாம் முராரிஹ்ருதயேஶ்வரீம் பஜே ||

यत्कटाक्षसमुपासनाविधिः எந்த தேவியின் கடைக்கண் நோக்கை நன்கு உபாஸிப்பது என்ற கார்யம் **सेवकस्य** ஸேவிப்பவனுக்கு **सकलार्थसम्पदः** விரும்பப்படும் எல்லா ஸம்பத்துக்களையும் **संतनोति** விரிவாகக் கொடுக்கிறதோ (அவ்வித) **मुरारिहृदयेश्वरीं** முரனையழித்த பெருமாளின் மார்பில் வீற்றிருந்து, அவர் மனதை வசப்படுத்திக் கொண்டிருக்கும் ஈசுவரியான **त्वां** உன்னை **वचनाङ्गमानसैः** வாய், உடல் மனது, என்ற முக்கரணங்களாலும் **भजे** (ஒரே ஸமயத்தில்) சரணமடைந்து ஸேவிக்கிறேன்.

सरसिजनिलये सरोजहस्ते धवलतमांशुकगन्धमाल्यशोभे ।
भगवति हरिवल्लभे मनोज्ञे त्रिभुवनभूतिकरि प्रसीद मह्यम् ॥ १८ ॥

18. ஸரஸிஜநிலயே ஸரோஜஹஸ்தே
தவளதமாம்ஶுககந்தமால்யஶோபே |
பகவதி ஹரிவல்லபே மநோஜ்ஞே
த்ரிபுவநபூதிகரி ப்ரஸீத மஹ்யம் ||

सरसिजनिलये தாமரையில் வஸிப்பவளே! **सरोजहस्ते** தாமரையைக் கையிலேந்தியவளே! **धवलतमांशुकगन्धमाल्यशोभे** வெண்ணிறமான ஆடை, பூச்சு, மாலைகளால் அழகுபெற்று விளங்குபவளே! **भगवति** ஆறுவித அஸாதாரண குணங்களமையப்பெற்றவளே! **हरिवल्लभे** ஹரியின் காதலியே! **मनोज्ञे** மனதை ரமிக்கச் செய்பவளே (மனதின் ஆசயத்தை ஸாக்ஷியாக நின்று அறிபவளே! **त्रिभुवनभूतिकरि** மூவுலகிற்கும் ஐச்வர்யமளிப்பவளே! **मह्यं प्रसीद** என்னிடம் தயை கொள்வாயாக.

दिग्घस्तिभिः कनककुम्भमुखावसृष्ट-
स्वर्वाहिनीविमलचारुजलप्लुताङ्गीम् ।
प्रातर्नमामि जगतां जननीमशेष-
लोकाधिनाथगृहिणीममृताब्धिपुत्रीम् ॥ १९ ॥

19. திக்ஹஸ்திபி: கநககும்பமுகாவஸ்ருஷ்ட
ஸ்வர்வாஹிநீவிமலசாருஜலப்லுதாங்கீம் |
ப்ராதர்நமாமி ஜகதாம் ஜநநீமசேஷ
லோகாதிநாதக்ருஹிணீமம்ருதாப்திபுத்ரீம் ||

दिग्घस्तिभिः திக்கஜங்களால் **कनककुम्भ**-தங்கக் குடங்களின் **मुखावसृष्ट**-வாயிலிலிருந்து விடப்பட்ட **स्वर्वाहिनी** தேவலோகத்து நதியான கங்கையின் **विमलचारुजल**-ஸ்வச்சமான (ருசியுள்ள) புனிதமான தண்ணீரால் **प्लुताङ्गीम्** உடம்பில் ஸ்னானம் (அபிஷேகம்) செய்விக்கப்படுகிறவளும் **जगतां जननीं** உலகங்களைப் பெற்றெடுத்த அன்னையும் **अशेष-लोकाधिनाथगृहिणीं** எல்லா உலகங்களையும் காத்தருளும் பெருமாளின் மனையாளும் **अमृताब्धिपुत्रीम्** அம்ருதம் தோன்றிய கடலிலிருந்து உதித்த பெண்மணியுமான மகாலக்ஷ்மீ தேவியை **प्रातर्नमामि** அதிகாலையிலெழுந்து வணங்குகிறேன்.

कमले कमलाक्षवल्लभे त्वं करुणापूरतरङ्गितैरपाङ्गैः ।
अवलोकय मामकिञ्चनानां प्रथमं पात्रमकृत्रिमं दयायाः ॥ २० ॥

20. கமலே கமலாக்ஷவல்லபே த்வம்
கருணாபூரதரங்கிதைரபாங்கை: |
அவலோகய மாமகிஞ்சநாநாம்
ப்ரதமம் பாத்ரமக்ருத்ரிமம் தயாயா: ||

कमलाक्षवल्लभे செந்தாமரைக்கண்ணனின் காதலியே! **कमले** லக்ஷ்மீ தேவியே! **त्वं** நீ **करुणापूरतरङ्गितैः** கருணை வெள்ளத்தின் அலைமோதுகின்ற **अपाङ्गैः** கடைக்கண்களால் **अकिञ्चनानां प्रथमं** ஏழ்மைத்தனம் நிரம்பியவர்களுக்குள்

முதலாவது ஸ்தானம்பெற்றவனும் **दयायाः** கருணைக்கு **अकृत्रिमं पात्रं** இயற்கையாகவே அமைந்த ஸத்பாத்திரமாகவு முள்ள **मां** என்னை **अवलोकय** விழித்து நோக்குவாயாக.

स्तुवन्ति ये स्तुतिभिरमूभिरन्वहं त्रयीमयीं त्रिभुवनमातरं रमाम् ।
गुणाधिका गुरुतरभाग्यभागिनः भवन्ति ते भुवि बुधभाविताशयाः ॥

21. ஸ்துவந்தி யே ஸ்துதிபிரமூபிரந்வஹம்
த்ரயீமயீம் த்ரிபுவநமாதரம் ரமாம் |
குணாதிகா குருதரபாக்யபாகிந:
பவந்தி தே புவி புதபாவிதாஶயா: ||

त्रयीमयीं மூன்று வேதஸ்வரூபிணியாயும் **त्रिभुवनमातरं** மூவுலகிற்கும் அன்னையும் ஆன **रमां** லக்ஷ்மீ தேவியை **अमूभिः** இந்த **स्तुतिभिः** ஸ்தோத்ரங்களால் **अन्वहं** ஒவ்வொரு நாளும் **ये** எவர்கள் **स्तुवन्ति** துதிக்கிறார்களோ **ते** அவர்கள் **भुवि** இம் மானிட உலகில் **गुणाधिकाः** நற்குணங்கள் நிரம்பியவர்களாக வும் **गुरुधनभाग्यभागिनः** ஏராளமான பாக்யம் பெற்றவர்களாக வும் **बुधभाविताशयाः** கலைஞர்களாலும் கொண்டாடப்படும் ப்ரதிபாசக்தி வாய்ந்தவர்களாகவும் **भवन्ति** ஆகிறார்கள்.

கருத்து ;—இத்துதியை தினந்தோறும் காலை மாலைகளில் விடாது உச்சரித்து அன்னையைத் தியானித்துத் துதிப்பவர் கள் இவ்வுலகில் ஸகல பாக்கியம் நிரம்பியவர்களாய் ஸுக மநுபவித்து இறுதியில் ஈசனிடத்தில் பக்தியைச் செலுத்தி, ஞான மூர்த்தியின் ப்ரஸாதத்தால் முக்திக்குக் காரணமான தத்வ ஞானமடைந்து அழிவற்ற ஆத்மாநந்தம் அநுபவித்துக் களிக்கிறார்கள்.

॥ इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छङ्करभगवतः कृतौ
श्रीकनकधारास्तवः संपूर्णः ॥

ஸ்ரீ கனகதாரா ஸ்தவம் முற்றிற்று.

॥ शुभम् ॥

॥ श्री शीतलाष्टकम् ॥

ஸ்ரீ சீதலாஷ்டகம்

अस्य श्रीशीतलास्तोत्रस्य, महादेव ऋषिः, अनुष्टुप् छन्दः, शीतला देवता, लक्ष्मीर्बीजम्, भवानी शक्तिः, सर्वविस्फोटकनिवृत्तये जपे विनियोगः ॥

அஸ்ய ஸ்ரீ ஶீதலாஸ்தோத்ரமஹாமந்த்ரஸ்ய மஹாதேவ ருஷி:, அனுஷ்டுப் ச்சந்த:, ஶீதலா தேவதா, லக்ஷ்மீர் பீஜம், பவானீ ஶக்தி:, ஸர்வவிஸ்போடக நிவ்ருத்தயே ஜபே விநியோக: ॥

ईश्वर उवाच ஈச்வர உவாச:—பகவான் சொன்னார் (உபதேசித்தார்)

वन्देऽहं शीतलां देवीं रासभस्थां दिगम्बराम् ।
मार्जनीकलशोपेतां शूर्पालङ्कृतमस्तकाम् ॥ २ ॥

1. வந்தேஹம் ஶீதலாம் தேவீம் ராஸபஸ்தாம் திகம்பராம்.|
மார்ஜனீகலஶோபேதாம் ஶூர்பாலங்க்ருதமஸ்தகாம் ॥

रासभस्थां கழுதையிலமர்ந்திருப்பவளும், **दिगम्बरां** திசைகளை வஸ்திரமாகக் கொண்டவளும், **मार्जनीकलशोपेतां** துடப்பம், குடம் இவைகளோடு கூடியவளும், **शूर्पालङ्कृतमस्तकां** முறத்தால் அலங்கரிப்பட்ட சிரஸை உடையவளும் (முறத்தை சிரஸில் அலங்காரமாக வைத்திருப்பவளுமான) **शीतलां देवीं** ஶீதலா தேவியை **अहं वन्दे** நான் வணங்குகின்றேன்.

கருத்து :—நித்யமான மந்திரங்களைக் கண்டு பிடித்து வெளிப்படுத்துபவர் ரிஷி என்பர். இம்மந்திரத்திற்கோ தேவர்களுள் சிறந்த மஹாதேவனான ஈச்வரனே ரிஷியாவர். ஆகவே எல்லா மந்திரங்களுக்கும் இது சிறந்தது.

குறிப்பு :—இந்த ச்லோகத்தில் சீதலா தேவியினது உருவம் நன்கு கூறப்பட்டது. தேவியின் வாஹனம் கழுதை. எங்கும் பரவியிருப்பதால் திசைகளையே ஆடையாகக் கொண்டவள். துடப்பத்தையும் குடத்தையும் கையிலேந்தி, முறத்தைத் தலையில் தரித்திருப்பவள்.

वन्देऽहं शीतलां देवीं सर्वरोगभयापहाम् ।
यामासाद्य निवर्तेत विस्फोटकभयं महत् ॥ २ ॥

2. வந்தே'ஹம் ஶீதலாம் தேவீம் ஸர்வரோகபயாபஹாம் |
யாமாஸாத்ய நிவர்தேத விஸ்போடகபயம் மஹத் ||

महत् மிகப் பெரியதான **विस्फोटकभयं** வைசூரி என்பதால் ஏற்படுகிற பயமானது **यां** எந்த தேவியை **आसाद्य** அடைந்து (தேவியை தியானித்து இந்த மந்திரத்தை ஜபிப்பவனுக்கு) **निवर्तेत** அறவே அகன்றுவிடுமோ (அந்த) **सर्वरोगभयापहां** ஸகலவியாதியாலும் ஏற்பட்ட பயத்தை நீக்க வல்லவளான **शीतलां देवीं** சீதலா தேவியை **अहं वन्दे** நான் வணங்குகின்றேன்.

கருத்து :—தேவியை த்யானித்து இம்மந்திரத்தை ஜபிக்கிறவனுக்கு பொதுவாக எல்லாவித வ்யாதியும் நீங்குவதோடு விசேஷமாக வசூரி என்ற கொடிய வியாதி எளிதில் நீங்கும்.

शीतले शीतले चेति यो ब्रूयाद्दाहपीडितः ।
विस्फोटकभयं घोरं क्षिप्रं तस्य प्रणश्यति ॥ ३ ॥

3. ஶீதலே ஶீதலே சேதி யோ ப்ரூயாத்தாஹபீடித꞉ |
விஸ்ஃபோடகபயம் கோரம் க்ஷிப்ரம் தஸ்ய ப்ரணஶ்யதி ||

यः யாதொருவன் **दाहपीडितः** தாபத்தால்பீடிக்கப்பட்டவனாக இருக்கும்சமயம் **शीतले शीतले इति** சீதலாதேவியே! சீதலா தேவியே! என்று **ब्रूयात्** சொல்வானோ **तस्य** அவனுக்கு **क्षिप्रं** தாமதமின்றி **घोरं** கடுமையான **विस्फोटकभयं** வைசூரியினால் உண்டான பயம் **प्रणश्यति** முழுவதும் நீங்கிவிடுகிறது.

கருத்து :—எவன் சீதலா என்ற நாமாவை உச்சரிக்கிருனே அவனுடைய சரீரத்தில் உஷ்ணத்தால் ஏற்படும் வியாதிகளையும் கடுமையான வசூரி பயத்தையும் சீக்கிரத்தில் குளிர்ந்த சுபாவமுள்ள தேவி அறவே அழித்துவிடுகிருள்.

यस्त्वामुदकमध्ये तु धृत्वा पूजयते नरः ।
विस्फोटकभयं घोरं गृहे तस्य न जायते ॥ ४ ॥

4. யஸ்த்வாமுதகமத்யே து த்ருத்வா பூஜயதே நர꞉ |
விஸ்ஃபோடகபயம் கோரம் க்ருஹே தஸ்ய ந ஜாயதே ||

त्वां உன்னை **उदकमध्ये** ஜலத்தின் நடுவில் **धृत्वा** வைத்து (ஆவாஹனம் செய்து) **यः नरः** எந்த மனிதன் **पूजयते** (இம் மந்திரத்தால்) பூஜிக்கிருனே **तस्य** அவனுடைய **गृहे तु** வீட்டில்கூட **घोरं विस्फोटकभयं** வைஸூரியால் ஏற்படும் கடுமையான பயம் **न जायते** உண்டாகிறதில்லை.

கருத்து :—ஜலத்தின் நடுவில் ஸ்ரீ சீதளாதேவியை ஆவாஹனம் செய்து த்யானித்துப் பூஜிப்பவன், தன் வீட்டிலேயே வைசூரியின் கடுமையான பயம் நீங்கி குளிர்ச்சி ஏற்பட்டு சுகமடைகிருன். குளவி கொட்டுவதை நினைத்து அக்குளவியையே ஸதா தியானஞ் செய்துகொண்டிருக்கும் புழுவும் குளவியாவதுபோல ஜலத்தின் நடுவில் தேவியைப் பூஜிப்பவன் தியானத்தையொட்டி ஜல மத்யத்திலிருப்பவளுகி குளிர்ந்த நிலையையடைகிருன். இதுதான் உபநிடதங்களில் தத்க்ரது நியாயம் என்று ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

शीतले ज्वरदग्धस्य पूतिगन्धयुतस्य च ।
प्रनष्टचक्षुषः पुंसस्त्वामाहुर्जीवनौषधम् ॥ ५ ॥

5. ஶீதலே ஜ்வரதக்தஸ்ய பூதிகந்தயுதஸ்ய ச |
ப்ரனஷ்டசக்ஷுஷ꞉ பும்ஸஸ்த்வாமாஹுர்ஜீவனௌஷதம் ||

ज्वरदग्धस्य ஜ்வரதாபத்தால் எரிக்கப்பட்டவனை **पूति-गन्धयुतस्य** கெட்ட மணம் வீசும் நிலைமையை யடைந்தவனை **प्रनष्टचक्षुषः च** கண்களை யிழந்தவனை **पुंसः** (இவ்வித) மனித னுக்கு **शीतले** சீதலாதேவியே! **त्वां** உன்னை **जीवनौषधं** உயிர் தரும் மருந்தாக **आहुः** சொல்கிறார்கள்.

கருத்து :—ஜ்வரத்தால் தபிக்கிறவனை குளிரச் செய்வ தாலும், கெட்ட மணம் நிரம்பி, சீ ரத்தம் பெருகுகிறவனை கொப்பளங்களை அகற்றி நல்ல மணம் உள்ளவனாக ஆக்கு வதாலும், வைசூரி தாபத்தால் கண்ணிழந்தவனுக்குப் பார்க் கும் சக்தியைக்கொடுத்து அனுக்ரஹிப்பதாலும் ஸ்ரீ சீதலா தேவி உயிர்ப்பிக்கும் ஔடதமாக இருக்கிறாள்.

शीतले तनुजान्रोगान्नृणां हरसि दुस्त्यजान् ।
विस्फोटकविदीर्णानां त्वमेकाऽमृतवर्षिणी ॥ ६ ॥

6. ஶீதலே தநுஜாந்ரோகாந் ந்ருணாம் ஹரஸி துஸ்த்யஜாந் |
விஸ்ஃபோடகவிதீர்ணாநாம் த்வமேகாம்ருதவர்ஷிணீ ||

• **दुस्त्यजान्** எளிதில் விலக்க முடியாததும் **तनुजान्** சரீரத் துடன் பிறந்ததுமான **नृणां** மனிதர்களுடைய **रोगान्** பீடை களை **शीतले** சீதலாதேவியே! **हरसि** அகற்றுகிறாய். **विस्फोट-कविदीर्णानां** வைசூரியினால் ரணமேற்பட்டவர்களுக்கு **त्वं एका** நீ ஒருத்தியே! **अमृतवर्षिणी** அம்ருத மழையைப் பொழி கின்றாய்.

கருத்து :—ஸ்ரீ சீதலாதேவி நடுவில் ஏற்படுகிற வைசூரி ரோகத்தின் தாபத்தை நீக்கிக் குளிரச்செய்கிறாள் என்று மாத்திரமல்ல. பிறவியிலேயே கூடப் பிறந்தவைகளும் மற்ற ஔடத மந்திரங்களால் பரிஹரிக்க முடியாதவைகளுமான மற்ற ரோகங்களையும் நீக்கி மனிதர்களைக் களிக்கச் செய் கிறாள். ஜீர்ணமாகி பலமிழந்தவர்களை அமிருத மழைபெய்து பலவான்களாக்குகிறாள். தாபத்தால் காயம் மிகுந்தவர்களை

அமிருதபெருக்கால் புண்களை ஆற்றி தாபம் நீக்கிக் குளிரச் செய்கிருள். இவ்விதம் அனுக்ரஹம் செய்து காக்கும் தெய்வம் வேறு இல்லையானது பற்றி சீதலாதேவி நிகரற்றவள்.

गलगण्डग्रहा रोगा येचान्ये दारुणा नृणाम् ।
[1]त्वदनुध्यानमात्रेण शीतले यान्ति संक्षयम् ॥ ७ ॥

7. கலகண்டக்ரஹா ரோகா யேசாந்யே தாருணா ந்ருணாம் |
த்வதநுத்யாநமாத்ரேண ஶீதலே யாந்தி ஸம்க்ஷயம் ||

नृणां மானிடர்களுடைய **गलगण्डग्रहा रोगाः** கண்டமாலை என்பதுமுதலான வியாதிகளும், **दारुणाः** கடூரமான **अन्ये ये च रोगाः** மற்றுமுள்ள பலவியாதிகளும் **शीतले** சீதலா தேவியே! **त्वदनुध्यानमात्रेण** உன்னை அனுஸந்தானம் செய்த மாத்திரத்திலேயே **संक्षयं यान्ति** அடியோடு நாசமடைகின்றன.

கருத்து :—கழுத்தைச் சுற்றிவரும் கண்டமாலை முதலிய ரோகங்களையும், மற்ற கட்டி உருவமாகக் கிளம்பும் கடுமையான பிணிகளையும், தன்னை த்யானித்த மாத்திரத்தாலேயும் இம்மந்த்ரஜபத்தாலேயும் அறவே ஒழித்து சுகந்தருகிருள் சீதலாதேவி. மற்ற துதிகளில் பாதாரவிந்தத்தைப்பற்றிச் சொல்லாமல் சீதலா தேவியைப்பற்றியே சொல்லியிருப்பதால் இங்கு "अनुध्यान" என்ற பாடமே பொருத்தமானது. த்யான மாத்ரத்தில் ரோகங்கள் அறவே அழிகின்றன என்றதால், சீதலாதேவியின் ப்ரயத்னமில்லாமலே பிணிகள் பயந்து வெகுதூரம் ஓடி ஒளிகின்றன என்பது.

न मन्त्रं नौषधं तस्य पापरोगस्य विद्यते ।
त्वामेकां शीतले धात्रीं नान्यां पश्यामि देवताम् ॥ ८ ॥

8. ந மந்த்ரம் நௌஷதம் தஸ்ய பாபரோகஸ்ய வித்யதே |
த்வாமேகாம் ஶீதலே தாத்ரீம் நான்யாம் பஶ்யாமி தேவதாம் ||

---

1 "त्वदङ्घ्रिध्यानमात्रेण" என்றும் பாடம்.

तस्य पापरोगस्य யாவருமறிந்த தீவினைப் பயனாகிய அந்த பீடைக்கு **मन्त्रं न** (பரிஹாரமான) மந்திரமும் இல்லை. **न औषधं विद्यते** மருந்துமில்லை. **शीतले** சீதலாதேவியே! **त्वां एकां** ஒப்பற்ற உன்னையே **धात्रीं** செவிலித்தாயாக **पश्यामि** அறிகின்றேன். **अन्यां देवतां** மற்ற எந்ததேவதையையும் **न पश्यामि** அறிவேன் இல்லை.

கருத்து :—தாய் குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு செவிலித்தாய் அக்குழந்தையைப் பிணிகள் நீக்கி, தகுந்த உணவூட்டி வளர்ப்பதுபோல, பிறந்த பிறகு உலகத்திலிருக்கும் மானிடர்கள் யாவற்றையும், மணிமந்த்ர ஔடதங்களால் பரிஹாரஞ்செய்ய இயலாத பிணிகள் யாவற்றையும் அவ்வப்போது நீக்கித்தகுந்த அமுத மழை பொழிந்து வளர்ப்பவள் சீதலாதேவி யொருவளே.

मृणालतन्तुसदृशीं नाभिहृन्मध्यसंस्थिताम् ।
यस्त्वां संचिन्तयेद्देवि तस्य मृत्युर्न जायते ॥ ९ ॥

9. ம்ருணாலதந்துஸத்ருஶீம் நாபிஹ்ருந்மத்யஸம்ஸ்திதாம் |
யஸ்த்வாம் ஸஞ்சிந்தயேத்தேவி தஸ்ய ம்ருத்யுர்ந ஜாயதே ||

•**देवि** சீதலாதேவியே! **मृणालतन्तु-सदृशीं** (வெண்மையில்) தாமரைத்தண்டு நூலையொத்தவளாகவும், **नाभिहृन्मध्य-संस्थितां** நாபிகமல, ஹ்ருதயகமலங்களின் நடுவில் இருப்பவளாகவும் **त्वां** உன்னை **यः संचिन्तयेत्** யாதொருவன் நிலைத்த மனதுடன் தியானிப்பானோ **तस्य** அவனுக்கு **मृत्युः** (அகால மரணம்) **न जायते** ஏற்படுகிறதில்லை.

கருத்து:—உந்தி என்ற அவயவத்திலிருந்து ஹ்ருதய புண்டரிகம் வரையிலுள்ள நடுப்ரதேசத்தில் தாமரைத் தண்டு நூல்போல ஸூக்ஷ்மமாக விற்றிருப்பவளாக ஸ்ரீசீதலா தேவியை த்யானிக்கவேண்டும். அகால மரணம் நீங்குவது அதன் பயன்.

குறிப்பு :—மேற்கண்ட எட்டு ச்லோகங்கள் "சீதலாஷ்டகம்" என்று கூறப்படும். இந்த ஒன்பதாவது ச்லோகம் அதன் பலச்ருதி ரூபமானது. பின்னும் சில பலச்ருதிகள் கூறப்பட்டுள்ளன.

अष्टकं शीतलादेव्या यो नरः प्रपठेत्सदा ।
विस्फोटकभयं घोरं गृहे तस्य न जायते ॥ १० ॥

10. அஷ்டகம் ஶீதலாதேவ்யா யோ நர: ப்ரபடேத்ஸதா |
விஸ்போடகபயம் கோரம் க்ருஹே தஸ்ய ந ஜாயதே ||

शीतलादेव्याः சீதலாதேவியினுடைய **अष्टकं** அஷ்டகத்தை (இந்த மந்திரபாகத்தை) **सदा** இடைவிடாது **यो नरः** எந்த மனிதன் **प्रपठेत्** (அன்னை த்யானித்து) ஜபிக்கிறானோ **तस्य** அவனுடைய **गृहे** வீட்டில் **घोरं विस्फोटकभयं** வசூரியினால் உண்டாகிற பெரும்பயம் **न जायते** உண்டாகிறதில்லை.

கருத்து :—பலச்ருதி உள்பட ஆயிரம் நாமாக்கள் ஸஹஸ்ரநாமம் என்று கூறப்படுவதுபோல பலச்ருதியான ஒன்பதாவது ச்லோகம் உள்பட சீதலாஷ்டகம் என்று இங்கு கூறப்படுகிறது. இதனால் அந்தந்த மந்த்ரங்கள் பல ச்ருதியுடன் ஜபிக்கப்படவேண்டும். இல்லையேல் பலமளிப்ப தாக ஆகாது என்பது தெரிவிக்கப்படுகிறது. "**प्रपठेत्**" என்று **प्र** உபஸர்க்கத்தால் "ஜபிப்பவன் பயம், ஜபத்தால் நீங்கும், தியானித்து ஜபிப்பதால் வீட்டிலுள்ளவர்கள் அனை வர்களின் பயம் நீங்கும்" என்பது.

श्रोतव्यं पठितव्यं च श्रद्धाभक्तिसमन्वितैः ।
उपसर्गविनाशाय परं स्वस्त्ययनं महत् ॥ ११ ॥

11. ஶ்ரோதவ்யம் படிதவ்யம் ச ஶ்ரத்தாபக்திஸமன்விதை: |
உபஸர்கவிநாஶாய பரம் ஸ்வஸ்த்யயனம் மஹத் ||

परं महत् மிகச் சிறப்புவாய்ந்ததும் **स्वस्त्ययनं** மங்கள மளிப்பதுமான (இந்த மந்திரமானது) **उपसर्गविनाशाय** எல்லா வித பீடைகளும் நீங்குவதற்காக **श्रद्धा भक्तिसमन्वितैः** ச்ரத்தை பக்தி இவைகளோடுகூடி (அனைவராலும்) **श्रोतव्यं** ச்ரவணம் செய்யத் தகுந்தது **पठितव्यंच** படனமும் செய்யத்தக்கது.

கருத்து :—கஷ்டங்களை நீக்கிச் சிறந்த க்ஷேமத்தை யளிப்பது இத்துதி. பிணியால் வருந்துகிறவர்கள் இம்மந்திரத்தை ஜபிக்கவேண்டும், ஜபிக்கச் சக்தியற்றவர்கள், பிறரை ஜபிக்கச்செய்து ச்வரணம் செய்யவேண்டும். ஜபிப்பவர்களுக்கு பக்தியும் ச்ரத்தையும் இருக்கவேண்டியது முக்யம்.

குறிப்பு—परं स्वस्ति மோக்ஷஸுகத்தையும் அருளிக் களிக்கச் செய்யவல்லமையுள்ளது இம்மந்திரம்.

शीतले त्वं जगन्माता शीतले त्वं जगत्पिता ।
शीतले त्वं जगद्धात्री शीतलायै नमो नमः ॥ १२ ॥

12. ஶீதலே த்வம் ஜகன்மாதா ஶீதலே த்வம் ஜகத்பிதா |
ஶீதலே த்வம் ஜகத்தாத்ரீ ஶீதலாயை நமோ நம: ||

शीतले சீதலாதேவியே! त्वं जगन्माता நீயே உலகத் தன்னை. शीतले சீதலாதேவியே! त्वं जगत्पिता நீயே உலகத் தந்தை. शीतले சீதலாதேவியே! त्वं जगद्धात्री நீயே உலகத்தின் செவிலித்தாய். शीतलायै नमो नमः (அந்த)சீதலா தேவிக்கு நமஸ்காரம் நமஸ்காரம்.

கருத்து :—தாவர ஜங்கமம் என்று வழங்கப்படும் ப்ராணிவர்க்கங்களுக்கு சீதலாதேவியே அன்னையும் தந்தையும் செவிலித்தாயுமாவள். குளிர்ந்த முகம்படைத்து மூவ்வடிவமாயுள்ள அந்த சீதலாதேவியை அடிக்கடி வணங்குகிறேன்.

रासभो गर्दभश्चैव खरो वैशाखनन्दनः ।
शीतलावाहनश्चैव दूर्वाकन्दनिकृन्तनः ॥ १३ ॥
एतानि खरनामानि शीतलाग्रे तु यः पठेत् ।
तस्य गेहे शिशूनां च शीतलारुङ् न जायते ॥ १४ ॥

13. ராஸபோ கர்தபஶ்சைவ கரோ வைஶாகநந்தந: |
ஶீதலாவாஹனஶ்சைவ தூர்வாகந்தநிக்ருந்தன: ||

14. ஏதாநி கரநாமாநி ஶீதலாக்ரே து ய: படேத் |
தஸ்ய கேஹே ஶிஶூநாம் ச ஶீதலாருங் ந ஜாயதே ||

रासभः ராஸப: **गर्दभः** கர்தப: **खरः** கர: **वैशाखनन्दनः** வைசாகநந்தன: **शीतलावाहनः** சீதலாவாஹன: **दूर्वाकन्दनिकृन्तनः** தூர்வாகந்தநிக்ருந்தன: **एतानि खरनामानि** என்ற இந்த(சீதலா தேவியின் வாஹனமான) கழுதையின் நாமாக்களை **शीतलाग्रे** சீதலாதேவியின் முன்னிலையில் **यः तु पठेत्** எவன் சொல்வானோ **तस्य** அவனுடைய **गेहे** வீட்டில் **शिशूनां च** குழந்தைகளுக்கும் **शीतला रुक्** குளிர் ஜ்வரம் (ஜன்னி முதலான வியாதி) **न जायते** உண்டாகிறதில்லை.

கருத்து :—சீதலாதேவியின் வாஹனம் கழுதை. பரிவார தேவதைகளின் ப்ரஸாதம்போல வாஹனத்தின்ப்ரஸாதமும், சீக்கிரம் வந்து அநுக்ரஹிப்பதற்கு அவச்யமானதால் வாஹனஸ்துதியாக ஆறு நாமாக்கள் கூறப்படுகின்றன. பிறகு "குழந்தைகளுக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் பிணி நீங்குகிறது" என்று பலச்ருதி கூறப்படுகிறது.

शीतलाष्टकमेवेदं न देयं यस्य कस्यचित् ।
दातव्यं च सदा तस्मै श्रद्धाभक्तियुताय वै ॥ १५ ॥

15. சீதலாஷ்டகமேவேதம் ந தேயம் யஸ்ய கஸ்யசித் ।
தாதவ்யம் ச ஸதா தஸ்மை ச்ரத்தாபக்தியுதாய வை ॥

इदं शीतलाष्टकम् இந்தப் (புனிதமான) சீதலாஷ்டகம் என்ற மந்திரத்தை **यस्य कस्यचित्** முன்பின் அறியப்படாதவனுக்கு **नैव देयं** உபதேசிக்கவே கூடாது. **सदा श्रद्धाभक्तियुताय तस्मै वै** எப்பொழுதும் ச்ரத்தை பக்தி இவைகளோடுகூடியவனுக்கே **दातव्यं** உபதேசிக்கவேண்டும்.

கருத்து :—"**नाभक्ताय कदाचन**" என்றபடி பக்தியில்லாததகாதவனுக்கு இம்மந்திரத்தைச் சொல்வதும், பக்தி ச்ரத்தை நிரம்பி விரும்புகிறவனுக்குச் சொல்லாமல் ஒளிப்பதும் கூடாது.

॥ श्री शीतलाष्टकं समाप्तम् ॥

ஸ்ரீ சீதலாஷ்டகம் முற்றுப்பெற்றது.

॥ श्री कामाक्षीस्तोत्रम् ॥

ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்திரம்

काञ्चीनूपुररत्नकङ्कणलसत्केयूरहारोज्ज्वलां
काश्मीरारुणकञ्चुकाञ्चितकुचां कस्तूरिकाचर्चिताम् ।
कह्लाराञ्चितहस्तयुग्मलसितां कारुण्यकल्लोलिनीं
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ १ ॥

1, காஞ்சீநூபுரரத்னகங்கணலஸத்கேயூரஹாரோஜ்ஜ்வலாம்
காஶ்மீராருணகஞ்சுகாஞ்சிதகுசாம் கஸ்தூரிகாசர்சிதாம் |
கஹ்லாராஞ்சிதஹஸ்தயுக்மலஸிதாம் காருண்யகல்லோலினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ||

काञ्चीनूपुर-रत्नकङ्कण-लसत्केयूर-हारोज्ज्वलां ஒட்டியாணம், பாதக்சிலம்பு, ரத்னங்கள் இழைத்த கைவளைகள், ஒளிக்கின்ற தோள்வளைகள், முத்தாரம் இவைகளால் ப்ரகாசிப்பவளும், **काश्मीरारुण-कञ्चुकाञ्चित कुचां** குங்குமம்போல சிவந்த ரவிக்கையால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தனங்களை உடையவளும், **कस्तूरिकाचर्चितां** கஸ்தூரிக் குழம்பால் பூசப்பட்டவளும், **कह्लाराञ्चित-हस्तयुग्म-लसितां** இரு கைகளிலும் செங்கழுநீர் புஷ்பங்களை ஏந்திக்கொண்டு விளங்குபவளும், **कारुण्यकल्लो-लिनीं** கருணையாகிய அலைமோதும் கடல் போன்றவளும், **कल्पलतिकां** கற்பகக்கொடி போன்றவளும், **काञ्चीपुरीदेवतां** காஞ்சிமா நகரத்து அதிஷ்டான தேவதையுமான **कामाक्षीं** (கடாக்ஷ மாத்திரத்திலே பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்றும்) காமாக்ஷீ தேவியை **कलयामि** த்யானிக்கின்றேன்.

कामारातिमनःप्रियां कमलभूसेव्यां रमाराधितां
कन्दर्पाधिकदर्पदानविलसत्सौन्दर्यदीपाङ्कुराम् ।
कीरालापविनोदिनीं भगवतीं काम्यप्रदानव्रतां
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ २ ॥

2. காமாராதிமனஃப்ரியாம் கமலபூ⁴ஸேவ்யாம் ரமாராதி⁴தாம்
கந்த³ர்பாதி⁴கத³ர்பதா³னவிலஸத்ஸௌந்த³ர்யதீ³பாங்குராம் |
கீராலாபவினோதி³னீம் ப⁴க³வதீம் காம்யப்ரதா³னவ்ரதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதே³வதாம் ||

कामाराति मनः·प्रियां மாரனை வென்றவனுடைய மனதிற்கும் ப்ரியமானவளும், **कमलभूसेव्यां** தாமரையினின்று பிறந்த ப்ரம்மனால் ஸேவிக்கத் தகுந்தவளும், **रमाराधितां** லக்ஷ்மியினால் பூஜிக்கப்படுகிறவளும், **कन्दर्पाधिकदर्प-दान-विलसत्सौन्दर्य-दीपाङ्करां** மன்மதனுக்கும் அதிகமான கொழுப்பைக் கொடுத்து விளங்குகிற அழகாகிய விளக்கின் முனை (சுடர்) போல் ப்ரகாசிப்பவளும், **कीरालपविनोदिनीं** கிளியோடு பேசுவதில் ஆவல் கொண்டவளும், கிளிபோல் பேசுவதால், ஆனந்த மளிப்பவளும், **भगवतीं** எல்லாவித ஐச்வர்யம் பெற்றவளும் **काम्यप्रदानव्रतां** பக்தர்களின் இஷ்டத்தை நிறைவேற்றுவதில்நியமம் கொண்டவளும், [**कल्पलतिकां—कलयामि**] கற்பகக்கொடி போன்றவளும், காஞ்சிமா நகரத்து தேவதையுமான காமாக்ஷியை த்யானம் செய்கின்றேன்.

कादम्बप्रमदां विलासगमनां कल्याणकाञ्चीरवां
कल्याणाचलपादपीठलसितां कान्त्या स्फुरन्तीं शुभाम् ।
कल्याणाचलकार्मुकप्रियतमां कादम्बमालाश्रयां
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ३ ॥

3. காத³ம்ப³ப்ரமதா³ம் விலாஸக³மனாம் கல்யாணகாஞ்சீரவாம்
கல்யாணாசலபாத³பீட²லஸிதாம் காந்த்யா ஸ்பு²ரந்தீம் ஶுபா⁴ம் |
கல்யாணாசலகார்முகப்ரியதமாம் காத³ம்ப³மாலாஶ்ரயாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதே³வதாம் ||

कादम्बप्रमदां கதம்ப புஷ்பத்தின் மதுவை பானம் செய்து மதம் நிரம்பியவளும், **विलासगमनां** அழகிய நடையையுடையவளும், **कल्याणकाञ्चीरवां** மங்களத்தைச் சொல்லுகிற ஒட்டியாணத்தின் சப்தத்தை உடையவளும், **कल्याणाचलपादपीठलसितां** மங்களத்திற்கு இருப்பிடமான மலையை (கைலயகிரியை) பாத பீடமாகக் கொண்டு ப்ரகாசிப்பவளும், **कान्त्या शुभां स्फुरन्तीं** தேஹ ஒளியால் மங்களத்தை யளிக்கும் வடிவமாக விளங்குகிறவளும், **कल्याणाचल-कार्मुक-प्रियतमां** ஸகல மங்களத்தைக் கொடுக்கின்ற மேருவை வில்லாகக் கொண்ட சிவனது காதலியும், **कादम्बमालाश्रयां** கதம்பமாலையை அணிந்தவளும், **कल्पलतिकां—कलयामि** ॥

கருத்து :—தேவி தன் ஒட்டியாணத்திலுள்ள சலங்கைகளுடைய சப்தத்தின் வாயிலாக பக்தர்களுக்கு அபயம், "எங்கும் மங்களம் பொங்குக" என்பதைச் சொல்லுகிருள் போலும். பெயரிலேயே மங்களத்தை யளிக்கும் சிவனது (சிவம், மங்களம்) வாஸஸ்தானமானதால் கைலயகிரியையும், தேவதைகளுக் கிருப்பிடமானதால் ஸ்வர்ணமயமான மேருவையும் कल्याणाचल என்று சொல்லி யிருக்கிருர்.

गन्धर्वामरसिद्धचारणवधूध्यानापदानाञ्चितां
गौरीं कुङ्कुमपङ्कपङ्कितकुचद्वन्द्वाभिरामां शुभाम् ।
गम्भीरस्मितविभ्रमाञ्चितमुखीं गङ्गाधरालिङ्गितां
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ४ ॥

4. *கந்தர்வாமரஸித்தசாரணவதூத்யாநாபதாநாஞ்சிதாம்*
கௌரீம் குங்குமபங்கபங்கிதகுசத்வந்த்வாபிராமாம் சுபாம் |
கம்பீரஸ்மிதவிப்ரமாஞ்சிதமுகீம் கங்காதராலிங்கிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ॥

गन्धर्वामर-सिद्ध-चारणवधूध्यानापदानाञ्चितां கந்தர்வ, தேவ, ஸித்த, சாரண என்ற தேவமாந்தர்களுடைய த்யா

னத்திற்கும் விஷயமான சரித்திரங்களை யுடையவளும், **गौरीं** சுத்த ஸத்வரூபியும், **कुङ्कुमपङ्कपङ्कित-कुचद्वन्द्वाभिरामां** குங்குமக் குழம்பால் பூசப்பட்ட இரு ஸ்தனங்களால் அழகு பெற்ற வளும், **शुभां** மங்களரூபியும், **गम्भीरस्मितविभ्रमाङ्कितमुखीं** கௌரவம் பெற்ற புன்முறுவலின் விப்ரமத்தால் எழில் பெற்ற முகமுடையவளும், **गङ्गाधरालिङ्गितां** கங்கையை முடியி லணிந்த சிவனால் ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்ட வளும், **कल्पलतिकां—कलयामि** ॥

கருத்து:—தேவ ஸ்திரீகள், அம்ருதபானம் செய்த பர்த்தா முதலான ஸகல பாக்யம் பெற்றிருந்தும் அதை நிலை யுற்றதாகச் செய்வதற்கு அவர்களும் தேவியை துதிக்கின்ற னர். கங்கா என்பவளை முடியில் அணிந்தும் தேவியையே தழுவுகிறார். அந்தோ தேவியினது ஸௌபாக்யத்தின் பெருமை!

विष्णुब्रह्ममुखामरेन्द्रपरिषत्कोटीरपीठस्थलां
लाक्षारञ्जितपादपद्मयुगलां राकेन्दुबिम्बाननाम् ।
वेदान्तागमवेदवेद्यचरितां विद्वज्जनैरावृतां
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ५ ॥

5\. விஷ்ணுப்ரஹ்மமுகாமரேந்த்ர பரிஷத்கோடீரபீடஸ்தலாம்
லாக்ஷாரஞ்ஜிதபாதபத்மயுகளாம் ராகேந்து பிம்பானனாம் ।
வேதாந்தாகமவேதவேத்யசரிதாம் வித்வஜ்ஜனைராவ்ருதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ॥

विष्णु-ब्रह्म-मुखामरेन्द्र-परिषत्-कोटीर-पीठस्थलां விஷ்ணு ப்ருஹ்மா முதலான அமரக்கூட்டத்தின் கிரீடங்களை (தனது) பாதபீடமாகப் பெற்றவளும், **लाक्षारञ्जितपादपद्मयुगलां** செம்

பஞ்சுக் குழம்பினால் செம்மையைப் பெற்ற இரு திருவடித் தாமரையை யுடையவளும், राकेन्दुबिम्बाननां பௌர்ணமி சந்திரனது வடிவத்தை யொத்த முகமண்டலத்தை யுடையவளும், वेदान्तागमवेद्यचरितां வேதம் வேதாந்தம் ஆகமம் முதலான சாஸ்திரங்களால் அறியக்கூடிய சரித்திரம் பெற்றவளும், विद्वज्जनैरावृतां ஞானிகளால் சூழப்பெற்றவளும், कल्पलतिकां—कलयामि ॥

माकन्दद्रुममूलदेशमहिते माणिक्यसिंहासने
दिव्यां दीपितहेमकान्तिविलसद्वस्त्रावृतां तां शुभाम् ।
दिव्याकल्पितदिव्यदेहभरितां दृष्टिप्रमोदान्वितां
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ६ ॥

6. மாகந்த்ருமமூலதேஶமஹிதே மாணிக்யஸிம்ஹாஸனே
திவ்யாம் தீபிதஹேமகாந்திவிலஸத்வஸ்த்ராவ்ருதாம் தாம் ஶுபாம் |
திவ்யாகல்பிததிவ்யதேஹபரிதாம் த்ருஷ்டிப்ரமோதாந்விதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ||

माकन्दद्रुम-मूलदेश-महिते மாமரத்தின் அடியில் ப்ரகாசிக்கின்ற, माणिक्यसिंहासने ரத்னங்களால் இழைக்கப்பெற்ற சிங்காதனத்தில் दिव्यां அமர்ந்து ப்ரகாசிப்பவளும், दीपितहे-मकान्तिविलसद्वस्त्रावृतां காய்ச்சப்பட்ட பொன்னின் காந்தியை யுடைய மஞ்சளாடை தரித்தவளும், तां शुभां எல்லோருக்கும் மங்கள மூர்த்தியாகி அபூர்வமாக விளங்குபவளும், दिव्याक-ल्पितदिव्यदेहभरितां தேவமாந்தர்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மேனியுள்ளவளும், दृष्टिप्रमोदान्वितां கடாக்ஷமாத்திரத்தில் அதிக ஆனந்தத்தை யளிப்பவளும், कल्पलतिकां—कलयामि ॥

आधारादिसमस्तचक्रनिलयाम् आद्यन्तशून्यामुमाम्
आकाशादिसमस्तभूतनिवहाकारामशेषात्मिकाम् ।
योगीन्द्रैरपि योगिनीशतगणैराराधितामम्बिकां
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ७ ॥

7. ஆதாராதிஸமஸ்தசக்ரநிலயாம் ஆத்யந்தசூன்யாமுமாம்
ஆகாசாதிஸமஸ்தபூதநிவஹாகாராமசேஷாத்மிகாம் |
யோகீந்த்ரைரபி யோகினீசதகணைராராதிதாமம்பிகாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ||

आधारादिसमस्तचक्रनिलयां மூலாதாரம் முதலிய ஆறு சக்ரங்களையுமிருப்பிடமாகக் கொண்டவளும், **आद्यन्तशून्यां** ஆதி (உத்பத்தி) அந்தம் (அழிவு) என்பது அற்றவளும், **उमां** ப்ரும்மவித்யா ரூபிணியும், **आकाशादिसमस्तभूतनिवहाकारां** ஆகாயம் முதலான பஞ்ச பூதங்களின் கூட்டத்தை உருவமாகக் கொண்டவளும், **अशेषात्मिकां** (அதனால் உண்டாகிய) தாவரஜங்கம ரூபமாயிருப்பவளும், **योगीन्द्रैः** சிறந்த யோகிகளாலும், **योगिनीशतगणैः** நூற்றுக் கணக்கான யோகினி கணங்களாலும், **आराधितां** தியானித்து ஸேவிக்கப்படுகிறவளும், **अम्बिकां** ஜகன்மாதாவும், **कल्पलतिकाम्—कलयामि** ॥

ह्रींकारप्रणवात्मिकां प्रणमतां श्रीदानविद्यामयीं
ऐं क्लीं सौः रुचिमन्त्रमूर्तिनिवहाकारामशेषात्मिकाम् ।
ब्रह्मानन्दरसानुभूतिमहितां ब्रह्मप्रियंवादिनीम्
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ८ ॥

8. ஹ்ரீங்காரப்ரணவாத்மிகாம் ப்ரணமதாம் ஸ்ரீதானவித்யாமயீம்
ஐம் க்லீம் ஸௌம் ருசிமந்த்ரமூர்த்திநிவஹாகாராமசேஷாத்மிகாம் |
ப்ரஹ்மானந்தரஸானுபூதிமஹிதாம் ப்ரஹ்மப்ரியம்வாதினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ||

ह्रीङ्कारप्रणवात्मिकां ஓங்கார ரூபமாயும் ஹ்ரீம் ரூபமாயும் இருப்பவளும், **प्रणमतां** மந்திரத்தை அனுஸந்தானம் செய்து அடி பணிபவர்களுக்கு **श्रीदानविद्यामयीं** ஸகல செல்வத்தை அளிக்கவல்லவளான ஸ்ரீ வித்யாரூபிணியும், **ऐं क्लीं सौं** ஐம் க்லீம், ஸௌம் **रुचिमन्त्रमूर्तिनिवहाकारां** (என்று) காந்திவாய்ந்த மந்திரங்களின் அமைப்பை தன் உருவமாகக்கொண்டவளும் **अशेषात्मिकां** ஸர்வஜகத்ரூபிணியும், **ब्रह्मानन्दरसानुभूतिमहितां** ப்ரும்மானந்தத்தின் ரஸானுபவத்தால் மஹிமை பெற்றிருப்பவளும், ப்ரும்மானந்த அனுபவமாகிய மஹிமை பெற்றவளும், **ब्रह्मप्रियंवादिनीं** ப்ரியத்தை சொல்வதில் வேதத்தையொத்திருப்பவளும், **कल्पलतिकां—कलयामि** ॥

सिद्धानन्दजनस्य चिन्मयसुखाकारां महायोगिनीं
मायांविश्वविमोहिनीं मधुमतीध्येयां शुभां ब्राह्मणीम् ।
ध्येयां किन्नरसिद्धचारणवधूध्येयां सदा योगिभिः
कामाक्षीं कलयामि कल्पलतिकां काञ्चीपुरीदेवताम् ॥ ९ ॥

9. ஸித்தானந்த ஜனஸ்ய சிந்மயஸுகாகாராம் மஹாயோகினீம்
மாயாம் விச்வவிமோஹினீம் மதுமதீத்யேயாம் ஶுபாம் ப்ராஹ்மணீம் ।
த்யேயாம் கின்னரஸித்தசாரணவதூத்யேயாம் ஸதா யோகிபிஃ
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம் காஞ்சீபுரீதேவதாம் ॥

सिद्धानन्दजनस्य ஸித்திபெற்ற ஆனந்தத்தை யனுபவிக்கின்ற ஞானிக்கு **चिन्मयसुखाकारां** தத்வஞான வடிவாயும், நித்ய ஸுக ரூபமாகவும் தோன்றுபவளும், **महायोगिनीं** சிறந்த யோகம் பெற்றவளாக யிருந்துகொண்டு **योगिभिः ध्येयां** யோகிகளுடைய த்யானத்திற்கு விஷயமானவளும், **मायां** மாயா ரூபமாக (இருந்து) **विश्वविमोहिनीं** உலகனைத்தும் மோஹிக்கச் செய்பவளும், **मधुमतीध्येयां** இனிமையான

வாக்குகளால் புகழப்படுகிறவளும், **शुभां ब्राह्मणीं** ஸர்வ மங்களத்தையும் கொடுக்கும் பரப்ருமம ரூபிணியும், மங்கள ரூபமாய் ப்ருமமானந்தத்தில் மூழ்கி இருப்பவளும், **सदा किन्नरसिद्धचारणवधूध्येयां** இடைவிடாது கின்னர, ஸித்த, சாரண ஸ்திரீகளால் புகழப்படுகிறவளும் **कल्पलतिकां—कलमायि** ॥

कामारिकामां कमलासनस्थां काम्यप्रदां कङ्कणभूषहस्ताम् ।
काञ्चीनिवासां कनकप्रभासां कामाक्षिदेवीं कलयामि चित्ते ॥१०

10. காமாரிகாமாம் கமலாஸனஸ்தாம்
காம்யப்ரதாம் கங்கணபூஷஹஸ்தாம் ।
காஞ்சிநிவாஸாம் கனகப்ரபாஸாம்
காமாக்ஷிதேவீம் கலயாமி சித்தே ॥

कामारिकामां மாரனை வென்ற மஹேச்வரனையும் மயங்கச் செய்தவளும், **कमलासनस्थां** (சக்ரங்கள் என்ற) தாமரையில் வீற்றிருப்பவளும், **काम्यप्रदां** விரும்பிய வரனை யளிப்பவளும், **कङ्कणभूषहस्तां** கைகளில் வளைகளால் அலங்கரிக்கப்பெற்றவளும், **कनकप्रभासां** செம்பொன்னிறமானவளும், **काञ्चीनिवासां** காஞ்சியில் குடி கொண்டிருப்பவளுமான **कामाक्षिदेवीं** ஸ்ரீ காமாக்ஷி தேவியை **चित्ते** மனதில் **कलयामि** தியானிக்கின்றேன்.

॥ इति श्रीमदप्रौढभक्तविरचितं कामाक्षीस्तोत्रं संपूर्णम् ॥

ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்திரம் முற்றிற்று.

॥ शुभम् ॥

விஞ்ஞாபனம்.

ஆஸ்திகர்கள் அனைவரையும் வைதிக மார்க்கத்திலே பற்றுடையவர்களாயும் பகவானிடத்து பக்தி மிகுந்தவர்களாயும் சிரத்தையுடையவர்களாயும் செய்வதற்கு அனுகுணமாக, நமது ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளால் ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம் என்ற ஸ்தாபனம் ஒன்று இவ்வாண்டிலே தொடங்கப் பெற்றுள்ளது யாவரும் அறிந்ததே.

ஸ்ரீ ஆசார்யர்கள் சில ஆண்டுகளாக ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்தை எல்லோரும் பிரதினம் செய்துவரவேண்டுமென்று ஆஜ்ஞைசெய்து வருகிறார்கள். அதன்படி பாராயணஞ் செய்து, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை மனப்பாடமாக்கிக் கொண்டவர்கள் "மேலே என்ன செய்வது?" என்று ஸ்ரீ ஆசார்யர்கள் ஆஜ்ஞையிட வேண்டும் என்றபோது, ஸ்ரீ ஆசார்யர்கள் உபதேசித்ததாவது :

"ஸஹஸ்ரநாம பாராயணத்தால் உங்களுக்கு வாக் சுத்தியும் ஈச்வர கிருபையும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றோடு சிறிது தேவ பாஷா ஞானமும் ஏற்பட்டால், மேற்கொண்டு புண்ய நூல்களைப் பார்த்து நற்கதி யடைய ஸௌகர்யமாக இருக்கும். அதற்குப் பண்டிதர்கள் அகப்படாத இடங்களில், தமிழிலே பதவுரை பொழிப்புரைகள் எழுதப்பெற்றதாய்க் கோசஸ்தானத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பஜ கோவிந்தம் என்னும் நூலைத் தாமாகவே அர்த்தத்துடன் பாடமாக வாசித்து நெட்டுருச் செய்யவேண்டும். 'பஜ கோவிந்தம்' முடிந்த பிறகு, கோசஸ்தானத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ஸதாசிவ ப்ரம்மேந்திராள் ஸ்தோத்திர புஸ்தகத்தை அவ்விதமே பாடம் செய்ய வேண்டும். அதனை அடுத்து, லோஷ்ட தேவருடைய திஜக்ரந்தனம் என்னும் புஸ்தகத்தை அவ்விதமே பாடம் செய்யவேண்டும். அதற்குப் பிறகு, ஆதி ஆசார்ய ஸ்வாமிகளுடைய விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரத்தைப் பாடம் செய்யவேண்டும். அதற்கும் பிறகு அநேகமாய்ப் பாஷா வ்யுத்பத்தி ஏற்பட்டுவிடுமாதலால், ஸஹஸ்ரநாம பாஷ்யத்தைப் படித்து அதன் பொருளை அறிந்துகொள்ள வேண்டும்."

—காமகோடி, 1—10—'43.

இதற்குமேல், கோசஸ்தானத்திலிருந்து வெளியிடும் புதிய புத்தகங்களையும் அப்போதைக்கப்போது தருவித்து அர்த்தத்துடன் பாடம் செய்து, நலம் அடையவேண்டியதைப்பற்றி அதிகம் சொல்லவும் வேண்டுமா!

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், கும்பகோணம்.